
www.tamilarangam.net

ஏப்ரல் 1997

# எரிமலை



www.tamilarangam.net




## அக்கறைப் பூக்கள்

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு;

எரிமலை தற்போது புதுவடிவமைப்புடனும், புதுப் பொலிவுடனும் வெளிவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன் வெளியீட்டிற்காக உழைக்கும் அனைவருக்கும் எமது நன்றிகள். மார்ச் மாத வெளியீட்டில் பெண்கள் பற்றிய செய்திகள் உணர்வுபூர்வமாக இருந்தது. 'விடிவிற்காய் எழுவோம்' என்ற மேஜர் பாரதியின் கவிதை நன்றாக இருந்தது.

பெண் விடுதலைப் போராட்டம் பற்றிய விழிப்புணர்வு பெண்கள் மத்தியில் முன்னென்றுமில்லாத அளவிற்கு இன்று ஆழ்ந்து வேரோடியுள்ளதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இன்று தமிழீழத்தில் துப்பாக்கி ஏந்தி எதிரியுடன் தாக்குதல் புரியும் பெண்மையின் தீரமிகு வீரமும், மதிப்பிலடங்கா ஈகமும் அழியாத காவியமாக விளங்குகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றது; ஊரறிய, உலகறிய என்பதைவிட மானுடம் வாழும் இடமெங்கும் அறிய, இன்று எமது வரலாற்றில் வரையப்பட்டுக் கொண்டிருக்கும் வீரகாவியமாகத் திகழ்கின்றது. குறுகிய காலத்திற்குள் தம்மை எவ்வளவு வேகமாகவும், உறுதியாகவும் வளர்த்துள்ளார்கள் என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. இவர்களுடைய கடினமான பயிற்சியும், தளராத மனஉறுதியும்தான் இவர்களின் வேகமான வளர்ச்சியைக் காட்டுகின்றது. இன்று பெண்புலிகள் கரும்புலியாகவும், கடற்கரும்புலியாகவும் நின்று சாதனைபடைக்கின்றனர்.

விடியலை நோக்கிச் செல்ல
வெகுதூரம் இல்லை.
எல்லையில்லா முயற்சி
செய்வோம்
தோல்வியில்லாச் செயல் புரிந்து
எண்ணிய செயலை எடுத்தே
முடிப்போம்
நானிலம் புகழ தமிழீழம்
பெறுவோம்.........
நாளைய விடியலுக்காய்ப்
புறப்படுவோம்.

நன்றி

பிரியங்கா
ஜேர்மனி

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

தமிழீழத்தில் பிறந்த நான் கல்வி கற்பதற்காக தமிழ்நாட்டிற்கு வந்தேன். நீண்ட நாட்களாக தமிழீழத்தில் நடக்கும் அரசியல் பிரச்சினைகளை அறிந்துகொள்ளாமல் இருந்துவிட்டேன் என்று வேதனைப்படுகின்றேன். 'எரிமலை' இதழ் எனக்கு கிடைத்ததனூடாக பல விடயங்களையும் அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. எனது தாய், தந்தையரோ தமிழீழத்தில் நடக்கும் வன்முறைகளைப் பற்றி எதுவும் எழுதுவதில்லை. அங்கு மக்கள் அகதிகளாக தங்கள் வாழ்விடங்களை விட்டு மர நிழல்களிலும், காடுகளிலும், வெட்டைவெளியிலும் உண்ண உணவின்றி, மாற்றுடையின்றி நிம்மதியான உறக்கமின்றி.... இப்படியான பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என்பதையும் எரிமலை இதழினூடாக அறிந்துகொண்டேன். பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லை. கல்வி வசதியின்மையால் மாணவர்களின் கல்வித்திறமை வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்றது.

இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான இளைஞர்கள், யுவதிகள் காணாமற் போய்க்கொண்டிருக்கிறார்கள். பல இளம் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்படுகிறார்கள். கிருஷாந்தியின் குடும்பம் அழிக்கப்பட்டது – இவையெல்லாவற்றையும் பார்த்துவிட்டு இந்திய மத்திய, மாநில அரசுகள் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றன. சிறீலங்காவின் இனவெறியை ஒழிக்க புலம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களும் ஒத்துழைக்க வேண்டும். போலி கௌவரவத்திற்காக பலர் தங்கள் சொந்த நாடு அழிந்துகொண்டிருப்பதையே மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இனியும் வேண்டாம்.........

சிங்கள இனவெறி அரசின் ஈனச் செயலை ஒடுக்க ஒன்றுசேர வேண்டியது அனைத்துத் தமிழ் மக்களினதும் கடமையாகும்.

அபிநயா
சிதம்பரம்
தமிழ்நாடு.

★

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

உங்கள் 'எரிமலை' இதழ்கள் தாமதமாகவே கிடைக்கின்றன. இனியும் தாமதமாக கிடைக்காதபடி உடனுக்குடன் அனுப்பிவைக்கவும்.

தமிழீழ தேசத்தின் நேசக்கரங்கள் மேன்மேலும் நீண்டுவருவதை எரிமலை இதழினூடாக அறியக்கூடியதாகவுள்ளது. எரிமலையின் ஒவ்வொரு இதழிலும் கலை, பண்பாடு, கல்வி, ஆய்வுத்துறை போன்ற பல விடயங்கள் வருவது மிகவும் விரும்பத்தக்கது. தமிழீழத்தில் நடக்கும் ஒவ்வொரு உண்மைச் சம்பவத்தையும் படம்பிடித்துக்காட்டியும், கட்டுரைகள் மூலமும் விளக்கி, தமிழ்நாட்டு மக்களினதும், புலம்பெயர்ந்த மக்களினதும் கவனத்தை ஈர்க்கச் செய்யும் எரிமலைக்கு எனது நன்றிகள்.

ஐங்கரன்
மேட்டுப்பாளையம்,
தமிழ்நாடு.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...


+ சந்திரிகாவின் இன அழிப்பு முயற்சியில் புதிய அரசியலமைப்புச் சட்டம் - பக்கம் 04

+ புதிய ஏஜென்டுகள் - பக்கம் 07

+ தமிழருக்கென்றொரு தாயகம் வேண்டும் - பக்கம் 22

+ கிராமத்து உதயங்கள் - பக்கம் 28

+ ஒரு கலைஞனின் நினைவுப் பயணம் - பக்கம் 30

+ களைகள் - பக்கம் 34

+ களத்திலிருந்து ஒரு கடிதம் - பக்கம் 37


+ சமுதாயப் பண்படுத்தலுக்கு பாலியற்கல்வி அவசியம் - பக்கம் 38

+ தமிழகத்தில் இருந்து ஒரு மடல் - பக்கம் 45

+ திருகோணமலை மாவட்டத்தை புற்றுநோய் போல் அரித்துவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் - பக்கம் 46



சிறீலங்கா தேர்தல்: அக்கினி புத்திர அரசியல் - பக்கம் 08



ஆனையிறவு - பரந்தன் அழித்தொழிப்புத் தாக்குதல்: ஓர் உயர் பரிமாண கெரில்லா நடவடிக்கை - பக்கம் 12



அன்னை பூபதி - பக்கம் 16



சுதந்திரத்தைத் தேடி... - பக்கம் 18



ஐ.நா. நோக்கிய அமைதிப் பேரணி - பக்கம் 24



நரக நகரம் - பக்கம் 40




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வு முழுமைபெற பொது அறிவு அவசியம்

கல்வி என்பது அறிவு சார்ந்தது. ஒருவன் தன்னைப் பற்றியும், தனது சமூக வாழ்வு பற்றியும், தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்துகொள்வதற்கு கல்வி அத்தியாவசியமானது.

கல்வியறிவு ஒருவனது ஆளுமையை சிறப்பிக்கிறது. அவனது வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது.

இன்றைய அறிவியல் உலகம் விரைந்து, பரந்து, வளர்ந்து வருகிறது. இந்த அறிவியல் அசைவியக்கத்தால் உலகத்தில் பிரமிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனித வாழ்வும் புரட்சிகரமாக மாறி வருகிறது.

இந்த அறிவுசார் நவயுகத்தில், வரையறுக்கப்பட்ட, துறைசார்ந்த படிப்புகள் ஒரு பரந்த உலகப் பார்வையையும் விரிந்த வாழ்வனுபவத்தையும் கொடுக்கப் போவதில்லை. எனவே, துறைசார்ந்த பள்ளி, கல்லூரிப் படிப்புகளோடு பொது அறிவுத் திறனையும் எமது இளம் பரம்பரையினர் வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இது இன்றைய காலத்தின் தேவையும் கூட.

நாம் கற்கின்ற அல்லது செயற்படுகின்ற துறை என்ற வரம்பிற்குள் மட்டும் நாம் ஒதுங்கி நின்றுவிடக் கூடாது. அதுவும் ஏட்டுக் கல்வியோடு நின்று விட்டால் வாழ்வின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்ள முடியாது. முழுமையான சமூக மனிதர்களாக வாழமுடியாது. அன்றாட வாழ்விற்கும் தேவைக்கும் பயன்படும் வகையில், நாட்டின் நடப்பியல்புகளையும் உலகத்தின் போக்குகளையும் வளர்த்துக்கொள்வது அவசியம். அதுவே எம்மைச் சமூகத்திற்கு பயனுள்ள மனிதர்களாக ஆக்கிவிடுகிறது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின்
கருத்துத் தொகுப்பு 'எனது மக்களின் விடுதலைக்காக' எனும் நூலிலிருந்து



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
ஏப்ரல் 1997

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# சந்திரிகா கக்கும் இனவாதம்

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா, இலங்கையில் இனப் பிரச்சினை என்று ஒன்று இல்லை; விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரச்சினை தான் உண்டு என தொழிற்துறை அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது எங்கேயோ கேட்ட குரல் போல இருக்கிறது அல்லவா! முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவின் "புகழ் பெற்ற" கூற்றான "இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை; பயங்கர வாதப் பிரச்சினை தான் உண்டு" என்பதுடன் சந்திரிகாவின் கூற்று இணங்கிப் போகிறது அல்லவா.

சந்திரிகாவின் கூற்று சிங்கள பௌத்த பேரினவாதத்தின் குரலாகவே ஒலிக்கிறது. அனைத்துலகமெங்கும் நன்கு அறியப்பட்ட ஒரு பிரச்சினையை - தமிழ்த் தேசிய இனத்தை சிங்கள பௌத்த பேரினவாதம் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியமையால் வரலாற்றுப் போக்கில் வளர்ச்சியடைந்த ஒரு பிரச்சினையை வெறும் இனப்பிரச்சினையாக, பயங்கர வாதப் பிரச்சினையாகச் சித்தரிப்பது பேரினவாத வெறியினையே வெளிப்படுத்துகின்றது.

சந்திரிகா என்னதான் இனப்பிரச்சினை இல்லை என வாய்கிழியக் கத்தினாலும், அவரது அரசின் நடவடிக்கைகளே இனப்பிரச்சினை, உண்டு என்பதை நிரூபிக்கிறது. இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான ஒரு விடயம் என்னவெனில் 1994 ஆம் ஆண்டு விஜயதுங்கா, 'இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை' என்று முழங்கிய போது அதனை மறுதலித்து இனப்பிரச்சினை உண்டு எனப் பிரகடனப்படுத்திய சந்திரிகா இப்போது இனப்பிரச்சினை இல்லை எனக்குறிப்பிட்டவாறு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தான் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக அனைத்துலகின் முன் கூறும், முரண்பட்ட நிலையால் வெளிப்படும் சிங்களத் தலைமையின் நேர்மையினம்.

இந்த ஏமாற்றுகளும், பொய்களும், புரட்டுகளும் சிங்களத் தலைமைகளுக்கு புதிய விடயம் அல்ல. தான் நேர்மையான முறையில் தமிழ் மக்களின் பிரச்சினையை அணுகுவதான ஒரு தோற்றத்தினை அனைத்துலகின் முன் ஏற்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டவாறு, இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என முரண்பட்டுக்கொள்ளும் அணுகு முறையினை சந்திரிகா வெளிப்படுத்தியது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது.

இனப்பிரச்சினை இல்லை என்று சந்திரிகா கூறிய வாயினை முடிக்கொள்வதற்கிடையில், ஐக்கிய தேசியக்கட்சியும் சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணியும் இனப்பிரச்சினை தொடர்பாக பொது அணுகுமுறையினைக் கடைப்பிடிக்க உடன்பட்டுக் கொண்டதான செய்திகள் வெளியாகிவிட்டன. பிரித்தானிய வெளிநாட்டமைச்சின் தூண்டுதலினாலேயே இவ் உடன்பாடு காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. தான் கூறிய கூற்றையே மறுதலிக்கும் நிலை சந்திரிகாவுக்கு உடனடியாகவே ஏற்பட்டு விட்டது.

ஏன் சந்திரிகா இத்தகைய கூற்றை வெளிப்படுத்தினார்? இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஒரு புறத்திலும், இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என மறுபுறத்திலும் கூறிக் கொள்வது எதற்காக?

விடுதலைப்புலிகள் தலைமையில் நடைபெறும் தமிழ் மக்களின் உரிமைப் போரை பயங்கரவாதப் பிரச்சினை எனக் கூறி இராணுவ முன்னெடுப்பினைத் தொடரும் தனது அரசின் அணுகுமுறையினை தீவிரப்படுத்துவதற்காகவா? அல்லது 'இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனக் கூறிக் கொண்டு மூன்றாவது தரப்பினர் எவரும் தன்னை நோக்கி வரவேண்டாம் என மறைமுகமாகக் கூறுவதற்கா? அல்லது எதிர்காலத்தில் தமது நிலைப் பாட்டில் விட்டுக் கொடுப்பு எதனையும் மேற்கொள்ள வேண்டிவரும் எனும் எதிர்பார்ப்பினால் இப்போதே திட்டமிட்டு கடின நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினாரா?

எது என்னவாக இருப்பினும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் மேலாதிக்கத்தினை தமிழ்மக்களின் தலையில் திணித்து விடும் முயற்சியில் இறங்கியிருக்கும் சந்திரிகா இதைவிட மோசமான கூற்றுக்களை வெளியிட்டாலும் அது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இதற்கிடையில், இனப்பிரச்சினை தொடர்பாக இருபேரினவாதக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட உடன்பாடு பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பல்வேறு வதந்திகளைக் கிளப்பிவிட்டுள்ளன. உண்மையில் இவ் இரு கட்சிகளும் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுத் திட்டத்தில் ஒரே கருத்துக்கு இன்னமும் வந்துவிடவில்லை; பொது வேலைத்திட்டத்திற்கும் இணங்கியதாக இல்லை. சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் வதந்திகள் பரவியிருந்தன. நிலைமைகளை உன்னிப்பாக அவதானிக்காதவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளின் விளைவே இவ்வதந்திகள்.

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தேசியத் தலைவரினால் 1996ஆம் ஆண்டு மாவீரர் நாள் செய்தியில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பதற்கு வன்னியில் பாரிய யுத்த நடவடிக்கைகளுக்கு சிறீலங்கா தரப்பினர் தயாராகிக் கொண்டிருக்கும் வேளை, பேச்சுவார்த்தை தொடர்பான போலி நம்பிக்கைகளை பரப்புபவர்கள் தொடர்பாக தமிழ்மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகாவின் இன அழிப்பு முயற்சியில் புதிய அரசியலமைப்புச் சட்டம்

## சில குறிப்புக்கள்

சிறீலங்காவின் புதிய அரசியலமைப்புச் சட்டம் எதிர்வரும் நவம்பர் மாதமளவில் பாராளுமன்றத்தின் முன் விவாதத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என அரச தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது. இவ் உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் 18 அத்தியாயங்களும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டும் உள்ளன. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதிலும், தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் தனது அரசு உண்மையான அக்கறையினைக் கொண்டுள்ளது என்று வாதிடுவதற்குத் தேவையான ஒரு காய் நகர்த்தலாகவே இவ் அரசியல் சட்ட நகல் வரைபினை பத்திரிகையாளர்களுக்கு வெளியிடுமாறு சந்திரிகா விடுத்த உத்தரவு அமைகிறது.

மொத்தம் 26 அத்தியாயங்களைக் கொண்ட உத்தேச அரசியலமைப்புச் சட்டத்தில், சிறீலங்கா, கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் கூட்டமைப்பாக (Indissuuble Union of Regions) பிரகடனப்படுத்துகிறது. எந்தவொரு பிராந்திய நிர்வாகமோ, நிர்வாகங்களோ, இக் கட்டமைப்பிலிருந்து பிரிந்து செல்ல முடியாது, தமது பிராந்தியங்களுக்கு உரிய பகுதிகளையோ எல்லைகளையோ மாற்றிக்கொள்ள முடியாது, பிராந்தியங்களின் பெயர்களை மாற்றிக்கொள்ள முடியாத அதேவேளை பிராந்தியங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்தோ அல்லது பிராந்தியங்களின் பகுதிகளை ஒன்றிணைத்தோ பிராந்தியங்களின் கட்டமைப்பில் எவ்வித மாற்றங்களையும் செய்ய முடியாது.

சந்திரிகா அரசு முன்னர் வெளியிட்ட பிராந்தியங்களுக்கான அதிகாரம் தொடர்பான விடயங்கள் எதுவும் தற்போது வெளியிடப்பட்ட அரசியல் சட்ட வரைபில் உள்ளடக்கப்படவில்லை. இச் சட்ட வரைபில் 15–வது அத்தியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ள இவ்விடயம் பாராளுமன்றத் தெரிவிக் குழுவின் ஆய்வுக்கு தொடர்ந்தும் உட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறீலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் சில மாற்றங்கள் இச் சட்ட வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி நேரடியாக மக்களால் தேர்வு செய்யப்படுவதற்குப் பதிலாக, பாராளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்டவராகவும், பிரதம மந்திரியினதோ அல்லது அவரால் நியமிக்கப்படும் அமைச்சரினதோ ஆலோசனையின்படி இயங்குபவராகவும் ஆக்கப்படுகிறார்.

> **எந்த ஒரு சிங்கள அரசுமே, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை இலங்கைத் தீவில் நிலைநிறுத்துவதற்குத் தீவிரமாக இயங்கும். சந்திரிகா அரசு இவ்விடயத்தில் ஒருபடி கூடுதல் தீவிரத்தினை காண்பிக்கிறது**

மேலும், இவ் அரசியலமைப்புச் சட்டத்தில், மனித உரிமைகள் தொடர்பாக அதி உச்ச உத்தரவாதங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 'மனித உரிமைகள்' தொடர்பாக மேற்குலகு காட்டும் சகல 'அக்கறைகளும்' சட்ட வரைபில் காட்டப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசுகளின் உண்மை முகம் தெரிந்தவர்கள் வாய்விட்டுச் சிரிக்கக்கூடியதாகவும், உண்மை முகம் தெரியாத மேற்குலகச் சிந்தனாவாதிகள் மனம் திறந்து பாராட்டக்கூடியதாகவும் அமைக்கப்பட்டிருக்கும் மனித உரிமைகள் தொடர்பான அத்தியாயம் – மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் நோக்கத்தினைக் கொண்டுள்ளது.

இக் குறிப்பில், சந்திரிகா அரசு முன்வைத்திருக்கும் புதிய அரசியலமைப்புச் சட்ட வரைபில் சாதக பாதகங்களை ஆராய்வது எனது நோக்கமல்ல. மாறாக சிறீலங்கா எந் நோக்கங்களுக்காக இவ் அரசியலமைப்புச் சட்டத்தினை முன்வைக்கிறது என்பதனை சுருக்கமாக ஆய்வு செய்வதே இக்குறிப்பின் நோக்கமாக அமைகிறது.

முதலில், புதிய அரசியலமைப்புச் சட்டம் இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வுகாணும் நோக்கில் கொண்டு வரப்படவில்லை என்பதனை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் கௌரவமான ஒரு அரசியல் தீர்வினை பெறுதல் என்பதும் சிங்கள அரசுகள் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை இலங்கைத் தீவில் நிலைநிறுத்துவது என்பதும் இரு முரண்பட்ட இலக்குகள். முதலாவதினை அடைந்து கொள்வதானால் இரண்டாவதை அடைய முடியாது. இரண்டாவது நிலைநிறுத்தப்படும் போது முதலாவது அடையப்படுவதற்கான சாத்தியமே இல்லை. இது இலங்கைத்தீவில் வரலாற்று ரீதியாக வளர்ச்சியடைந்து நிலைமைகளின் தவிர்க்கமுடியாத ஒரு தர்க்கரீதியான நிலை.

எந்த ஒரு சிங்கள அரசுமே, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை இலங்கைத் தீவில் நிலைநிறுத்துவதற்குத் தீவிரமாக இயங்கும். சந்திரிகா அரசு இவ்விடயத்தில் ஒருபடி கூடுதல் தீவிரத்தினை காண்பிக்கிறது. உலகில்

**- திலீபன் -**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படும் மாற்றங்களை அவதானித்து, அம் மாற்றங்களைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி – சிங்கள பௌத்த இனவாதத்திற்கு ஒரு நவீன, தலைமைத்துவத்தினை சந்திரிகா அரசு அளித்து வருகிறது. புதிய அரசியலமைப்பிலும் 'பௌத்த மதம்' தொடர்பான விடயங்கள் இரண்டாவது அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இவ் அத்தியாயத்தின்படி பௌத்த சாசனத்தினைப் பாதுகாப்பது அரசின் கடமையாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. சிறீலங்கா சிங்கள பௌத்த குடியரசாக இருக்கும்போதே – அது மதசார்பற்ற பல்லினத்தவர்கள் வாழும் நாடு என்ற போலித் தோற்றத்தினை ஏற்படுத்திய வண்ணம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை இலங்கைத் தீவில் நிலைநிறுத்துவதினை சந்திரிகா அரசு திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வருகிறது.

இந் நிலையில், புதிய அரசியலமைப்புச் சட்டம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு சிங்கள, தமிழ் தேசிய இனங்களை சமத்துவமாக அங்கீகரித்து, கௌரவமான அரசியல் தீர்வுகாணும் நோக்கத்தினைக் கொண்டதல்ல என்பது இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு விடயம். மேலும், இதுவரை வெளியிடப்பட்டுள்ள அத்தியாயங்களை வைத்து நோக்கும் போது வடக்கு – கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாகப் பிரித்துவிடக் கூடிய ஒரு சதித்திட்டமும் சந்திரிகா தரப்பிடம் இருப்பதாகத் தெரிகிறது. பிராந்தியங்களின் பெயர்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது கூட தடை விதிக்கப்படும் அளவுக்கு 'சிங்கள பௌத்த பேரினவாத உணர்வு' நன்கு பாதுகாக்கப்பட்ட வண்ணமே இவ் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்பது தெளிவு.

# சாவதே உறுதி

சிறீலங்கா அரசு வாழ்வதா? அல்லது சாவதா? என்பதைத் தீர்மானிக்கும் காலகட்டம் நெருங்கி விட்டது. இதனை எதிர்வரும் நவம்பரில் தீர்மானித்து ஆகவேண்டும் என நீதி மற்றும் அரசியல் யாப்பு விவகார அமைச்சருமான பேராசிரியர் பீரீஸ் எச்சரித்துள்ளார். கொழும்பில் கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், இலங்கையின் தலைவிதியானது நவம்பர் மாதத்தில் தாக்கல் செய்யப்படப் போகும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை சார்ந்தே இருக்கின்றது. வாழ்வதா? அல்லது சாவதா? என்ற இரண்டில் ஒன்றினைச் சிறீலங்கா தேர்ந்தெடுத்தே ஆகவேண்டும் எனத் தெரிவித்தார். சந்திரிகா அரசின் புதிய அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்படும் அதிகாரப் பரவலாக்கல் ஆனது – புதிய யாப்பானது அமைச்சர் கூறுவது போல் நவம்பரில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுமா? நிறைவேற்றப்படுமா? என்பது வேறு விடயம். இது இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமையப்போவதில்லை என்பது உறுதி செய்யப்பட்டதாகும். ஏனெனில் தமிழ் மக்கள் இதனை ஏற்கனவே நிராகரித்துள்ளனர். ஆகையினால் இவ்வதிகாரப் பரவலாக்கலும், புதிய அரசியல் யாப்பும் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமையமாட்டாது என்பது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டதொன்றாகும். ஆனால் இது ஒருபுறம் இருக்க இப் புதிய அரசியல் யாப்பையும் அதிகாரப் பவவலாக்கல் திட்டத்தையும் சிங்கள அரசியல்வாதிகளும், பேரினவாதிகளும் ஏற்றுக்கொள்வார்களா என்பதே கேள்வியாகும். அமைச்சர் பீரீசும் இது குறித்தே எச்சரிக்கை செய்துள்ளார். ஏனெனில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் புதிய அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட வேண்டியது சிறீலங்காப் பாராளுமன்றத்தினாலேயே ஆகும். ஆகையினால் சிறீலங்கா வாழ்வதா? அல்லது சாவதா? என்ற முடிவைத் தீர்மானிக்க வேண்டியவர்களும் பாராளுமன்றத்தில் உள்ளவர்களேயாகும். ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசு கூறிக்கொள்வது போல் நவம்பரில் புதிய அரசியல் யாப்பினை பாராளுமன்றத்தில் முன்வைத்தால் அரசினால் நிறைவேற்றமுடியாது. ஏனெனில் தற்போதைய அரசிடம் அரசியல் யாப்பினை மாற்றியமைக்க போதிய பலம் பாராளுமன்றத்தில் இல்லை. அதாவது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலம் ஆட்சியாளர்களிடம் இல்லை. மேலும் புதிய அரசியல் யாப்பும் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் பேரினவாதிகளின் பலத்த கண்டனத்திற்குள்ளாகும். ஆளும் கட்சியின் உள்ளே கூட இதற்குப் பலமான எதிர்ப்புகள் எழும் என்றே எதிர்பார்க்கலாம். இந்த விவகாரத்தை உள்ளூராட்சித் தேர்தலில் இருந்து, ஆளும் கட்சி ஒதுக்கிவைத்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளமுடியும். இந்த நிலையில் புதிய அரசியல் யாப்பில் அதிகாரப் பரவலாக்கல் என்ற ரீதியில் அற்ப சொற்ப சலுகைகள் கூட பகிர்ந்து அளிக்கப்படுமானால் அதனைச் சிங்களப் பேரினவாத சக்திகள் ஏற்றுக் கொள்ளமாட்டா. இதே சமயம் இவ்வதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அரசாங்கம் பின்வாங்கிவிட்டதாகவே கருதப்படும். அத்தோடு புதிய அரசியல் யாப்பிற்கு எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சியிடம் இருந்து ஆளும் கட்சி ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது. ஏனெனில் எதிர்க்கட்சியிடம் இருந்து எந்தவிதமான ஆதரரையும் பெறக்கூடிய வகையில் ஆளும்கட்சி நடந்து கொள்ளவில்லை. ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள் கழிந்த பின்னும் தனது சாதனைகளைப் பற்றிப் பேசாத அரசாங்கம், ஐ.தே. கட்சியைக் கொலைகாரக் கட்சி, கொள்ளைக்காரக் கட்சி எனக் காட்ட முனைவதிலேயே அக்கறை காட்டுகின்றது. ஆகையினால் புதிய அரசியல் யாப்புக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுவது பகற்கனவாகவே இருக்கும். இந்த நிலையில் அமைச்சர் பீரிஸ் கூறியிருப்பது போல் சிறீலங்கா அரசு வாழ்வதா? அல்லது சாவதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு நவம்பர் மாதம் வரை காத்திருக்கவேண்டும் என்பதல்ல. சிறீலங்கா அரசு சாவை நோக்கிச் செல்கின்றது என்பதைத் தற்பொழுதே முடிவு செய்துவிட முடியும். இதற்கு தனியாக புதிய அரசியல் யாப்பை பாராளுமன்றத்தில் அரசினால் நிறைவேற்ற முடியாது என்பது மட்டும் அல்ல, அரசு நடத்தும் யுத்தமும் காரணமாகும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1994ஆம் ஆண்டுத் தேர்தலில் சந்திரிகா அரசு கொடுத்த வாக்குறுதிகளில், மூன்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக கணிக்கப்பட்டன. இனப் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணல், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையினை இல்லாதொழித்தல், மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்குப் பூரண மதிப்பளித்தல் – இவை மூன்றுமே அம் முக்கிய வாக்குறுதிகளாகும்.

இம் மூன்று முக்கிய வாக்குறுதிகளில் எவற்றையுமே சந்திரிகா அரசு நிறைவேற்றவில்லை என்பது உலகறிந்த ஒரு விடயம். இருப்பினும் அதற்காக பல்வேறு காரணங்களை வெளிப்படுத்தி வந்தது சந்திரிகா அரசு.

எனினும் உள்நாட்டு அபிப்பிராயங்களை விட வெளிநாட்டவர் அபிப்பிராயங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும் தன்மையுள்ள சந்திரிகாவுக்கு வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு தன் மீதான 'நல்லபிப்பிராயம்' வீழ்ச்சி அடைந்து வருவது மிகுந்த கவலையினை அளித்துவரும் ஒரு விடயமாக இருந்தது. 'முன்வைத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற சந்திரிகா பின்நிற்கவில்லை, ஆனால் அரசியற் சூழல் அதற்கு இடம்கொடுக்கவில்லை' என்ற எண்ணம் வெளிநாட்டவரிடமும் தன்னிடம் நம்பிக்கை வைத்துள்ள உள்நாட்டவரிடமும் ஏற்பட வேண்டும் என்ற விருப்பம் சந்திரிகாவுக்கு உண்டு. மற்றைய சிங்களத் தலைவர்களைப் போன்றே சந்திரிகாவும் ஒரு இனவாதி தான் என்பதனை அனைத்துலகமுமே ஏற்றுக்கொள்ளும் நிலை தோன்றி விடக்கூடாது என சந்திரிகா அஞ்சுவதாகத் தெரிகிறது.

அதேவேளை, சிங்கள பௌத்த மேலாதிக்கம் இலங்கைத் தீவில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் சந்திரிகாவுக்கு தீவிர அக்கறை உள்ளது. அதற்காக இன்று சந்திரிகா அரசு முன்வைக்கும் எண்ணக்கரு 'பல்லினத் தேசியம்' (Multi - Ethnic Nation concept) தழுவியதாக உள்ளது. "இலங்கைத்தீவு எல்லா இனத்தவர்களுக்கும் சொந்தம்; எவரும் எங்கும் போகலாம்; எங்கும் வாழலாம்; வடக்கு – கிழக்கு தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் எனப் பாகுபடுத்தக்கூடாது. சிறீலங்கா அங்கு வாழும் எல்லா மக்களுக்கும் தாயகம்" – இத்தகைய கருத்துக்கள் இந்த எண்ணக்கருவின் ஊடாக விதைக்கப்படுகின்றன. இதன் ஊடாக தமிழ் மக்களை தனித் தேசிய இனம் என்பதனையும், அவர்களுக்குப் பாரம்பரியத் தாயகம் உண்டு என்பதனையும் நிராகரித்து – தன்னுரிமைக் கோரிக்கை மறுதலிக்கப்படுகிறது. இவ்வாறு மறுதலிக்கும் போது, சிங்கள பௌத்த ஐதீகத்தின் செல்வாக்குக் காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டப்பட்ட, 'சிறீலங்கா அரசு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமான நாடு' என்ற கருதுகோளை முன்வைக்காது, 'பல்லினத் தேசியம்' குறித்த கருதுகோளை முன்வைப்பது சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் அம்பலமாகாமல், சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலைநிறுத்தும் முயற்சியாக உள்ளது.

இத்தகைய ஒரு சூழலிலேயே, புதிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்றினை முன்வைக்க சந்திரிகா விரும்புகிறார். ஒருபுறம் போரைத் தீவிரமாக நடாத்திய வண்ணம், மறுபுறமாக அரசியலமைப்பு சட்ட வேலைகளையும் சந்திரிகா தூண்டிவிட்டுள்ளார். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் கொண்டுவரப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தினை மாற்றுவது என்பது இலகுவான ஒரு விடயமல்ல. இதற்கு பாராளுமன்றின் இரண்டில் மூன்று பெரும்பான்மை தேவை. அவ்வாறு பெரும்பான்மை கிடைக்காதுவிடின் அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் பாதை மிகுந்த சிக்கல் மிகுந்ததாக இருக்கும். ஐ.தே.கட்சி புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஆதரவு அளிக்காதுவிடின், அடுத்தகட்ட நடவடிக்கை சிக்கல் மிகுந்ததாக மாறும். எனினும், தமிழ் மக்களை சர்வதேச அங்கீகாரத்துடன் அடிமைப்படுத்தும் நோக்கத்தினைக் கொண்ட புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஐ.தே.கட்சி அதரவளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்நிலையில், புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பான நகர்வுகளுக்கு தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலைச் செயற்பாட்டை மூடி மறைப்பதற்கான ஒரு கவசமாகப் பயன்படுத்தும் நோக்கம் சந்திரிகா அரசுக்கு உள்ளது என்பதனை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். தமிழ் மக்களை சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஆளுகைக்குள் உட்படுத்தும் நோக்கமே அரசியலமைப்புச் சட்ட நகர்வுகளிலும் உள்ளது. நாய் வாலை நிமிர்த்த முடியுமா என்ன? ★

## வெற்றிக்கனி கொண்டு விரைவில் வருவோம்

சித்திரை சிந்தும் நிலவில் கூட
நித்திரையாய் என் தேசம்.
மாலையானதும் மயானம்.
பச்சை வாகனங்களின் உறுமலுடன்
பேய்களின் பவனியில் நரபலிகள்.
நித்தம் கேட்கும் அவலங்களால்
நிலவும் நெருப்பாகிக் கொதிக்கின்றது.

சுற்றிவரத் தீமூட்டி
நடுவே உன் உறவுகளைத் தடுத்து
தேடுதல் வேட்டையும் சித்திரவதையும்...
என் ஊருக்குள் நடக்கிறது.

காரைச்சிவனின் கண்டாமணி
காலையில் கேட்குதில்லை
சேவல்களும் கூவுதில்லை
குயில்களும் பாடுதில்லை
விடிகாலையிலும்
விழிதிறக்கவில்லையே என் தேசம்

பள்ளிக்குப் போன
வெண்புறாக்கள் சோதனைச்சாவடியில்
வேதனைகள் அனுபவித்து சிறகிழந்து
நடுவீதியில் துடிதுடித்து.....
வேலைக்குப் போன கலைமான்கள்
காணாமல் போய்
புதைகுழியில் புதைந்திருக்கும்

முல்லைக்கடற்பரப்பில் சடலங்கள்
வெள்ளைச்சீருடையில் மிதக்கின்றன.
கழுகுகளால் குதறப்பட்ட குயில்கள்
உருவமற்றுக் கிடக்கின்றன.
ஊரில் உள்ள என் உறவுகளா இப்படி
உருக்குலைந்து உப்புநீரில்
கருவாடாய் மிதக்கிறது?

மனித உரிமை பேசுவோரும்
மௌனமாய் இருக்கிறார்.
ஒரு தலைமுறை எம் ஊரில்
இல்லையென்றான பின்பா
நீங்கள் வாய்திறப்பீர்கள்?
உரிமைகள் காத்திட
இலக்கணம் அமைத்தால் மட்டும் போதுமா
கொலைக்களத்திலிருக்கும்
என் உறவுகளே வெற்றிக்கனி கொண்டு
விரைவில் வருவோம்.

– தயாமதி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய ஏஜன்டுகள்

ஈ.பி.டி.பி. குழுத்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிற்குப் புதிய பதவி ஒன்றை சந்திரிகா குமாரதுங்கா அரசு வழங்கியுள்ளது. தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறையாகவுள்ளது என்பதை வெளியுலகிற்குக் காட்டிக் கொள்ளும் அதேவேளை பாராளுமன்றத்தில் தம்மைத் தாங்கி நிற்கும் ஈ.பி.டி.பி. போன்ற குழுக்களின் வாழ்விற்கு வழி செய்யவேண்டிய தேவை உள்ள நிலையிலும் சிங்கள ஆட்சியாளர்களால் இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறு வழங்கப்படும் பதவியானது தமது அரசியலுக்கு அனுகூலமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதிலும் சிங்கள ஆட்சியாளர்கள் கவனமாகவே இருக்கின்றனர்.

இன்னும் சிலகாலத்தில் யாழ் குடாநாட்டில் சிறீலங்கா அரசின் சிவில் நிர்வாகத்தை மேம்படுத்தவும் பொருளாதார மேம்பாட்டைக் கவனிக்கவும் இணைப்பாளராக டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார். இதைச் சற்றுத் தெளிவாகக் கூறுவதானால் சிறீலங்காவின் சிவில் நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தும் பொறுப்பு ஈ.பி.டி.பி குழுத் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு குடாநாட்டின் அபிவிருத்தி என்ற ரீதியில் ஈ.பி.டி.பி.யின் குழுவின் வாழ்விற்கு உதவி வழங்கப்படும். வடக்கில் என்ன, சிறீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள எப்பகுதியிலும் சிவில் நிர்வாகம் என்பது ஒரு வகையில் இராணுவத்தின் கீழான நிர்வாகமே. அதாவது இராணுவ பரிபாலனமாகவே இருந்து வந்துள்ளது. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இதனைப் பூரணமாக இயங்கவைக்க சென்ற காலத்தில் ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியே கண்டுள்ளன.

இந்த நிலையில் இராணுவத்தின் பாதுகாப்பு என்பது வடக்கில் நடமாடவே முடியாத முழுமையான இராணுவத்தின் தயவிலேயே தங்கியுள்ளது. ஈ.பி.டி.பி குழுவும் அதன் தலைவரும் சிவில் நிர்வாகத்தை எவ்வாறு செயல்படுத்தப் போகிறார்கள் என்பது கேள்வியே. இது ஒருபுறம் இருக்க சிங்கள ஆட்சியாளர்களுக்காக இவர்கள் என்ன செய்ய முனைகிறார்கள் என்பது முக்கியமானது ஆகும். தமிழருக்கு ஒரு தனிநாடு



**தமிழருக்கு ஒரு தனிநாடு அமைக்கப் போவதாகக் கூறி ஆயுதப் போராட்டத்தை நடத்திப் பின்னர் இயலாமை காரணமாக ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் எனக் கூறிக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டார்கள். ஈ.பி.டி.பி. போன்ற குழுவினர் பின்னர் ஊழல் மோசடி நிறைந்த தேர்தல் ஒன்றின் மூலம் வடக்கிற்குரிய பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றவர்கள்.**

அமைக்கப் போவதாகக் கூறி ஆயுதப் போராட்டத்தை நடத்திப் பின்னர் இயலாமை காரணமாக ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் எனக் கூறிக்கொண்டு போராட்டத்தைக் கைவிட்டார்கள். ஈ.பி.டி.பி. போன்ற குழுவினர் பின்னர் ஊழல் மோசடி நிறைந்த தேர்தல் ஒன்றின் மூலம் வடக்கிற்குரிய பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றவர்கள். அதன் பின்னர் வடக்குக் கிழக்கு இணைப்பு இடைக்கால நிர்வாகசபை தேவையெனக் கோரிக்கை விடுத்துக்கொண்டு அதே சமயம் சந்திரிகா அரசுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு இருப்பவர்கள். ஆனால் இவர்கள் கோரிய எதுவும் சந்திரிகா அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக இலை. இறுதியில் அரசு முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தைக்கூட அது உள்நாட்டுத் தேர்தலில் மறந்துவிட்டது. ஆனால் முன்னர் தனி அரசிற்காகப் போராடியவர்கள் இன்று அதே பிரதேசத்தில் தமது சிவில் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான அதிகாரிகளாக சிங்கள அரசு நியமித்துள்ளது. அதாவது புதிய அதிகாரங்கள் எதையும் வழங்கா நிலையில் பழைய அரசியல் அமைப்பை வலுவாக்கும் பொறுப்பு ஒன்றைக் கொடுத்துள்ளது. இதனை மறுவளமாகக் கூறுவதானால் சிங்கள ஆட்சியை நிலைநிறுத்தும் பொறுப்பைக் கொடுத்துள்ளது. இந்த நிலையானது சந்திரிகா அரசானது இனப்பிரச்சனை விடயத்தில் எவ்வாறு இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளப் போதுமானதாகும். ஒரு புறம் சிங்கள ஆட்சியை வடக்கு கிழக்கு எங்கும் மீண்டும் வலுவாக நிலைநிறுத்த முனையும் அதேவேளை அதிகாரப் பரவலாக்கல் என்ற ரீதியில் ஒரு துரும்பு தானும் தமிழர்களுக்குச் சென்றடைவதை அது விரும்பவில்லை. அல்லது அனுமதிக்கப் போவதில்லை என்பதையும் வெளிக்காட்டுகின்றது எனலாம். ஆனால் ஈ.பி.டி.பி. போன்றோரின் நிலையோ எதைக் கேட்டோம் எதைத் தருகிறார்கள் என்பதல்ல. எதைக் கொடுத்தாலும் பெற்றுக்கொள்வோம் என்பதாகிறது. ஏனெனில் எதையும் எப்பொழுதுமே தாமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களிடம் இருந்ததில்லை. ஆகையினால் கொடுப்பது எதுவாக இருந்தாலும் கையேந்தக் கூடியவர்கள். அதேபோன்று தமது அற்ப நலனுக்காக எதுவாக இருந்தாலும் எவருக்காக இருந்தாலும் காட்டிக் கொடுக்கக்கூடியவர்கள். இல்லை எனில், ஒரு காலத்தில் தம்மைப் போராளிகள் எனக் கூறியவர்கள் இன்று ஆட்சி அமைப்பாளர்களின் ஏஜென்டுகளாக மாறி இருக்கமாட்டார்கள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறீலங்கா தேர்தல்:

# அக்கினிபுத்திர அரசியல்

பரபரப்பாகவும் என்றுமில்லாத அளவு வன்முறைகளுக்கு மத்தியிலும் சிறீலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் நடந்து முடிந்திருக்கின்றது. பதவிக்கு வந்து இரண்டரை வருடங்களைத் தாண்டியுள்ள தற்போதைய சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணியின் மக்கள் செல்வாக்கை எடைபோட்டுப் பார்க்கும் ஒரு தேர்தலாகவும் இது கொள்ளப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலின்போது, பொதுசன ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கா பெற்ற வாக்குகள், அளிக்கப்பட்ட வாக்குளில் அறுபத்தியிரண்டு வீதமாக இருந்தது. ஆனால் இத்தேர்தலில், அது பெற்ற வாக்குகளின் வீதம் நாற்பத்தியெட்டு வீதமாகக் குறைந்துள்ளது. எனினும் இத் தேர்தலிலே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி பெற்ற வாக்கு வீதத்திலும் 7.7% மாத்திரம் கூடுதலாகப் பெற்று உள்ளூராட்சி சபைகளின் எண்பத்தியொரு வீதமான இடங்களைக் கைப்பற்றிக்கொண்டது.

இத்தேர்தல், மோசடி நிறைந்ததென எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. ஐக்கிய தேசிக் கட்சியே தொடக்கி வைத்த இந்த வன்முறை மோசடிக் கலாச்சாரம், இத் தேர்தலில் தாராளமாகவே அரங்கேறியதென தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. ஆளும்கட்சியை அது தனது அறிக்கையில் பல இடங்களில் குற்றவாளியாக்கியுள்ளது.

பெரும் பரபரப்பை இயல்பாகவே உருவாக்கிவிட்டிருந்த சிறு அதிகாரங்களைக்கொண்ட இத்தேர்தலின் போது பிரதான அம்சமாக கவனத்திற்கொள்ளப்பட்டது அதன் தேர்தல் வரலாற்றில் மலிந்துபோயுள்ள வன்முறைக் கலாச்சாரமே. கடந்த தேர்தல் காலங்களைவிட நான்கு மடங்குகளாக அதிகரித்துள்ள இத்தேர்தல் வன்முறைகளுக்கு காரணம் கண்டுபிடிப்பது இலகுவானது. சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தேர்தல் குற்றங்கள் பொலிசில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இரத்தினபுரி பாராளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவல உட்பட இத் தேர்தல் காலத்தில் ஏழு கொலைகள் இடம்பெற்றுள்ளன. தீ வைப்புகள், தாக்குதல்கள், சொத்தழிப்புக்கள் என இப்பட்டியல் மிக நீளமானது.



சனநாயகத் தேர்தலுக்காக, தேர்தலில் மோதிக்கொள்ளும் கட்சிகள் மேடையிலும், பிற பிரச்சார சாதனங்களுக்கூடாகவும் தமது கருத்தை, தமது நிலைப்பாட்டை, தமது கொள்கையை மக்கள் முன் வைத்து.... மக்களுக்கு தெளிவுபடுத்தி மக்கள் ஆதரவைத் திரட்டும் சனநாயகப் பண்புகளை எங்கே தொலைத்தன...? ஆயுதத் துணைநாடி தேர்தலை வெற்றிகொள்ளும் பண்பாடு எப்படி முளைத்தது?

இதற்கு விடை இலகுவானது. தற்போதைய ஆட்சியாளர்களும் சரி, இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்த தற்போதைய எதிர்க்கட்சியினராயினும் சரி.... அல்லது இன்னும் அரசியல் அரங்கில் அங்கம் வகிக்கின்ற சிங்கள இனவாதக் கட்சிகளும் சரி, தமிழ் மக்கள் மீது தீட்டிக் கூர்பார்த்த ஆயுதங்களை தமது கைகளிலேயே தான் வைத்திருக்கின்றன.

தமிழ்மக்கள் மீதான மிலேச்சத்தனமான வெறித்தனமான தாக்குதல்கள், திட்டமிட்ட முறையில் நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகள் சிங்கள அரசுகளாலும் இனவெறிக் கட்சிகளாலும் பௌத்த சிங்கள மேலாதிக்க மனோபாவம் கொண்ட சிங்கள மக்களாலும் அங்கீகரித்து அதற்கு உயரிய அந்தஸ்து கொடுத்து காப்பாற்றப் பட்டுவரும் அந்த மோசமான கலாச்சாரத்தின் நீட்சியின் வெளிப்பாடே தற்போது தெற்கில் நிகழ்ந்துள்ளதும் எதிர்காலத்தில் தொடர இருப்பதும்.

சட்டம் ஒழுங்கைப் பற்றி யார்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவலை கொள்வது...? தமிழன் ஒருவன் சுட்டுத் தெருவில் வீசப்பட்டால்... சுட்டுக்கொன்ற சிங்களவன் சட்டத்தால் பாதுகாக்கப்படுகின்றான். சுடப்பட்ட தமிழன் பயங்கரவாதியாக்கப்படுகின்றான். தமிழிச்சி ஒருத்தி பாலியல் வதைக்கு பலியானால் அக் காடைத்தனத்தைப் புரிந்த சிங்களச் சிப்பாய் பாதுகாக்கப்படுகிறான். பதவி உயர்வுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றான். தமிழ் மக்கள் மீது இனக்கலவரங்கள் என்ற பெயரில் இன அழிப்பை தலைமை தாங்கி நடத்தியவர்கள், பெளத்த சிங்கள மேலாண்மை வெறி ஊட்டப்பட்ட சிங்கள மக்களால் தலைவர்கள் ஆக்கப்படுகின்றனர். சிங்கள தேசத்தின் ஜனாதிபதிகளாகவும் பிரதமர்களாகவும் ஆக்கப்படுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா வாலேயே யாழ் நூலக எரிப்பிற்கு பொறுப்பானவர் என வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டப்பட்ட காமினி திசாநாயக்கா, பின்னர் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக்கப்பட்டார்.

வன்முறைக் கலாச்சாரம் என்பது அவர்களிடையே வேர்விட்டு வளர தமிழ்மக்கள் ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கின்றனர். அவர்களின் அதிகார வேட்கையின் ஆடுகளமாக தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள், அவர்களது கோபத்தையும் சந்தோசத்தையும், வெறுப்பையும் விரக்தியையும் ஏற்றுத் தாங்கும் சுமைதாங்கிகளாக தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள்.

ருசிப்பட்டுப்போன இந்தக் கலாச் சாரத்தின் வெளிப்பாடுதான் இது. ஆக, தமிழர் மீது கூர்பார்க்கத் தீட்டப்பட்ட கத்திகளை அவர்கள் தம்மிடையேயும் கூர்பார்த்துக்கொள்ளுகின்றனர் தேவைகருதி.

நடந்து முடிந்த இத்தேர்தல் முடிவுகள், மாகாண சபைத் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடத்துகின்ற ஊக்கத்தை சந்திரிகா அரசிற்கு கொடுக்கக்கூடும் என்று கருத இடமுண்டு. பல கட்சிகள் இணைந்து அமைக்கப்பட்ட இந்த ஆட்சியைக் கலைத்து தனிப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா ஆர்வம் கொள்வதற்கு காரணங்கள் நிறையவே இருக்கின்றன. ஆட்சியை அமைத்துக்கொண்ட கூட்டணிக் கட்சிகளிடையே முரண்பாடான கருத்துக்களும் நிறைந்துள்ளன. இந்த நிலையில்

# நிராகரிப்பு

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எவர் எவருக்கு ஏமாற்றம் அளித்தனவோ அல்லது இல்லையோ, கொழும்பு நகரத் தேர்தல் முடிவு கொழும்பு மாநகர சபை ஆளும்கட்சி உப்பட தமிழ்க் குழுக்கள் யாவருக்கும் நிச்சயம் ஏமாற்றத்தை அளித்திருக்கும். சிலசமயம் இத்தேர்தல் முடிவானது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆச்சரியத்தைக்கூட அளித்திருக்கும். கொழும்பு மாநகரசபை ஆட்சியைப் பிடித்தல் என்பது நீண்டகாலமாகவே ஆளும்கட்சியினரால் குறிவைக்கப்பட்டதொன்றாகவே இருந்தது; ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முன்னாள் கொழும்பு மேயர் கணேசலிங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைப் பயன்படுத்துவதில் இருந்து வெற்றிக்காகத் தனது சொந்த முகத்தை இழக்கக்கூட பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராக இருந்தது. இதன் காரணமாகவே சுயேட்சைக்குழுவின் கீழ் தனது வேட்பாளரை நிறுத்தியது. இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணி சுயேட்சைக் குழுவினரை நிறுத்தியமையானது கொழும்பு மாநகரில் உள்ள சிறுபான்மை இனங்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதன் மூலம் கொழும்பு மாநகரைத் தமது பிடியில் கொண்டுவந்து விடலாம் என்ற ஒரே நோக்கத்தினாலேயே ஆகும். ஆனால் ஆளும்கட்சியின் குறிக்கோள் மட்டுமல்ல, இவ்விடயத்தில் சந்திரிகாவுக்குத் துணையாக நின்ற தமிழ்க் குழுக்களின் அபிலாசைகள் கூட நிறைவேறவில்லை. அதாவது இவர்கள் எதிர்பார்த்ததுபோல தமிழ் மக்கள் ஆளும்கட்சியையோ அன்றி அவர்களின் பின்னால் நின்ற தமிழ்க் குழுக்களையோ ஆதரிக்கத் தயாராக இருக்கவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் வீரகேசரிப் பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பிட்டது போல் தமிழ் மக்கள் இன்றைய நிலையில் அரசியல் குத்தகை எடுக்க முயலும் எந்தக் கட்சியையும் ஏற்க விரும்பவில்லை என்பதே சரியானதாகும்.

சிறீலங்காவின் தேசியக் கட்சிகளைப் பொறுத்து அவை ஒன்றிற்கு ஒன்று ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுபவையே ஒழிய, தமிழ் மக்கள் பிரச்சினைத் தீர்வு குறித்து நம்பிக்கை ஊட்டுபவையாக என்றுமே நடந்துகொள்ளவில்லை. ஆகையினால் இவர்கள் மீது நம்பிக்கை வைப்பதில் அர்த்தமே இல்லை என்பதைத் தமிழ் மக்கள் தெளிவாக உணர்ந்துகொண்டு விட்டனர். இந்த நிலையில் இக்கட்சியின் வாக்குறுதிகள் எதையும் நம்பி ஒன்று திரண்டு அவர்களுக்கு வாக்களிக்க தமிழ் மக்கள் தயாராக இல்லை. இதே சமயம் இத் தேர்தலில் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களின் நிலைப்பாடும் தமிழர்களை ஏய்க்கவில்லை. முதலில் தேர்தலில் ஒதுங்கியிருப்பது போல் ஒரு நிலையை உருவாக்கியிருந்த இத் தமிழ்க் குழுக்கள் இறுதியில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டன அல்லது நடந்துகொண்டன. ஆனால் தமிழ்க் குழுக்களின் இம்முடிவானது தமிழ் மக்களின் நலன் சார்ந்தது என்பதை விட அக்குழுக்களின் நலன் சார்ந்தது என்பதை நன்றாகவே புரிந்துகொண்ட தமிழ் மக்கள், இவர்களின் கோரிக்கையை முற்றாகவே நிராகரித்தனர். ஏனெனில் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் இனப்பிரச்சினை குறித்து மேற்கொள்ளும் வழிமுறையானது தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. கடந்த காலத்தில் அது தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே அளித்திருந்தது. இதே சமயம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு அளிக்குமாறு கோரிய தமிழ்க்குழுக்கள் மீதும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை. இவர்களின் அரசியல் குறித்து குத்துக்கரணங்களும் சுயநலன் நோக்கிலான அரசியல் அணுகுமுறைகளும் அவர்களினால் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவையாக இருந்தன.

இதே சமயம் தமிழருக்கென புதிய தலைமை கொடுக்க முற்பட்ட கணேசலிங்கத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை. ஏனெனில் இவருக்கு தனித்துவமோ தனிமுகமோ எப்பொழுதும் இருக்கவில்லை என்பதே தமிழ்மக்களின் கருத்தாகும். முதலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் காட்டிய முகத்தைப் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் காட்ட முயன்றார் என்பது தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது. இந்த வகையில் சிங்களக் கட்சியோ அன்றிச் சந்தர்ப்ப அரசியல் நடத்த முனையும் தமிழ்க் குழுக்களோ தமது அரசியல் தலைமையினை குத்தகை எடுப்பதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை என்பதே கொழும்பு மாநகரசபைத் தேர்தல் வெளிக்காட்டும் உண்மையாகும். அதாவது தமிழ் மக்கள் தொடர்ந்து தாம் ஏமாற்றப்பட்டுக் கொண்டு செல்லவதை அனுமதிக்கப் போவதில்லை என்பதை இத் தேர்தலில் வெளிக்காட்டியுள்ளனர் எனலாம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதனையும் உறுதியாகச் செய்யமுடியாத நிலையில், அரசு தடுமாறுகின்றது. அதேபோன்று எதிர்க்கட்சி வசம் இருக்கும் மாகாணசபைகளையும் அபகரித்துக்கொள்ளும் நோக்கமும் சந்திரிகா அரசிற்கு உண்டு. அடுத்த வருடம் நடத்தப்பட வேண்டிய மாகாணா சபைகளையும், அதற்கடுத்த வருடம் நடைபெறவேண்டிய பாராளுமன்றத் தேர்தலையும் இவ்வருடமே நடத்துவது குறித்து சந்திரிகா அரசு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

விடுபட்டுப்போன வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் ஓரிரு மாதங்களில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது. தமிழ்க்கட்சிகளின் பூரண ஒத்துழைப்பை சந்திரிகா அரசு கோரியுள்ளது. ஆக்கிரமித்துக்கொண்ட நிலப்பரப்பில், இராணுவ நிர்வாகத்தை நடத்திக்கொண்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பறிக்கப்பட்ட நிலையில், மக்கள் உயிர்ப்பயத்துடன் நாட்களை நகர்த்தும் சூழ்நிலையில், இத் தேர்தலை நடத்த சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்தில், சனநாயத்தின் பேரால் நடத்தப்படுகின்ற இச் சனநாயக விரோதத் தேர்தலை விடுதலைப் புலிகளும் மக்களும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது ஒருபுறம் இருக்க, இப்போலித் தேர்தலினூடாக தமிழர் பிரதிநிதிகள் என்ற பெயரில் சில மோசடிப் பேர்வழிகள் சந்திரிகா அரசிற்குத் தேவைப்படுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

தமிழ் மக்கள் நீண்ட நெடிய அடக்குமுறையை எதிர்கொண்டவர்கள். முன்னைய ஆட்சியாளர்களின் இனவிரோதக் கொள்கைகளினால் சொல்லொணாத் துயரைச் சுமந்தவர்கள். அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்றுரைத்த சிறீலங்கா சனாதிபதி, பிரச்சைனைகள் எதுவுமே தீர்க்கப்படாமல் துயரங்களைச் சுமந்த நிலையில் உள்ள மக்கள் மீது, அடக்குமுறைகளுக்கு மத்தியிலே ஒரு சனநாயகத் தேர்தலை எப்படிச் சுமத்துவது?.

சந்திரிகா அரசு குறிப்பிடுகின்ற தீர்வுத் திட்டம் இன்னமும் பொதிவடிவிலேயே உள்ளது. அது இன்னமும் பிரிக்கப்படவில்லை, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறவில்லை. அதன்பின்னர் மேற்கொள்ளப்பட உள்ள சர்வசன வாக்கெடுப்பிற்கு தீர்வுத்திட்டம் விடப்படவில்லை.

சந்திரிகா அரசின் கருத்துப்படியே பார்த்தால், தமிழ்மக்களின் துயர் தீர்க்கப்படவில்லை. அவர்களிற்கான உரிமைகள் வழங்கப்படவில்லை. அவர்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை. ஆக, தமிழ்மக்களின் வாழ்வின் துயர் அப்படியே இருக்க, அவர்கள் இன்னமும் உரிமைகள் மறுக்கப்பட்ட அடிமைகளாகவே இருக்க... அப்படியென்ன சனநாயகத் தேர்தல் வேண்டிக்கிடக்கிறது?

முன்னையதிலும் பார்க்க உண்மையில், நிலைமை இன்னம் மோசமடைந்திருக்கின்றது. சந்திரிகா ஆட்சியில் தமிழ்மக்கள் இன்னமும் மோசமாக அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். கேள்வி நியாயமின்றி சுடப்படுகின்றனர். உணவு, மருந்தின்றி வாடிச்சாகின்றனர். தெரு நாய்களைப் போல் தெருவில் வலை வீசிப் பிடிக்கப்பட்டு சிறையில் தள்ளப்படுகின்றனர்.

தமிழர்களை புலிகளிடம் இருந்து மீட்டதாக குடாநாட்டு ஆக்கிரமிப்பை குறிப்பிடும் சந்திரிகாவின் இராணுவ ஆட்சியில், அறுநூறுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர் என, அரசாலேயே நியமிக்கப்பட்ட மனித உரிமைக்குழு தெரிவித்திருக்கின்றது. உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகம் என்றாலும், இதையே கருத்துக்கு எடுத்துக் கொண்டால், இராணுவ அடக்குமுறையின் கோரவடிவம் வெளிப்படுகின்றது.

பாலியல் வதைகள் படுகொலைகள், ஆட்கடத்தல், சித்திரவதை என்பன ஒன்றை மாத்திரம் தெளிவுபடுத்துகின்றது. அதாவது அது ஆக்கிரமிப்பு இராணுவம் என்பதை.

இந்நிலையில், ஒரு சனநாயகத் தேர்தல் குறித்து, சந்திரிகா அரசும் அதன் அடிவருடிக் குழுக்களும் கனவு கண்டு கொண்டிருக்கின்றன.

இனப்பிரச்சினை எதுவுமே இல்லை புலிப்பிரச்சினைதான் உண்டு என்ற விஜயதுங்கா பாணியிலான கருத்துக்கள் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா விடம் இருந்தே தற்போது அரும்ப ஆரம்பித்துள்ளது.

ஆக, அவர்கள் ஆரம்பித்த இடத்தில் நிற்கின்றனர்.

**- சுப்பு**

# மறுகுதல்

**-பு. சிந்துஜன்**

இப்போது;
என்னைச் சுற்றிலும் ஆலோசனைகள்
என்னை நெருங்கிவரும் மற்றவரும்
அள்ளித் தெளிக்கின்றனர்

மலேரியா வந்து சாகாதை!
பாம்புக் கடி வாங்காதை!
காடு கரம்பைக்க கிடக்காதை!
தன்னந் தனியனா அலையாதை!

மீளவும் மீளவும்
என்னைச் சுற்றிலும் ஆலோசனைகள்

இவரின் நடுவே;
ஒற்றைப் பனையாய்
தனியன் யானையாய்
கூட்டம் பிரிந்த குட்டிக் குரங்காய்;
நான்

வீட்டிலிருந்து வரமொரு கடிதம்,
நாணயக் கயிறாகச் சுண்டும்.
"படித்தது வரை காணும்,
தாமதிக்காதை; வீட்டுக்கு வா"

என் மனக்கண்முன்னே;
ஒன்றாய் உலவி ஒருவராய் வாழ்ந்து
நாங்கள் வாழத் தாம் வீழ்ந்த
உறவுகள் முகமும்
அவரின் காப்பில் நாங்கள் வாழ்ந்த
குருவிக் கூட்ட வாழ்வும்....

இப்போதும்
என்னைச் சுற்றிலும் ஆலோசனைகள்
என்னை நெருங்கியவரும் மற்றவரும்
அள்ளித் தெளிக்கின்றனர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா கடற்படைக்கான நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல்கள் கொள்வனவில் முறைகேடு!

சிறீலங்கா கடற்படைக்கு நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல்களான 'கிரிஷா 5' ரக கப்பல்களை, கொள்வனவு செய்யும் விடயத்தில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக 'சண்டே ஐலண்ட்'டின் பாதுகாப்புச் செய்தியாளர் கூறுகிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ;

சிறீலங்கா முப்படையினருக்கும் மூன்றாவது ஈழப் போர் ஆரம்பித்த தன் பின்னர் பெரியளவில் ஆயுதக் கொள்வனவு செய்யும் வாய்ப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அளித்தார்.

இதன் போது முப்படையைச் சேர்ந்தவர்களும் 25–இற்கும் அதிகமான நாடுகளுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்யப் புறப்பட்டுச் சென்றனர்.

இவர்களில் கடற்படைக் குழு ஒன்று 'சப்சேஸர்' ரகத்தில் உள்ள பாரிய போர்க்கப்பல்களை கொள்வனவு செய்வதற்காக ரஷ்ய கடற்படையை அணுகியது. ஒவ்வொன்றும் எட்டரைக் கோடி ரூபா பெறுமதியுடைய இரண்டு சப்சேஸர்களை கொள்வனவு செய்வதென தீர்மானித்து பத்து சதவீதமான பணம் முற்பணமாகவும் கொடுக்கப்பட்டது.

இதையடுத்து கடற்படையதிகாரிகளின் குழுவொன்று இக் கடற்கலங்களின் திறனை அறிவதற்காக கடற்படை உயரதிகாரியான ரியர் அட்மிரல் ரெறன்ஸ் சுந்திரம் தலைமையில் ரஷ்யா சென்றது. ஆனால், ரஷ்யா சென்று மொஸ்கோவிலும், சென் பீற்றர்ஸ்பேர்க்கிலும் ஒருமாத காலத்திற்கும் மேலாக தங்கியிருந்தும் அவர்களுக்கு சப்சேஸர்கள் காண்பிக்கப்படவில்லை: மாறாக ரஷ்ய தரப்பிலிருந்து தாமதத்திற்கு மன்னிப்புக் கோரும் வேண்டுகோள்களே திரும்ப திரும்ப விடுக்கப்பட்டிருந்தன: இறுதியாக – ஒரு சப்சேஸர் சிறீலங்கா கடற்படைக் குழுவுக்கு காண்பிக்கப்பட்ட போதும், அது வேறொரு நாட்டுக்கு விற்கப்பட்டுவிட்டதாகவே கூறப்பட்டது.

இதற்குப் பின்னர் அக் கடற்படைக் குழு முற்பணம் செலுத்தியும் சப்சேஸர்களை கொள்வனவு செய்யாமலேயே சிறீலங்காவுக்கு திரும்பியது.

இதன் பின்னரே – 'கிரிஷா 5' ரகத்திலான சிறியளவிலான நீர்மூழ்கி எதிர்ப்பு யுத்தக் கப்பல்களை கொள்வனவு செய்யுமாறு ரஷ்யத் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆனால் இந்த ரக யுத்தக் கப்பல்கள் பொருத்தமற்றவை எனக்கூறப்பட்ட போதும், அவை விடாப்பிடியாக கொள்வனவு உடன்பாடு காணப்பட்டிருக்கிறது.

இத்தகைய கப்பலொன்றை காத்துக் கொள்வதற்கே நான்கு, ஐந்து டோறாக்கள் தேவையாக இருக்கின்றன. இந்த நிலையில் இக் கப்பல்களால் என்ன பயன் விளையப் போகிறது?

இது போன்ற கப்பல்களை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக ஆறு டோறாக்களையாவது அல்லது இருநூறுக்கும் அதிகமான கரையோர ரோந்துப் படகுகளையாவது அதேயளவு பணத்தில் கொள்வனவு செய்திருக்கலாம் என 'சண்டே ஐலண்ட்'டின் பாதுகாப்பு செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார். ★

# என் பாடல் உன் செவியேறுக

– ஆதிலட்சுமி சிவகுமார் –

பீரங்கிப் பூதங்களால்
நிலம் அதிர்ந்த நீள் பொழுதில்
நீயும் நானும்
திசைக்கொன்றாய் சிதறினோம்!
இருவருக்குமிடையே
பேயிருளைப் பூசிக்கொண்டு
பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறது கிளாலிக்கடல்!
கடல் தாவி ஓடிவரும் காற்றில்
கந்தக நெடியின் கலப்புத் தெரிகிறது!
நீ இல்லாத பொழுதுகள் எல்லாம் – என்னை
நெருப்பாய்ச் சுடுகின்றன!
என்னைக் கடந்து வரும்
"டியூறாலுமினிய" பறவைகள்
எச்சமிடும் போதெல்லாம்
நெஞ்சகம் சுக்குநூறாக்கிச் சேர்கிறது!
இனந்தெரியாப் பரபரப்பு என்னைச் சூழ



காயமடைந்தவர்
கைதுசெய்யப்பட்டவர்
பாலியல் பலாத்காரத்துக்குள்ளாக்கப்பட்டவர்
பட்டியல்களையெல்லாம் தேடிப்பார்க்கிறேன்!
இனியவளே,
நீ எங்கிருக்கிறாயோ..... நானறியேன்
நிலவின் ஒளியைத் தேக்கிவைத்திருக்கும்
நின் விழிகளைத் தரிசிக்க ஆவல் உந்துகிறது!
கனவுத் தேவதையின்
கவிமொழி கேட்க அவாவுகிறது!
உன்னை
வந்தடையும் வழியை நாடிக்கொண்டிருக்கிறேன்!
வரும் நாள் வெகுதூரமில்லை.... அதுவரையும்
உனது பாடலை இசைத்துக்கொண்டிருப்பேன்!
எனது பாடல் –
உனது செவிகளில் ஒலிப்பதாகுக!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆனையிறவு - பரந்தன் 'அழித்தொழிப்புத் தாக்குதல்'

# ஓர் உயர் பரிமாண கெரில்லா நடவடிக்கை

**கெரில்லாப் போர் முறையின் உயர் பரிமாண தாக்குதல் வடிவத்தில், விடுதலைப் புலிகளின் படையமைப்பு கண்டுள்ள இன்னொரு படிநிலை வளர்ச்சியின் வெளிப்பாடு இது**

குடாநாட்டிற்கும் – வன்னி நிலப்பரப்பிற்கும் இடையிலிருந்த ஆனையிறவு, மற்றும் பரந்தன், படைத்தளங்களின் கூட்டு வலயம் மீது ஜனவரி 9ஆம் நாள் புலிகள் நிகழ்த்திய பெரும் அதிரடித் தாக்குதலானது –

எதிரியின் பாரிய (படைக்கல + வெடிப்பொருள்) சுடுசக்தியை அழித்தொழிப்பதற்காக மட்டுமல்லாமல், அடுத்த படையெடுப்பு ஒன்றிற்கான பெருமெடுப்பிலான தயார்ப்படுத்தலில் முழுமையாக ஈடுபட்டிருந்த எதிரியின் முன் முனைவை முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

நுட்பமான திட்டம் வரைந்து, சரியான காலத்தைத் தேர்வு செய்து படையணிகளை நகர்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களின் கண்காணிப்பின் கீழ், தளபதிகளால் வழிநடத்தப்பட்ட புலிவீரர்கள், கணிக்கப்பட்டதற்கும் குறைவான நேர எல்லைக்குள் இலக்குகளை வீழ்த்தி, தாக்குதலின் நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்த பின்னர், களத்திலிருந்து வெளியேறினர்.

கடத்தல்காரர்களைப் பிடிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் சோதனை நிலையம், 83–ற்குப் பின் இராணுவத் தடைமுகாமாகி, 90–ற்குப் பின்னான ஆறு வருட காலத்தில் வெற்றிலைக்கேணி – கட்டைக்காடு – இயக்கச்சி – பரந்தன் – கிளிநொச்சி எனப் படிப்படியாக விரிவாகி, பெரும் பல கூட்டுப் படைத்தளத் தொகுதியாக (Military Companion) உருப்பெற்றது.

தமிழீழப் போரின் எல்லாக் காலங்களிலுமே, வட போரரங்கின் களநிலவரத்தைத் தீர்மானிக்கும், தவிர்க்கமுடியாத சக்தியாகவும் குறிப்பிடத்தக்க அரசியற் தாக்கங்கள் நிகழ்வதற்கு வல்லமை பொருந்திய காரணியாகவும், ஆனையிறவை மையமாகக் கொண்ட படைத் தளத் தொகுதி விளங்கிவருகின்றது.

யாழ்ப்பாணக் கடல்நீரேரியைக் குறுக்கறுக்கும் தனியொரு நிலவழிப் பாதையை மட்டுமேயுடைய குடாநாட்டின் நுழைவாயிலில் அது பெற்றிருக்கும் அமைவிடம்தான், அத்தகைய முதன்மைப் பாத்திரத்தை அதற்குக் கொடுத்திருக்கிறது.

கடந்த 13 வருட யுத்தத்தில் வட போரரங்கில் இருவேறு பரிமாணப்பட்ட, இருவேறு பணிகளை, இருவேறு காலகட்டங்களில் ஆனையிறவுத் தளம் ஆற்றியது; ஆற்றிவருகின்றது.

முன்னையதை – முற்றுகைக்கான முதன்மைத் தடைத்தளம் எனலாம்; பின்னையதை – நடவடிக்கைக்கான முன்னரங்கத் தாக்குதற்தளம் எனலாம்.

குடாநாட்டில் புலிகள் நிலக்கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த முற்காலத்தில், சிங்களத் தலைமை கையாண்ட குடாநாட்டை முற்றுகையிட்டுப் பணியவைக்கும் தந்திரோபாயத்தின் பிரதான செயலாக்கக் களமாக, குடாநாட்டின் வாயிற் தடுப்பாக, ஆனையிறவுத்தளம் இருந்தது. பெருப்பித்து, பலப்படுத்தி, வெற்றிலைக்கேணிக் கடல்வரை விரிவாக்கி, கொம்படி, ஊரியான் வழிப் பாதையையும் மறித்து, குடாநாட்டுக்கான தரைப்பாதைகளை இறுக மூடும் ஒரு தடைமுகாமாகவே ஆனையிறவை எதிரி வைத்திருந்தான். வெளியிலிருந்து உள்ளுக்கும், உள்ளிருந்து வெளியிற்கும்,



புலிகளின் நகர்வுகளை நிறுத்துவது மட்டுமே அதன் பணி. 'யாழ்தேவி' நடவடிக்கையைத் தவிர வேறெந்தப் படையெடுப்புத் தாக்குதல் முயற்சிகளையும் எதிரி ஆனையிறவிலிருந்து எடுக்கவில்லை. அப்போது, வடக்குப் போரரங்கின் பிரதான படையெடுப்பு முன்னரங்கக் களமாகப் பலாலிப் படைத் தளத் தொகுதியே திகழ்ந்தது.

குடாநாட்டிலிருந்து பின்வாங்கிய புலிகள், வன்னி நிலப் பெரும் பரப்பின் நிலக்கட்டுப்பாட்டைத் தொடர்ந்தும்




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்த பிற்காலத்தில், முற்று கைத் தடைத்தளம் என்ற தனது முன் னைய பாணியிலிருந்து, யுத்தத்தின் முன்னரங்கத் தாக்குதற் தளமாக ஆனை யிறவு மாற்றப்பட்டது. அதாவது, குடா நாட்டிலிருந்த தமது செயற்பாட்டு மையத்தையும், பெரும் பேரணிகளை யும் புலிகள் வன்னிக்கு நகர்த்தியதன் பின்பு – நிர்வாக ஆதிக்கத்தைச் செலுத் தித் தமது மையச் செயற்பாட்டுத்தளப் பிராந்தியமாகப் புலிகள் கட்டுப்பாட் டைக் கொண்டிருக்கும் நிலப் பகுதி களை மீளவும் ஆக்கிரமிப்பதற்கான சிங்களத்தின் பிரதான படையெடுப்பு பொருதுகளம், பலாலியிலிருந்து ஆனை யிறவுக்கு மாறியது. பீரங்கிக் கவச வண்டிகள் (Main Battle Tanks) கவசத் துருப்புக் காவிகள் (Armoured Personnel Carriers), 'ஆட்டிலறி றெஜிமென்டி'ன் பிரிவுகள் (Batteries of Artillery Regiment), பல பத்தா யிரம் எறிகணைகள் மற்றும் வெடிப் பொருட்களைக் கொண்ட களஞ்சியங் கள் (Caches of ammunition dumps) என, பாரிய சமர்க்களங்களுக்குத் தேவை யான போர்த்தளபாடங்கள் ஆனையிற வில் குவிக்கப்பட்டன. அனைத்து வளங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, முன்கள – பின்கள ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு, மூர்க்கமான மரபுமுறைச் சமர் அரங்குகளைத் திறக்கத் தயாரான உச்சப் பலமுடையதாக ஆனையிறவுத் தளம் உருவெடுத்தது.

ஆனையிறவிலிருந்து 3 கட்டங்க ளாக 'சத்ஜய'வில் படையை நகர்த்தி, கிளிநொச்சியைக் கைப்பற்றி, தன் துருப் புக்களைப் பலமாக நிலைகொள்ள வை த்த சிங்களத்தின் படைத்துறைத் தலை மை ஆனையிறவிலிருந்தான அடுத்த – முக்கிய பெரும் படையெடுப்பு ஒன்றிற் கான தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே, புலிகளின் 'அழித் தொழிப்புத் தாக்குதல்' நிகழ்த்தப்பட் டது. ஆனையிறவுப்படைத் தளத் தொகுதியின் தென்பகுதியும், கிளிநொச் சிப் படைத்தளத் தொகுதியின் வட பகுதியுமே புலிகளின் தாக்குதல் வலய மாகும்.

7ஆவது பிரிகேட் நிறுத்தப்பட்டுள்ள ஆனையிறவுத் தளத்தையும், 19 ஆவது பிறிகேட் நிறுத்தப்பட்டுள்ள வெற்றிலைக் கேணித் தளத்தையும் உடைய ஆனை யிறவுப் படைத்தளத் தொகுதி, மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகராவின் கட் டளைப் பணிப்பின் கீழ், தடைமுகாமி லுள்ள "2ஆவது சிறப்புப் பணிப்




படைப்பிரிவு (Task Force - 2) மையச் செயலகத்தைத் தலைமையக மாகக் கொண்டு இயங்குகின்றது.

10 ஆவது பிரிகேட் நிறுத்தப்பட் டுள்ள பரந்தன் தளத்தையும், 541 ஆவது, 542 ஆவது, 543 ஆவது பிரிகேட்கள் நிறுத்தப்பட்டுள்ள கிளிநொச்சியைச் சூழவுள்ள பகுதித் தளங்களையும் கொண்ட கிளிநொச்சிப் படைத் தளத் தொகுதி, பிரிகேடியர் வசந்த பெரேரா வின் கட்டளைப் பணிப்பின் கீழ், கிளிநொச்சியிலுள்ள 54 ஆவது டிவி சன் (54 DIV) மையச் செயலகத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கு கின்றது.

புவியியல் ரீதியாக, யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் இருபுறங்களிலும் – குடாநாட்டு நிலப்பரப்பையும் வன்னி நிலப்பரப்பையும் உள்ளடக்கியதாக – அமைவிடத்தைக் கொண்டுள்ள ஆனை யிறவுத் தளத்தின் வன்னி நிலப்பகுதி மீதும் –

அதன் தொடராகப் பரந்தன் சந்தி வரை நீளும் பரந்தன் தளத்தின் மீதுமே, புலிகளின் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

தாக்குதல் வலயத்திற்குள் விஜய பாகு றெஜிமென்ரின் 2 அல்லது 3 பற் றாலியன்களும், சிங்க றெஜிமென்ரின் 1 பற்றாலியனும் நிலைகொண்டிருந்தன. இவற்றில், விஜயபாகு றெஜிமென்ற் ஒரு பற்றாலியனாலும், சிங்க றெஜி மென்ரின் ஒரு பற்றாலியனாலும் பாது காக்கப்பட்ட மிகப் பின் பகுதிக்குள் – ஆனையிறவுத் தளத்தில் – 'ஆட்டிலறி' றெஜிமென்றின் சுடுகலப் பிரிவுகள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனையிறவு சந்தையடி முகாமே 'ஆட்டிலறி' சுடுதளமாகும். உயர்ந்த பெரும் மண் அணை அரணுக்கு உள்ளே 122 மில்லி மீற்றர் 'ஆட்டிலறி'கள் 8 ஒன்றாக வைக்கப்பட்டிருந்தன. தென் மேற்குத் திசை நோக்கி இரண்டும், தெற்குத் திசை நோக்கி மூன்றும், தென் கிழக்குத் திசை நோக்கி மூன்றுமாக அவை நின்றன. அவைக்குப் பின்னால், வேறாக, 130 மில்லி மீற்றர் 'ஆட்டிலறி'கள் இரண்டும், 122 மில்லிமீற்றர் 'ஆட்டிலறி' ஒன்றும் என மேலும் மூன்று – எந்தத் திசை நோக்கித் தாக்கவும் தயாரான வாய்ப்புக்களுடன் – தென் திசை நோக்கியதாக நிறுத்தப்பட்டிருந்தன. அத்தோடு, சுடுவதற்கு தயார் செய்யப்பட்ட நிலையிலும் தயார் செய்வதற்கு ஆயத்தமான நிலையிலும் ஆயிரக்கணக்கான எறிகணைகள் சுடுதளத்தில் வைக்கப்பட்டிருந்தன.

இதற்கு அடுத்திருந்த பாடசாலை முகாம், 'ஆட்டிலறி' சுடுதளத்திற்கான முழுமையான விநியோகத்தைச் செய்யும் வெடிப்பொருட் களஞ்சியமாகும். கிளிநொச்சிப் பகுதி மீது நிகழ்த்தக்கூடிய எதிரியின் தாக்குதலொன்றை எதிர்கொள்ளப் போதுமான அளவுக்கும், திட்டமிடலிலிருந்த அடுத்த பெரும் படையெடுப்பிற்குத் தேவையான அளவுக்கும் அங்கு எறிகணைகள் சேமிக்கப்பட்டிருந்தன. அவை பல பத்தாயிரக் கணக்கானவை என நம்பமுடிகின்றது.

மண் அணைகள், முட்கம்பி வேலிகள் எனத் தம்மைச் சுற்றி வழமையான பாதுகாப்பு அம்சங்களுடனிருக்க அந்தச் சுடுதள, களஞ்சிய முகாம்களுக்குப் பாதுகாப்பளித்து....

பெரிய உப்பள, சுற்றுலா விடுதி முகாம்களிலும், மேற்கே நீரேரி வழியாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க சின்ன உப்பள முகாமிலும், கிழக்கே நிலப்பகுதியூடாக வரக்கூடிய தாக்குதலை முறியடிக்க தட்டுவான்கொட்டி அம்மன் கோவிலடியில் இரண்டு மினி முகாம்களிலும், மேற்கில் ஒரு கிலோ மீற்றருக்கப்பாலும், கிழக்கில் இரண்டு கிலோ மீற்றருக்கப்பாலுமுள்ள முன்னணி வரிசைக் காப்பரண்களிலுமாக ஆயிரத்துக்கும் குறையாத துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறாக, ஆழமான – பிரமாண்டமான – இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் துவம்சம் செய்து நுழைந்த புலிவீரர்கள், பீரங்கிச் சுடுதளத்தையும், வெடிப்பொருட் களஞ்சியத்தையும் கைப்பற்றி முழுமையாக நிர்மூலம் செய்தனர். தாக்கப்பட்டவர்களுக்குத் துணையாகத் தடைமுகாமிலிருந்து விரைந்தவர்களைத் தாக்கி ஒரு 'டாங்க்'கையும் அழித்தனர்.

இதற்கிடையே – கிளிநொச்சிப் பகுதி இராணுவ நிலைகளை நோக்கியும், 'TF–2' தலைமையகமான தடைமுகாம் மீதும், கைப்பற்றிய எதிரியின் 'ஆட்டிலறி'களாலேயே தாக்கி –

தடைமுகாமிலிருந்த பிரதான வெடிபொருட் களஞ்சியத்தை வெடித்து எரியச்செய்து அழித்தனர். இந்த 'ஆட்டிலறி'த் தாக்குதலின்போது, அங்கு தரித்திருந்த 7 இற்கும் குறையாத யுத்த 'டாங்க்'குகளும் தகர்த்தழிந்ததாக நம்பகமாக அறியக்கிடைக்கின்றது. இந்த தொகை 18 இற்கும் அதிகமென படைவட்டாரங்களை மேற்கோள் காட்டி 'வீரகேசரி' (12.01.1997) கூறியது.

**'றிவிரச' படையெடுப்பிற்கு முன்னர் பலாலித் தளத்திலிருந்த அதே பலம், அல்லது அதைவிடவும் கூடுதல் பலம், ஆனையிறவில் குவிக்கப்பட்டிருந்தது என்பதுவே, அந்தத் தளத்தின் பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் கற்பனையிலேயே கணித்துக்கொள்ளப் போதுமானது.**

மறுபுறத்தே, ஆனையிறவுத் தளப்பகுதி எதிரிக்குக் கிளிநொச்சியிலிருந்து உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக –

உமையாள்புரம், இரசாயனத்தொழிற்சாலை, குமாரபுரம் முகாம்களையும், பிரதான வீதிக்கு மேற்கில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலும், கிழக்கில் இரண்டு கிலோமீற்றர் தூரத்திலுமுள்ள முன்னணி வரிசைக் காப்பரண்களையும் கொண்டதாக, ஆயிரத்திற்கும் குறையாத துருப்புக்களுடனுமிருந்த பரந்தன் தளத்தையும் தாக்கிய புலிகள் –

பரந்தன் சந்திப் பகுதியில் ஒரு 'டாங்க்'கையும், ஒரு Buffle கவசவண்டியையும் தாக்கியழித்ததுடன், 10 ஆவது பிரிகேட் மையச் செயலக உமையாள்புரம் முகாமிலிருந்து 120 மில்லி மீற்றர் மோட்டார்கள் மூன்றை முழுமையாகவும், மேலும் இரண்டை சேதப்பட்ட நிலையிலும் கைப்பற்றினர்.

ஒட்டுமொத்தமான இந்த நடவடிக்கையில் புலிகளின் 150 வீரர்கள் களப் பலியாகினர். படையினர் தரப்பில் 300 பேர் வரையானோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான ஆயுதங்களையும், கணிசமான தொகை வெடிபொருட்களையும் புலிகள் கையகப்படுத்தினர்.

தமிழீழப் போரில், இந்தத் தாக்குதலின் போரியல் கனபரிமாணம் புதியது; இது ஒரு துணிகரமான முயற்சி.

1991 ஆம் ஆண்டு தாக்க முற்பட்டுத் தோல்வியடைந்த அதே தளத்தை, ஐந்தாண்டுகளின் பின்பு, பலம் பொருந்திய நிலையில் இருந்தபோதும் வெற்றிகரமாகத் தாக்க முடிந்தது என்பது, எதிர்காலத்தின் எதிர்வுகூறல்.

கெரில்லாப் போர் முறையின் உயர் பரிமாண தாக்குதல் வடிவத்தில், விடுதலைப் புலிகளின் படையமைப்பு கண்டுள்ள இன்னொரு படிநிலை வளர்ச்சியின் வெளிப்பாடு இது.

'றிவிரச' படையெடுப்பிற்கு முன்னர் பலாலித் தளத்திலிருந்த அதே பலம், அல்லது அதைவிடவும் கூடுதல் பலம், ஆனையிறவில் குவிக்கப்பட்டிருந்தது என்பதுவே, அந்தத் தளத்தின் பிரமாண்டமான தோற்றப்பாட்டைக் கற்பனையிலேயே கணித்துக்கொள்ளப் போதுமானது.

ஒருபுறம் கிளிநொச்சியில் 22 சதுர கிலோ மீற்றர் வரையான பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த 4000 வரையான துருப்புக்கள், மறுபுறம் ஆனையிறவிலிருந்து வெற்றிலைக்கேணிக் கடல்வரை நீளும் பெரும் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த இன்னும் சில ஆயிரம் படையினர் என –

முழுமையான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட ஒரே தொடராக நீளும் பாரிய பல்கூட்டுப் படைத்தளத்தொகுதியினுள் 2000 வரையான துருப்புக்கள் நிறுத்தப்பட்டிருந்த 25 சதுர கிலோ மீற்றர் வரையான நடுப்பகுதி வலயத்தை மட்டும் தேர்வு செய்து, ஊடுருவி துண்டறுத்துத்தாக்கி பெரும் அழிவைக் கொடுத்ததென்பது, புலிகளால் ஈட்டப்பட்ட ஒரு மாபெரும் இராணுவ சாதனையேதான்.

எனவேதான், 'சண்டே ரைம்ஸ்' இதழின் போர்த்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் அவர்கள் "அகன்ற



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும் பரப்பில் அமைக்கப்பட்டிருந்த இந்த தொடர் படைத்தளங்களின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், 13 வருட யுத்தத்தில் சிங்களப்படைக்கு ஏற்பட்ட ஒரு வடு” எனச் சொல்கின்றார்.

அழிக்கப்பட்ட பீரங்கிகளும் வெடி பொருட்களும் மீட்டெடுக்கப்பட்டிருந்தால், தமிழர் போராட்டத்தில் அற்புதங்கள் நிகழ்ந்திருக்கும். அவை தமக்குக் கிடைக்கவில்லை என்பது எம் மக்களின் ஆறாத ஆதங்கம்.

ஆனால், புவியியல், மற்றும் இராணுவக் காரணங்களால் அவற்றைக் கொண்டுவரமுடியாமல் போகலாம் என்பது திட்டமிடலின் போதே உணரப்பட்டதால்தான், அழித்தொழிக்கும் வழி வகையும் செய்யப்பட்டது.

அத்தோடு – ஆனையிறவிலிருந்து எதிரி ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த பெரும் படையெடுப்பு ஒன்றைத் தடுப்பதற்காக, அவனது மிகப்பெரும் சுடு சக்தி அவனிடமிருந்து இல்லாமற் செய்யப்படவேண்டும் என்பதே புலிகளின் அவசர இலக்காகவும் இருந்தது.

அதற்காக, ஆனையிறவிலிருந்து, அல்லது வேறெங்குமிருந்து எதிரி இனி மேல் படை நகர்வையும் எடுக்கமாட்டான் என்பதல்ல.

இப்போது – எந்த முனையிலிருந்தும், எந்த நேரத்திலும் இன்னொரு படையெடுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது எதிர்பார்க்கப்படுகின்றது.

புலிகளின் படையணிகள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வேளையில்தான், ஆனையிறவு – பரந்தன் தாக்குதலானது, எமது மக்களுக்கு ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையையும், எதிரிகளுக்கு ஒரு சந்தேகமற்ற எச்சரிக்கையையும் கொடுத்துள்ளது.

ஆனையிறவைப் பின்தளமாகக் கொண்டு நகர்த்தப்பட்ட படையெடுப்பின் மூலமாக, ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் பரந்தன் பகுதி கைப்பற்றப் பட்டது என்பதால் –

புலிகளின் பகுதிகளுக்குள் படைகளை நீள நகர்த்தி அகன்று பரவி நிலை கொள்ள வைக்கும் மூலோபாயம் எதிர்காலத்தில் தோல்வியிலேயே முடியும் என்பது எதிரிகளுக்கான எச்சரிக்கை!

இவ்வாறாக, எதிரிகளின் ஆக்கிரமிப்பு நிலைகள் மீது ஆற்றல் மிகு தாக்குதல்களை நிகழ்த்தும் புலிகள், எதிர்காலத்தில், சிங்கள ஆக்கிரமிப்பை நிரந்தரமாகவே முறியடிப்பர் என்பது எமது மக்களுக்கான உறுதியான திடமான நம்பிக்கை. ★

## மூலோபாயத்தில் மாற்றம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் புதிய தந்திரோபாயம் தேவையென சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் உணரப்பட்டுவருவதோடு பரவலாகப் பேசப்படும் ஒன்றாகவும் மாறி உள்ளது. அண்மைக் காலத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் பாரிய தாக்குதலுக்கு இராணுவம் ஈடுகொடுக்க முடியாதுள்ளதோடு பெரும் உயிரிழப்பும் ஆயுத தளபாட இழப்பு அல்லது அழிவு ஏற்படுவதே இவ்வாறான கருத்து தீவிரமாக வளர்ந்து வருவதற்குக் காரணமாகும். தேசிய இனப்பிரச்சனை ஒன்றிற்கு இராணுவத் தீர்வு என்பது நடைமுறைச் சாத்தியமற்றதொன்று என்பது வரலாற்று புகட்டும் பாடமேயாகும். அதிலும் விடுதலைப் புலிகள் போன்ற ஆற்றலும் மதிநுட்பமுமிக்க ஒபி அமைப்பினை இராணுவத் தீரிவில் வெற்றிகொள்வது என்பது இயலாத ஒன்று என்பதைக் கடந்தகால அல்லது நிகழ்கால களநிலவரங்களே உணர்த்தப் போதுமானவையாகும்.

ஆகையினால் விடுதலைப்புலிகளுடனான போரை எந்த மூலோபாயத்தின் அடிப்படையில அமைத்துக் கொண்டாலும் சரி எந்த தந்திரோபாயத்தின்படி முன்னெடுத்துச் சென்றாலும் சரி சிறீலங்கா இராணுவத்தினால் புலிகளை வெற்றிகொள்ளமுடியாது என்பது வெளிப்படையானதொன்று. இந்த நிலையில் சிறீலங்கா இராணுவம் கைக்கொள்ளும் மூலோபாயமும் சரி தந்திரோபாயமும் சரி புலிகளை வெல்வது என்பதைவிட இராணுவத்தைப் பாதுகாப்பு என்ற நோக்கிலேயே இருக்கமுடியும். ஆனால் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமானது இவ்வாறானதொரு மூலோபாயத்தையோ தந்திரோபாயத்தையோ கைக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது போல் சந்திரிகா அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் கொண்டதும், திட்டமிடப்படாததுமான போர்த் தந்திரோபாயங்களால் கிழக்கிலும் வடக்கிலும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தம் உயிர்களை இழந்து வருகின்றனர் என்பது சரியான கூற்றே ஆகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் புலிகளுக்கு எதிராக அதுவரை கடைப்பிடித்து வந்த மூலோபாயத்தை தலைகீழாக மாற்றியது. அப்பொழுது கிழக்கில் இருந்த இராணுவத்தின் கவனம் முற்றிலும் வடக்கிற்கு மாற்றப்பட்டது. வடக்கை, குறிப்பாக யாழ்குடாநாட்டை கைப்பற்றுதல் மூலம் புலிகளை முற்றிலுமாகத் தோற்கடித்து விடலாம் என்பது அதன் மூலோபாயமாக இருந்தது. ஆனால் இம் மூலோபாயத்தின் அடிப்படையில் போரை நடத்துவதில் வெற்றி கிடைக்கப்பெறாது என்று இராணுவதரப்பில் ஒரு தரப்பினர் கருதினர். இதற்கு யாழ் குடாநாடு மட்டும் கைப்பற்றப்படுவதனால் போராட்டம் தோற்கடிக்கப்படப் போவதில்லை என்ற கருத்தை முன்வைத்தனர். குறிப்பாக வன்னியை வெற்றி கொள்ள முடியாது என்பதும் கிழக்கைத் தொடர்ந்து தக்கவைக்க முடியாது என்பதும் அவர்களின் அறிவுரையாக இருந்தது. இதனால் இம்மூலோபாயம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. இதே போன்றே புதிய மூலோபாயத்தின் அடிப்படையில் யாழ் குடாநாட்டை முதலில் கைப்பற்றும் போர் முறைத் தந்திரோபாயம் குறித்தும் பலமாக விமர்சனம் எழுந்தது. தரைவழிப்பாதை ஒன்று திறக்கப்படாமல் யாழ்குடாநாட்டை கைப்பற்றுவது ஆபத்தானதாக முடியும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டது. ஆனால் சற்றும் பொருட்டாகக் கொள்ளப்படவில்லை. அத்தோடு யாழ் குடாநாடு மீதான படையெடுப்பு நடைபெறின் புலிகள் எவ்வாறு தமது மூலோபாயத்தையும் யுக்திகளையும் வகுத்துக் கொள்கிறார்கள் என்றோ, எதிர்காலப் போர் முனையில் ஆயுத தளபாட ரீதியில் ஏற்படக் கூடிய மாற்றங்களையோ மதிப்பிடவில்லை. எடுத்துக்காட்டாகக் கூறுவதானால் புலிகளின் கவனம் கிழக்கு நோக்கித் திரும்பும் என்றோ யுத்தகளத்தில் எறிகணைகள் வகிக்கப்போகும் பங்கையோ பற்றி அவர்கள் கவனம் செலுத்தவில்லை. இவற்றின் வெளிப்பாடே இராணுவம் இன்று எதிர்நோக்கும் பெரும் இழப்புகளுக்குக் காரணமாகியுள்ளது. இதனால்தான் புலிகளின் தாக்குதலினால் ஏற்படும் பெரிய அளவிலான உயிரிழப்பு மற்றும் பாரிய இராணுவ தளபாட இழப்புகளில் இருந்து காப்பாற்றிக்கொள்ள புதிய மூலோபாயம் தேவையென்று குரல் எழுந்துள்ளது. இருப்பினும் இதனை அரசாங்கம் ஏற்றிக்கொள்ளுமா என்பது கேள்வியே ஆகும். ஆனால் அரசாங்கம் இதைப் புறந்தள்ளுமானால் விரைவிலேயே அது இன்னமும் பாரிய இழப்புகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதே நிச்சயம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்னையர் திலகம்

## பூபதி கணபதிப்பிள்ளை

சிறீலங்கா இனவாத அரசால் ஒடுக்கப்படுகின்ற தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையைக் காப்போம், சுதந்திரத்தை நிலை நாட்டுவோம் என்று புறப்பட்ட இயக்கங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர ஏனையவை சுவடு தெரியாமல் அழிந்து போயின; சில ஏகாதிபத்தியத்தால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

இந்நிலையில் பிரஜைகள் குழுக்கள் போன்ற மக்கள் ஸ்தாபனங்கள், இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தன.

தொழிலாளர் சங்கங்களும், மாணவர் சங்கங்களும் இணைந்து அரசிற்கெதிரான பல உண்ணாவிரதப் போராட்டம், ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்ற வெகுஜனப் போராட்டங்களை நடத்தினர்.

இச்சமயம் அன்னையர் முன்னணி, மிதவாத அரசியல் நிலையைக் கடைப்பிடிக்கும் ஒரு சுயாதீன அணியாக நின்று போராட்டங்களை நடாத்தியது.

இவ்வமைப்பு தமிழ் மக்களின் எல்லையில்லா நலன்கருதி எமது பிரச்சனை சம்மந்தமாக நிரந்தரமான தீர்வை, ஒரு புரட்சிகரமான தீர்வை முன்வைக்கவில்லை.

இவர்கள் முன் வைத்த, நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை அரசு கடைப்பிடிக்க வேண்டும், பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒரு தற்காலிகமான அமைதியையும், நிம்மதியையும் ஏற்படுத்தக்கூடியனவாகவே இருந்தன. தவிர, நீண்டகாலப் போக்கில் தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இறைமையையும் காக்கக் கூடியதாக இருக்கவில்லை. இருப்பினும், மட்டக்களப்பு அன்னையர் முன்னணி போன்றவை நமது போராட்டத்தில் தீவிரத் தன்மையைக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

1987 ஜூலை 29 இல் இந்தியாவும், இலங்கையும் ஒப்பந்தம் செய்துகொண்ட பின், எம்மைச் சூழவிருந்த அரசியல், இராணுவ நிலைகளில் திடீரென ஒரு மாற்றம் ஏற்பட்டது.

இந்தியா தன்னை ஒரு சமாதானப் பிரியனாகக் காட்டிக் கொண்டு சதி செய்யப் புறப்பட்டு வந்தது. இந்தியாவின் இத்துரோகத்தனத்தை தோலுரித்துக் காட்டும் அவசியம் எமக்கு ஏற்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் அகிம்சைப் போராட்டத்தை எமது ஆயுதமாக்கிக் கொண்டோம். இதில் முதலாவது சத்தியாக்கிரகியாக திலீபன் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

ஆகாரமோ, நீரோ அருந்தாது தனது



சாகும்வரை உண்ணாவிரதத்தை நல்லூர் முன்றலில் ஆரம்பித்தான் திலீபன். தொடர்ந்து திருகோணமலையில் கிருபாவும், மட்டக்களப்பில் மதனும், முல்லைத்தீவில் திருச்செல்வமும் விடுதலைப்புலிகளின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும் — மக்களுக்காக மரணிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்” என்றான் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட திலீபன்.

விடுதலைப் புலிகள் நடாத்திய இந்தப் போராட்டம், இந்திய ஏகாதிபத்தியத்தாலும் சிறீலங்கா இனவாதத்தினாலும் அடக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ் பேசும் மகனின் நெஞ்சிலும், விடுதலைத் தீயை மூட்டிவிட்டது.

மேற்கண்ட இந்திய – இலங்கைக் கூட்டுச் சதியை எதிர்த்து பொதுமக்களும் பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆனால் இந்தியா அனைத்துத் தமிழ் பேசும் மக்களுக்கும் பாரிய துரோகம் இழைத்துவிட்டது. உண்ணாவிரதம் இருந்த திலீபன் சாகவிடப்பட்டான்.

மீண்டும் ஆயுதப்போர் தவிர்க்க முடியாததாகியது. அமைதி காக்க வென்று கூறிக்கொண்டு காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் கனிகளையும், காய்களையும், பிஞ்சுகளையும் கசக்கிப் போட்டது. ஆம்; ஏராளமான தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவித்தது. இந்நேரத்தில் தமிழ் பேசும் மக்களை உயிராபத்தில் இருந்து காப்பதற்காக நிரந்தர யுத்த நிறுத்தத்தை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்று சகல பொதுமக்கள் அமைப்புகளும் ஒருமித்து கொடிபிடித்தன.

ஆனால், இந்திய அரசுக்கு இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருந்தன. இந்திய அரசின் இந்தப் பிடிவாதப் போக்கை உறுதியாக எதிர்கொண்ட அன்னையர் முன்னணி, இந்திய அரசின் போக்கில் மாற்றத்தைக் கொண்டுவரத் தமது உயிரையே பணயம்வைக்க தலைப்பட்டது. இந்த வேளையில்தான் அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளையவர்கள், பல இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்களை ஆதிக்க வெறியர்களின் துப்பாக்கிக் குண்டிலிருந்தும், பீரங்கிக் குண்டிலிருந்தும் காப்பதற்காக தன்னுயிரை அழித்துக் கொள்ள திடசங்கற்பம் பூண்டார்.

அன்னையர் திலகம் 19-03-88 தனது பிறந்த இடமான மட்டக்களப்பிலேயே தமது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகிழ்ச்சியோடு போராட்டத்தில் இறங்கினார். சாதாரண குடும்ப உறவு, பாசவலைகள் அத்தனைக்கும் அப்பாற்பட்டு, அனைத்து தமிழ் பேசும் மக்களினதும் பால் கொண்ட நேசத்தினால் தன்னுயிரைத் தியாகம் செய்யத் தலைப்பட்டார்.

அன்னையின் வீரமும், உறுதியும் மிக்க போராட்டம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எழுச்சியலையை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், அடையாள உண்ணாவிரதங்களும் ஆங்காங்கே நடைபெற்றன. (அந்நியரின் அச்சுறுத்தலின் மத்தியிலும்).

இந்த நிலையில் அன்னையின் போராட்டம் உலகின் கண்களைத் திறந்து இந்திய அரசின் அமைதிகாப்பு படலம் இங்கே எவ்வாறு நிகழ்கிறது என்பதைப் புலப்படுத்திவிடும் என மிரண்ட இந்திய இராணுவம் அன்னையின் உறுதி தளராத போராட்டத்தை இருட்டடிப்புச் செய்வதற்கும், குழப்புவதற்கும் பல வழிகளிலும் முயன்றது. ஆனால் நடக்கவில்லை. தனது கோரிக்கை நிறைவேறும் வரை, போராட்டத்தைக் கைவிட அன்னை மறுத்துவிட்டார்.

ஆனால் இந்திய அரசின் போக்கில் மாற்றம் இல்லை. அன்னையின் போராட்டம் தொடங்கி 30 நாட்களில் அவரின் உயிர் கொஞ்சம், கொஞ்சமாக இந்திய அரசின் மமதைக்கு இரையானது.

40 வருடகால விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த வீரம் செறிந்த குடும்பப் பெண் ஆவார் அன்னையர் திலகம்.

உலகிலேயே உண்ணாவிரதம் இருந்து வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட முதற் பெண்மணியும் இவரே. அன்னையின் விடுதலை வேட்கையும், தியாகமும் தமிழீழ விடுதலைக்கான மக்கள் போராட்டத்தில் என்றுமில்லாத எழுச்சி நிலையை உலகிற்குக் காட்டி நிற்கின்றது.

அன்னையின் தியாக வேள்வி முடிவடைந்து இப்போது ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டது. தன்னுடைய உன்னத தியாகத்தால் தமிழ் பேசும் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட அன்னையவர்களுக்கு எமது வீர அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

★★★

# பசித் தீயில் எரிந்தவள்


பசித் தீயில் இருந்தவள்
ஆயிரம் ஆண்டுகளோ
இல்லை இது எட்டாண்டு.
தீயினில் கிடந்தவளின்
நினைவிங்கு நிறைவுண்டு
பாயினில் படுத்திருந்த
நோயில் உயிர்ப்பிருந்தாள்– பசித்
தீயில் உருகி அன்றோ
அன்னை தன்னைக் கொடுத்தாள்

வாழ்வொன்றை நினைத்தழுது
ஏங்குகின்ற வேளையிலே
வீழ்வென்று தமிழ்மாந்தர்
புலம்புகின்ற போதினிலே
தாளவில்லை இம்மண்ணில் – என
தள்ளாத வயதினிலே
நாள் தின்ற நிலவு போல்
பூபதி உடல் தேய்ந்தாள்.
கையில் எரிதுவக்கும்
கவச வாகனமும்
பொய்யுள் உருவெடுத்த
போலி வேடங்களும்
மெய்யிலே தாங்கியெமை
மீறிவந்த படைகளது
மெய்முகத்தைக் காட்டிவிட்டாய்
மேதினியில் உயர்ந்துவிட்டாய்.
காந்தியின் தேசமிங்கு
சாந்திதர வந்ததோ?

நீந்தும் குருதியிலே – எமை
நீராட்ட வந்ததுவும்
தீய்ந்த உடல்களெல்லாம்
தெருவிலே எறிந்தவரைக்
காய்ந்த வயிறோடு – இனம்
காட்டியவள் பூபதித் தாய்.

நசுக்குண்ட ஈழத்
தமிழரின் குரலினை
நாலு திக்கும் பேச
நாவறண்டு செத்தவள்
பொசுக்குண்டு போன
தமிழர்கள் உணர்வினை
பூமியின் மேனியில்
புரிந்திட வைத்தவள்
பிள்ளைக்குத் தாயாக
அன்னை வாழ்ந்தவளோ – தமிழ்
மைந்தர்க்குத் தாயாக
தரணியில் உயர்ந்தவள்.
பெண்ணுக்குள் வீரம்
புறம்கண்ட சேதியோ!
மண்ணுக்கு உயிராகி
மாண்பினில் உயர்ந்தவள்.

அன்னை புகழ்பாடி
ஏற்றிடவே வந்தோம்
அவள் தன் உணர்வேந்தி
விடுதலையை வெல்வோம்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்தைத் தேடி...

## கப்டன் தேன்மொழி

*1990–ம்* ஆண்டின் ஆரம்பத்தில் மட்டுநகரிலிருந்து கடல் கடந்து யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஒன்பதாவது பயிற்சிப் பாசறையில் அவள் பயிற்சி எடுத்தாள்.


அவள் சரியான துடியாட்டம். குழந்தைத் தனம் மாறாத குழப்படியும் கூட. சண்டையென்றால் துள்ளிக் கொண்டு திரியும் அவளின் ஆசை போல நிறையக் களங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்குக் கிடைத்தது.

மாங்குளத்தின் வெற்றியிலும் ஆனையிறவுச் சண்டை உலகுக்குணர்த்திய போர் முறையிலும், இன்னும் "மின்னல்", சிலாபத்துறை, பத்தைமேனி, கட்டைக்காடு என நீண்டுகொண்டே போகும் கள வரலாற்றிலும் அவளது சுவடுகள் ஆழப் பதிந்திருக்கின்றன. நீண்ட வெற்றிகளுக்குப் பின்னால் ஆழமான படிப்பினைகளுக்குப் பின்னால், அவற்றை எல்லாம் எமக்குத் தந்து விட்டுச் சென்ற மாவீரர்களின் வரலாறும் அவர்களின் உறுதியும்.....

அவர்களில் எங்கள் தேன்மொழியும்...

அவளது கதை பெரியது. யாரிடமும் தேடிப்பொறுக்கி எடுத்தால் அது நீண்ட வரலாறு. மட்டக்களப்பில் எழுந்த புயல். *1995.07.28* அன்று கொக்குத்தொடுவாயின் மறக்க முடியாத களவரலாற்றில் உறங்கிப்போன கடைசி நிமிடம் வரை அவளது கதையும் கனவும் நீண்டவை. புலோப்பளையில் "யாழ்தேவி'' புரண்ட வரலாற்றிலும், மண்கிண்டி மலை எம் வசம் ஆன கதையிலும், இன்னும் பூநகரிக் கடல், தரைகள் "புலிகளினது'' எனப் பெயர் பொறிக்கப்பட்ட கணங்களிலும் அவளது துப்பாக்கி ரவைகளைப் பொழிந்தன.

சண்டையில் திறமையாகச் செயற்பட்டதற்காக பாராட்டுக்களையும், திறமைப் பரிசையும் பெற்றாள். ஆனையிறவு, இயக்கச்சிப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தபோது அணித்தலைவிகளுக்குப் பயிற்சிகளும் வகுப்புகளும் நடாத்தப்பட்டன. அதில் தேன்மொழியும் கலந்து கொண்டாள். அங்கு நடந்த சண்டையில் வேவுப்புலியாக நின்று திறமையாகச் செயற்பட்டு, தனது அணிக்கு எதிரியின் முகாமை எப்படி அழிக்க வேண்டும் என்று தெளிவாக விளக்கி, அவர்களைச் சண்டைக்கு கூட்டிச் சென்றாள். அணியை



கப்டன். தேன்மொழி

மீண்டும் உரிய இடத்திற்குச் சரியாகக் கொண்டு போய்ச் சேர்த்தாள்.

சில நாட்களுக்குப் பின் மீண்டும் பயிற்சிகள் நடைபெற்றன. அப்போது பெண் போராளிகளுக்கும் ஆண் போராளிகளுக்கும் இடையில் போட்டிகள் வைக்கப்பட்டன. திசைகாட்டி மூலம் வேறு முகாம் செல்லும் போட்டியில் முதலாவதாக வந்து சேர்ந்தாள். அவளின் பலதரப்பட்ட திறமைகளையும் கண்ட தளபதி, அவளைப் பயிற்சி ஆசிரியராக நியமித்தார். குழப்படிக்காரியாக இருந்த தேன்மொழி இதன் பின்னர் அமைதியானவளாக மாறி விட்டாள்.

அவளது வீட்டிலிருந்து அவளை விட அவளது அக்காவும் போராளி. பாச உறவுகளை இயக்கக் கடமைகள் நீண்ட தூரம் பார்க்க முடியாதவாறு பிரித்தது.

"என்னை நான் பெரிசெண்டு நினைக்கவில்லை. என்ர அக்கா இயக்கத்தின் வேறு பிரிவில் இருப்பதால் நான் பார்க்கவில்லை. என் அக்காவின் முகம் எனக்கு நினைவில் இல்லை. அதை நான் பெரிசுபடுத்தவில்லை. என்ர அக்கா போராட்டத்துக்கு வந்த பின்னர் செய்தது எனக்குத் தெரியாது. ஆனா என்ர ஒவ்வொரு செயலும் அவவுக்குத் தெரியும். அவவைக் கண்டால் சொல்லுங்கள்.''

என்று புலோப்பளைச் சண்டைக்குச் சென்றபோது சொல்லிவிட்டுப் போனாள்.

இறுதியாகக் கொக்குத்தொடுவாய் சண்டையின்போது இறுதி வரை நின்று சண்டைபிடித்தாள். தனது அணியைப் பாதுகாப்பான இடத்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக்கு நகர்த்திக்கொண்டிருந்தபோது அவளது கையில் எதிரியின் ரவை தாக்கியது. எறிகணைகள் மழைபோல் விழுந்தன. ஒற்றைக் கையோடு நின்று,

"என்னைக் கவனிக்க வேண்டாம். எல்லோரும் போங்கோ.''

என்று சொல்லிக்கொண்டிருந்த போது மீண்டும் எதிரியின் எறிகணைகள் விழுந்தன. அந்தச் சண்டையில் நாங்கள் ஏராளமான போராளிகளை இழந்துள்ளோம், தேன்மொழி உட்பட.

அம்மா!

நம் தேசத்தின் எல்லைக் கோடுகள் இரத்த வெள்ளங்களால் கோடிடப் பட்டுக் கொண்டிருக்கும்போது, நீ மட்டும் ஏனம்மா கண்ணீர் வரிகளால் உன் கண்களைக் கோலமிடுகிறாய்?

இது தேன்மொழியின் நாட்குறிப் பேட்டிலிருந்து எடுக்கப்பட்ட ஒருவரி.

★★

## லெப். நாமகள் (மிருணா)

அது நேற்றுப்போல் இருக்கின்றது. காலச் சுழற்சியில் அள்ளுண்டு போகா நினைவுகளாக மீண்டும் மீண்டும் நினைவுத் திரையில் ஓடிக்கொண்டிருக்கும் நிகழ்வுகள். எழுதுகின்ற வரிகள் தெளிவின்றி, விழியில் நீர்த்திரை படிய எதை எழுத? எல்லாமே வார்த்தைகளின்றித் தோற்றுப்போகும்.

வலிகாமத்தின் காற்று துயரம் சுமந்தபடி மோதி உடையும். தனிமையில் மௌனமாக இருக்கின்ற வீடுகளில் உனது மூச்சும் கலந்தபடி...


உன்னை நினைக்கும்போது அந்தக் குழந்தைத்தனம் மாறாத குழப்படி நினைவுக்கு வரும். நீ குழந்தை தான். வயதுக்கும் உருவத்துக்கும் எதுவித சம்பந்தமும் அற்ற குழந்தை. அதுவும் உனது கடைசிப் பொழுதுகளில் உனது உயரமும் அசாதாரண வளர்ச்சியும் கண்டவர்களை வியப்பில் ஆழ்த்திய படி... எப்படி இருந்தாய்? உனக்குப் பதினாறு வயதென்றால் யார் நம்புவார்?

நீ இயக்கத்துக்கு வந்தபொழுது குழந்தை.

"இந்த வயதில ஒருவரையும் இயக்கத்துக்கு எடுக்கிறதில்லை. திரும்பி வீட்டுக்குப் போங்கோ'' என்று கூறிய போது நீ அடம்பிடித்தாய்.

"போராட்டத்துக்கு வயதெல்லை இல்லை''.

கடைசியில் உனது நியாயமான



லெப். நாமகள் (மிருணா)

கேள்வியும் பிடிவாதமுமே வென்றது. அந்தப் பயிற்சி முகாமில் உனது திறமையால் எப்போதும் உன்னை இனங் காட்டினாய். உனக்கும் லெப். சுபானந்தினிக்கும் தான் அங்கு போட்டி. யார் யாரை முந்துவது? இருவருமே திறமைசாலிகள். எதில் எவர் கெட்டிக்காரர் எனப் பிரித்தறிய முடியாதவாறு இருந்தீர்கள்.

அதன் பிறகு எங்கள் தலைவரின் கனவுகளின் ஒன்றான படைத்துறைப் பள்ளியில் உனது போராட்டப் பாதை தொடர்ந்தது. அங்கு உனது குழந்தைத்தனங்களும் குறும்புகளும் சொல்லி மாளாது. அங்கு உனது எல்லாத் திறமைகளையும் மீறி இவற்றிலே பேர் போனவளாக இருந்தாய்.

அங்கிருந்தபடியே நீ "நான் சண்டைக்குப் போறன்' என்று பொறுப்பாளரை நச்சரித்து நச்சரித்து வெளியில் வந்தாய். உனது முதற் களம் பூனகரித் தாக்குதலாக இருந்தது. பூனகரிச் சண்டைக்குப் பூரிப்போடு போய் வந்தாய். நீண்ட நாட்கள் உனது முகத்தில் அந்த சண்டைக்குப் போய்வந்த சந்தோஷமும் திருப்தியும் இருந்தது.

பின்னர் நீ கலை பண்பாட்டுக் கழகத்தில் உனது திறமைகளைக் காட்டினாய். இயல்பாகவே உன்னிடமிருந்த கலை ஆர்வம் நடனத்திலும் பாட்டிலும் வெளிப்பட்டது. எப்பொழுதுமே அபிநயம் பிடித்தபடி முகாமில் நடனமாடுவாய். எங்கேனும் கலை நிகழ்ச்சிகள் பார்த்துவிட்டு வந்தால் அன்றிரவு நிச்சயமாக நீ முகாமில் ஆடிக்காட்டுவாய். அல்லது பாடலையாவது பாடிக் காட்டுவாய். பாட்டு எப்படி இருப்பினும் உனது குரலின் கம்பீரமும் பாட்டின் குழைவுகளும் உனது பாட்டை இன்னொருமுறை கேட்கத்தோன்றும். முகாமில் எந்த நிகழ்வு நடந்தாலும் உனது நிகழ்ச்சி ஒன்று கட்டாயம் இருக்கும். அனேகமாக அது களத்தில் காத்தானாக இருக்கும். அதில் நீ காத்தானாக வருவாய். முல்லை மண்ணின் பாரம்பரியக் கலை மரபில் ஊறிப் போனவள் நீ. அதனாலென்னவோ அவற்றை நீ நடிக்கும் போது இயல்பாக பாத்திரத்தோடு ஒன்றிப்போய் இருக்கும்.

மேடையில் எங்கள் நாமகளா? எப்படிக் கம்பீரமாக?

இன்னும் ஜீரணிக்க முடியாத உனது மறைவிற்குப்பின் எல்லாம் நினைவுகளாக உனது பாடல் வரிகள் மெல்லக் காற்றில் தேய்ந்தபடி,

அவை உனது கடைசிக் காலங்கள். அது உனது கடைசிச் சண்டையும் கூட.. அந்த விடிகாலைப் பொழுது இராணுவத்தின் யுத்த டாங்கிகளின் இரைச்சலோடும், எறிகணைகளின் பெரும் ஓசையோடும் விடிந்தபோது, கோப்பாயின் வாழைத்தோட்டங்களில் எமது நிலையில் நீ நின்றாய். அச் சண்டை உக்கிரமாக இருந்தது. அதற்குள்ளும் நீ நின்ற இடம் எப்போதும் போல் கலகலத்தபடி இருந்தது. செம்மண் மேலும் சிவப்பேறி எமது விழிகளைப் போல் சிவந்தபோது நீ இல்லை. பெருத்த ஓசையோடு எறிகணை ஒன்றின் தழுவலுக்குள் நீ துடிப்படங்கிப் போனாய்.

"நிறைய சண்டைக்குப் போகவேணும் நல்லா அடிபட வேணும்" என்று சொல்லிப் போனவள் 1995-10-29க்குப் பின் வரவேயில்லை.

"வைதேகியைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு லீவிலை வருவன் அம்மா"

என்று போனவள் வரவேயில்லை. அவளோடு வைதேகியும். அவர்கள் அமைதியாக உறங்கட்டும்.

★★

## லெப் மாங்கனி

இவள் ஒரு சிறந்த நடிகை, பாடகி, ரசிகை. பேசும் போது வாய் மட்டுமல்ல, கண், மூக்கு எல்லாமே பேசும். கைகள் அபிநயம் பிடிக்கும்.

இனிமையான குரலாலும் திறமையான நடிப்பாற்றலாலும் ஏனைய பிள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளைகளைக் கவர்ந்து கொண்டாள். பயிற்சிப் பாசறையில் இரவு வேளைகளில் ஒரு மூலையில் மாங்கனியின் பாட்டுக் கச்சேரி நடக்கும். அவளைச் சுற்றி ஒரு சின்னக்கூட்டம் இவளின் பாடல்களைக் கேட்டு ரசிக்கும். பாட்டைக் கேட்டபடியே அவர்கள் உறங்கி விடுவார்கள். நிலைமைகள் எப்படி இருந்தாலும், பயிற்சி எடுத்த களைப்பை நீக்கிவிடும் மாங்கனியின் பாடல்கள்.

"அம்மாவே தெய்வம். ஆகாய தீபம்"

என்ற பாடலை ஒரு நாளில் ஒரு முறை என்றாலும் இவள் பாடாமல் விடமாட்டாள். அந்தப் பாடல் இவளது குரலுக்குள் இழைந்து வரும்போது நெஞ்சைத் தொடும்.

இவளது முதற் சண்டை "மின்னல்" தாக்குதலாக இருந்தது. அதற்கு அவள் விநியோகக் குழுவாகச் சென்றாள். அது நல்லதொரு சண்டை. எதிரியின் "சகடைகள்" பீப்பாக்குண்டுகளை உருட்டித் தள்ளும். மரங்கள் முறிந்து எந்தப் போராளியின் கையிலாவது விழும். எங்கு குண்டுகளை வீசுகிறான், எந்த இடத்தைக் குறி வைக்கிறான் என்று எதுவுமே அறிய முடியாதவாறு காடு குடைபிடித்து மறைக்கும். அந்த இடத்தில் அவளுக்கு விநியோக வேலை. சண்டையில் நிற்கும் போராளிகளுக்கான வெடிபொருட்கள், உணவுகளை முன்னணி நிலைகளுக்குக் கொண்டு சென்று கொடுப்பது, காயமடைந்த, வீரச்சாவடைந்த போராளிகளைத் தூக்கி பின்னால் உரிய இடத்தில் சேர்ப்பது என மாங்கனி சோர்வடையாமல் வேலை செய்தாள்.



லெப். மாங்கனி

அடுத்த சண்டை பலவேகய இயக்கச்சி சண்டை. அவளது எதிர்பார்ப்புக்கும் ஆவலுக்கும் ஏற்ப அவள் சண்டை அணியில் விடப்பட்டாள். சண்டைக்களத்திலேயே சண்டைக்கான பயிற்சி. இரவு பகலாக ஓயாத பயிற்சி. மாங்கனிக்கு காய்ச்சல் வந்துவிட்டது. உடலை அசைக்கமுடியாமல் முறித்தெடுத்தது. ஆனாலும் மாங்கனி களத்தைவிட்டு வெளியேறவில்லை. பதுங்குகுழி ஒன்றினுள் படுத்தபடி மருந்துகள் சாப்பிட்டாள். காய்ச்சலும் விட்டபாடாக இல்லை. கட்டாயமாக மருந்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள். காய்ச்சலின் விளைவாக எப்போதும் அபிநயம் பிடிக்கும் அவளின் கைவிரல்கள் பாதிப்படைந்தன. சில விரல்கள் மடக்கி நிமிர்த்த முடியாமல் ஆயின. அதற்குரிய வைத்தியங்களைச் செய்த மாங்கனி கலைபண்பாட்டுக் கழகத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அங்கு இவளின் கலைத்திறன்கள் வளர்ந்தன. சங்கீதம், நடனம் என்பவற்றை இவள் பயின்றாள். வாத்தியக் கருவிகளைக் கற்றாள். எமது முகாம்களில் நடக்கும் ஒவ்வொரு கலை நிகழ்ச்சிகளிலும் நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று நடித்தாள். இன்னும் இன்னும் தான் நிறையச் செய்ய வேண்டும், சாதிக்கவேண்டும் என்று அயராது உழைத்தாள்.

இவளின் இனிமையான குரலில் உருவாக்கம் பெற்றதுதான் "மண்ணாய்ப் போகும் உடலே ஈழ மண்ணுக்காகட்டும்" என்ற பாடல்.

இவளது அன்பான, பண்பான செயற்பாடுகள் வலிகாமத்தின் பல கலைஞர்களைக் கவர்ந்தது.

வலிகாமதத்தில் "சூரியக்கதிர்" இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. மாங்கனியைக் காண்பது இதுதான் கடைசி என்பதை அறியாத அந்த முகாம் அவளைச் சண்டைக்கு வழியனுப்பி வைத்தது. 'நாங்கள் ஓடித்திரிந்த மண்ணை எதிரியிடம் விடமாட்டோம்" என்ற உக்கிரத்துடன் போராளிகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தியாக மாங்கனியும். எதிரியின் எறிகணை மழை எம்மவர்களின் உயிர்களைக் குடித்துக்கொண்டிருந்தது. ஒரு எறிகணை மாங்கனியை... *1995–10–30* அன்று அவள் அமைதியானாள்.

அவள் கைபட்டு வளர்ந்த வாழை மரங்கள், அவள் இருந்து படிக்க நிழல் பரப்பிய பலா மரம், அவள் ஆசையாக வளர்த்த பூமரங்கள் எல்லாம் ஒரு நாள் மாங்கனி வருவாள் என்று எதிர்பார்த்தபடி வலிகாமத்தில் காத்திருக்கின்றன.

★★

## கப்டன் இளையவள்

கப்டன் செவ்வானமும் இவளும் தோழிகள். தான் கரும்புலியாகப் போனபோது தனது குப்பியை இவளிடம்தான் செவ்வானம் கொடுத்துச் சென்றிருந்தாள். இறுதிவரை இளையவள் அந்தக் குப்பியையே வைத்திருந்தாள். அவளுக்கு குப்பி தேவையில்லைதான். ஆனாலும் செவ்வானத்தினுடையது என்று வைத்திருப்பதில் தோழமை, நட்பு, அந்த கடல் மடியில் விட்டுச் சென்ற நீங்காத நினைவுகள்... அவை ஓயப்போவதில்லை. ஆர்ப்பரித்துச் செல்லும் கடலலைகளைப் போல.



கப்டன் இளையவள்

அப்போது அவள் ஓரளவுதான் நீந்துவாள், ஆழமான கடற்சுழிகள், கொந்தளிப்பு எதற்கும் எதிர்நீச்சல் போடும் திறனற்ற "கற்றுக்குட்டி" நீச்சல்காரி. அன்றைய கடற் பயணம் கலகலப்பாக இருந்தது. ஆனாலும் கடல் நிலைமை அவ்வளவு சரியில்லை. அமைதியாக இருக்கின்ற கடலில் திடீ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரென அலைகள் உயரக் கிளம்பலாம். காற்றுத்திசை மாறலாம்.

ஒரு பெரிய அலை வந்து படகு தடு மாறி அவள் விழுந்தேவிட்டாள். அவளோடு இன்னும் இருவர். அவள் ஒரு மாதிரி தட்டுத்தடுமாறி மூச்சுத் திணற, மற்றவரின் கழுத்தைப் பிடித்து ஆதரவு தேட, இருவரையும் தூக்கி, பயணம் முடிந்து திரும்பினர்.

லெப். கேணல் மாதவி அக்காவுக்கு இந்தக் கதை போய்விட்டது.

"இளையவள் நீந்தத் தெரியாமல் தானே அப்படிச் செய்தனீ?"

என்று கேட்க, "இல்லை அக்கா, நான் அவையளுக்கு நீந்தத் தெரியுமோ எண்டு பாக்கிறதுக்குத்தான் அப்படிச் செய்தனான்."

என்று சிரிக்காமல் கூறி, நடந்ததை அப்படியே தடம் புரட்டிவிட, எல்லோருக்கும் ஒரே சிரிப்பு.

கடைசிக் காலங்கள் எல்லோரையும் குடல் அதிரச் சிரிக்க வைத்த கணப்பொழுதுகள். அவளுக்கு முதற் சண்டையும், கடைசிச் சண்டையும் அதுதான். அவளது சாவுக்கான நாள் குறித்தாயிற்று, அந்த நாளில்தான் பாசமான அண்ணைக்குத் திருமண வீடு. இவளது வீட்டுக்காரர் இவளை விடுமுறையில் விடுமாறு கேட்க முதலில் மறுத்துவிட்டாள், "நாள்" தாண்டிப்போனால் தன் வாய்ப்பு போய்விடுமே.

"இளையவள் நீங்கள் வீட்டை போங்கோ. இன்னொருதரம் போக வாய்ப்பு உங்களுக்கு வரும்தானே"

என்றபோதும் ஒரேயடியாய் மறுத்து, பின் தன் தலைவனுடன் போய் ஒருநாள் நின்றுவிட்டு, கலியாணத்திற்கு இல்லாமல் வந்துவிட்டாள்.

*1996–03–30* அன்றிரவு கடல் அலைகள் அதிர்ந்து குலைய, எங்கள் இளையவள் கரைந்து போனாள். சுண்டிக்குளம் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான அதிவேகப் பீரங்கிப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

அண்ணனின் திருமணத்திற்கென் திருகோணமலையில் இருந்துவந்த அம்மா திரும்பிப் போகமுன்னர் தான் போய்விடவேண்டும். இல்லாவிட்டால் அம்மா அலைக்கழிவார் என்று அவளின் விருப்பப்படியே அவள் போனாள்.

★★

# மேஜர் அலைமகள்

அந்த உயரமான அவளது உருவத்திற்கும் கதைக்கும் பொருத்தமில்லை. பயிற்சிப் பாசறையில் நீளநீள வைத்தபடி ஓடுகின்ற கால்கள். கனரக ஆயுதத்தை தூக்கியபடி ஓடும்போது இவளுக்கு எவ்வளவு கம்பீரம். கண்கொட்டாமல் அவளையே பார்த்தபடி.........

அந்த உருவமும் கம்பீரமும் கண்களைவிட்டு மறைந்துவிட்டனவா? அகக் கண்களில் அவள் நிழலை நினைத்தபடி நாங்கள்.

பயிற்சிப் பாசறைக்கு ஒரு முறை மனம் சென்று திரும்பும். பதட்டம் என்பதே துளியளவும் கிடையாத



மேஜர். அலைமகள்

அவளின் கதைகள். ஒரு குழந்தையினுடையதைப்போலே ஆறுதலாக நீண்டுவரும். சிணுங்கலுடன் முடிவடையும். உருவத்திற்கும் கதைக்கும் பொருத்தமே இல்லை.

ஆனையிறவின் உப்பளக் காற்றும், இயக்கச்சியின் தென்னந் தோட்டங்களும் இன்னும் பலாலியின் கரியபனை வெளிகளுக்கும் அவளுக்குப் பரிச்சயமானவை. அவளது வியர்வைத் துளிகளை அவை உறிஞ்சியிருக்கும். இரவில் ஊர்ந்து நகரும்போது அவளது உடலின் சிராய்ப்புக் காயங்களிலிருந்து வெளிவந்த குருதி அதில் காய்ந்திருக்கும்.

பயிற்சியில் காட்டிய திறமையும் அவளின் கம்பீரமான உருவமும் அவளை ஐம்பது கலிபர் கனரக ஆயுதப் பிரிவுக்கு பயிற்சி ஆசானாக்கியது. அதில் இருந்தபடியே இளைய போராளிகளை இந்த மண்ணுக்காகத் தந்தாள்.

அவள் ஒரு வாகனச் சாரதியும் கூட... முழுமையாக வாகனம் ஓட்டுவதில் பயிற்சி பெற்று திறமையாகச் செயற்பட்டபோது அவளுக்குத் தலைவரின் பரிசு கிடைத்தது. அந்தச் சந்தர்ப்பம் என்றுமில்லாத மகிழ்ச்சியையும், பெருமையையும் கொடுத்தது. அதுவே அவளது செயற்பாடுகளுள் தீவிரத்தை ஏற்படுத்தி இருந்தது.

"சூரியக் கதிர்" வலிகாமச் சமர் அவளின் கடைசிச் சண்டை. ஆண் போராளிகளின் ஒரு பகுதிக்கு அவளது குழு பின்னணி வேலைகளில் ஈடுபட்டது. இருள் மூடியிருந்த இரவுகளில் பதுங்குகுழி வெட்டி, மண் மூட்டை அடுக்கி, பாதுகாப்பு அரண் அமைத்து எத்தனையோ பொழுதுகள் சாப்பாடின்றிக் கழியும். வயிற்றைப் பசி கிள்ள நித்திரையின்றிய இரவுகளில் அவள் தனது ரீ 82– ரகத் துப்பாக்கியுடன் நடப்பாள், தலை நிமிர்த்த இயலாத ரவை மழை, அடுக்கடுக்காக வந்து விழும் எறிகணை மழை பட்டு கட்டிடங்களும், வீடுகளும் சிதையும். உடல்களும் சிதறும். அந்த இடங்களில் அவள் ஓடியோடிப் பதுங்குகுழி அமைத்தாள்.

அன்றைய நாளும் அப்படித்தான். அந்தச் சண்டை உக்கிரமானதாகத்தான் இருந்தது. அரியாலைக்குள் புகுந்து ஊடுருவித் தாக்கிய எங்கள் அணிக்குள் அவளும்.

எல்லாம் முடிவுற்று, எடுத்த ஆயுதங்களை அள்ளிக் கொண்டு நகர்ந்த போது அவள் வரவே இல்லை. "செஞ்சோலையின்" பக்கத்துக் கடையில் விழுந்த எறிகணை ஒன்றில் காயப்பட்டு.... அவள் வரவே இல்லை.

நீண்ட கம்பீரமான எங்கள் அலைமகளின் உடலை மட்டும் நாங்கள் சுமந்து வந்தோம். அவளுக்கு விருப்பமான அந்தப் பழைய பாட்டுகளை காற்றள்ளி வந்தன. அவளது உயிர் மூச்சு மட்டும் வலிகாமத்தின் பாரம் சுமந்த காற்றோடு *1995–11–25*ன் பூக்கள் உதிர்ந்த மாலைப் பொழுதில் நெஞ்சில் சோகம் கவிந்தது.

★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழருக்கென்று தமிழீழம் மலர

## உலகத் தமிழர் தலைவர்களுடன்

தமிழர்களாய் வாழ்ந்தும், தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க தடைகள் – ஈழத்தமிழரின் இன்னல்கள் பற்றி பேசலாம்; ஆனால் அவர்களின் போராட்டம் குறித்தோ புலிகளுக்கு ஆதரவாகவோ பேசக் கூடாது என்ற பைத்தியக்காரத்தன மான கட்டுப்பாடுகள்; காவல்துறையி னரின் கைது நடவடிக்கைகள்.... இவ் வாறு இராணுவ நெருக்கடிகளே மக்க ளாட்சித் தர்மங்களாய் இந்த மண்ணில்.

இச்சூழ்நிலையில் தான் அமெரிக் காவில் வாழும் தமிழர் கூட்டமைப்பின் தலைவர்களான முனைவர் தனிகுமார் சேரன், முனைவர் முத்துவேல் செல் லையா, திரு. கிருட்டிணன் ஆகியோர் தமிழின விடுதலைக்கு, முக்கியமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நமது பங்கும், ஆதரவும் எப்படி இருக் கிறது என்பது பற்றி அறிய தமிழகம் வந்திருந்தார்கள். பல்வேறு தரப்பின ரையும் சந்தித்து தமிழர்களாய் நமக்கி ருக்கும் கடமைகளை உணர்த்தி வரு கிறார்கள்.

ஜனவரி 10ம் திகதி மாலை 4 மணியளவில் திருச்சியில் அருண் விடுதி – சுமங்கலி அரங்கில் இத் தலைவர்களுடன் ஒரு கலந்துரையா டலை 'உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்' ஏற்பாடு செய்தது. நகரில் உள்ள பல்வேறு தமிழர் அமைப்புக ளுக்கும் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஏறக்குறைய 200 பேர் கூடியிருந்தார்கள்.

கலந்துரையாடலில் பங்குபெற்ற தமிழக அமைப்புக்களைச் சார்ந்தோர் தமிழீழப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்குபற்றி விமர்சனபூர்வமாகப் பேசி னார்கள். இங்குள்ள அரசியல் கட்சிகள் தமிழீழப் பிரச்சினையை தமிழீழத்தவர் நலனுக்காக அல்ல, தங்கள் கட்சியின் நலனுக்காகவும், நாற்காலி கனவுக ளுக்காகவுமே பயன்படுத்துகின்றனர்; இன உணர்வும், மொழி உணர்வுமின்றி சுயநலமே மிஞ்சியிருக்கிறது; தமிழீழப் போராட்டத்தை உள்நாட்டுப் பிரச்சினை யாக இனிமேலும் பார்த்துக் கொண்டி ருக்கமுடியாது; தமிழகப் பெண்களிடம் நாட்டுணர்வை வளர்க்க வேண்டும்; தமிழீழ ஆதரவுப் பிரச்சாரத்தை பட்டி தொட்டி எங்கும் எடுத்துச் சென்று தமிழீழம், புலிகள் பற்றி பேசுவதற்கே இருக்கும் அச்சத்தையும், அவமானத் தையும் போக்கவேண்டும் என்று குறிப் பிட்டார்கள்.

முனைவர் முத்துவேல் செல்லையா பேச்சிலிருந்து:

### பேச்சுரிமை

பா.ம.க. நடத்திய தமிழீழ ஆதரவா ளர் மாநாட்டிலே பேசியவர்களில் சில ரைக் காவல்துறையினர் கைதுசெய்திருக் கிறார்கள் என்று கேள்விப்பட்டோம். நாங்கள் இங்கு வந்தபோது என்ன பேசு கிறோம் ஏது பேசுகிறோம் என்று குற்ற வாளிகளைப் பார்ப்பதுபோல் பார்க் கிறார்கள். இது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. தமிழர்களாக தமிழ்நாட் டில் நீங்களும் நாங்களும் அனுபவிக்கும் உரிமைகளைவிட அமெரிக்காவில் அதி கம் உரிமைகளுள்ள தமிழர்களாக நாங் கள் வாழ்கிறோம். முக்கியமாக பேச்சு ரிமை, எழுத்துரிமை என்பதில் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லை. அந்த நாட் டுக்கு எதிராகவே கூட, பில்கிளிண்ட னுக்கு எதிராக ஒருவன் என்ன வேண்டு மானாலும் பேசலாம். கொச்சையாகக் கூட பேசுவார்கள் .

இந்த அரசு (தி.மு.க) அமைந்த பேது அமெரிக்காவில் எல்லா வீடுகளிலும் ஷாம்பெயின் (ஒயின்) உடைத்து விழாக் கொண்டாடினர். 'நமக்கு என்று ஓர் அரசு அமைந்திருக்கிறது. ஈழப் பிரச்ச னையில் அது அக்கரை காட்டும்' என்று நம்பினார்கள். அந்த நம்பிக்கையெல் லாம் வீணாகிக்கொண்டிருக்கிறது.

### தமிழருக்கென்றொரு தாயகம்

அமெரிக்காவில் நான் யாரென் றொரு கேள்விக்கு 'நான் தமிழன்' என்ற உணர்வே வரும். ஏனென்றால் அங்கு மொழி அடையாளமே பிரதானம். பிரான்சு நாட்டிலிருந்து குடியேறியிருப் பவர் பிரான்சு தான் பேசுகிறார்கள். ஜெர்மனிலிருந்து வந்தவர்கள் ஜெர்மன் மொழியையே பயன்படுத்துகிறார்கள். கூட இருக்கும் இந்தியர்கள் கூட தங்கள் தங்கள் தாய்மொழியாகிய குஜராத்தியோ, மலையாளமோதான் பேசுகிறார்கள். நான் மட்டும் எப்படி இந்தியனாக உணர முடியும். தமிழன் என்ற அடை யாளமே எனக்கு இருக்கமுடியும். மொழி வழி ஒருங்கிணைப்பே மேலானதாகும்.

அமெரிக்காவில் ஒரு யூதனுக்கு இன்னலென்றால் இஸ்ரேல் குரல் கொடுக்கிறது. ஜப்பானியருக்கு இன்ன லென்றால் உடனடியாக ஜப்பான் நாட்டு அரசு தலையிட்டு விளக்கம் கேட் கிறது. தகுந்த நடவடிக்கை எடுக்க அமெ ரிக்க அரசு நிர்ப்பந்திக்கப்படுகிறது. ஆனால் தமிழர்க்கென்று ஏதாவது நேரிடின் எங்கிருந்தும் குரல் இல்லை. ஈழத்தில் தமிழர்கள் படுகொலை செய் யப்படும் போது இந்தியாவிலிருந்து எதிர்ப்புக்குரல் ஒலிப்பதில்லை.

ஏனென்றால் தமிழருக்கென்று ஒரு தாயகம் இல்லை. தமிழருக்கென்று ஓர் அரசும் இல்லை. அது இப்போதைய இந்தியச் சூழ்நிலையில் தமிழகத்தில் சாத்தியமும் இல்லை. எனவே தமிழ ருக்கென்ற தாயகம் வேண்டும். அது தமி ழீழமாக மலரும் வாய்ப்புகளும் மலர்ந் துள்ளன. காலமும் அண்மையில் உள் ளது. எனவே தமிழீழம் மலர்வதைத் தமிழர்கள் என்ற அடிப்படையில் நாம் ஆதரிக்க வேண்டும். அதற்காக நமது பங்களிப்பையும் செய்யவேண்டும்.

### இந்தியாவால் முடியும்

சர்வதேச அரங்கில் அமெரிக்கா எப்படி ஒரு வல்லரசோ அதுபோலே தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு வல்லரசாகும். அது நினைத்தால் தமிழீழம் மலர்வதற்கு உதவமுடியும். அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தில் இஸ் ரேல் நாடு உருவானது போல, இந்தியா ஒரு வல்லரசு என்பதற்கு சர்வதேச அரங் கில் அங்கீகாரமும் உள்ளது. ஆனால் இந்திய அரசோ எதிர் நடவடிக்கைக ளிலேயே இறங்கியுள்ளது. எனவே இந் தியா அரசு உதவுவதற்கான நிர்ப்பந் தத்தை தமிழர்கள் தான் ஏற்படுத்த வேண்டும். இங்குள்ள கட்சிகளும் அமைப்புகளும், மாநில அரசும் அந்த நிர்ப்பந்தத்தை மத்திய அரசுக்கு ஏற்ப



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு தாயகம் வேண்டும்! வேண்டும்!!

## கலந்துரையாடல்

டுத்த வேண்டும். அமெரிக்கா ஏன் தமிழீழத்தவரின் நலனை முன்நிறுத்தவில்லையென்றால், தமிழர் – தமிழ்நாடு – ஈழம் – அவர்களின் பிரச்சனைகளைப் பற்றியே அமெரிக்கர்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை. மற்றொன்று, அமெரிக்க அரசுக்கு சந்திரிகா அரசை ஆதரிப்பதில் அரசியல் இராணுவ ரீதியான ஆதாயம் அதிகமிருக்கிறது. சிங்கள அரசும் தனது அரசின் நடவடிக்கைகளுக்கான ஆதரவை அமெரிக்காவிலிருந்து பெறுவதற்காக அதிகமாகச் செலவிட முடிகின்றது. தமிழீழத்தவருக்கோ எந்த பின்புலமும் இல்லை. சில தன்னார்வ அமைப்புகள் வழியாகவே அரசிடமிருந்து ஆதரவைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

### பத்திரிக்கைக் குப்பைகள்

தமிழீழச் செய்திகளை அமெரிக்கப் பத்திரிக்கைகள் மனித நேயத்தோடும், பத்திரிக்கைத் தர்மத்தோடும், செய்திகளைச் செய்திகளாவே வெளியிடுகின்றன. அவற்றோடு தமிழகத்திலிருந்து வெளிவரும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'ஹிண்டு' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளை ஒப்பிட்டால் இவை குப்பைகள் தாம். தமிழ்ப் பத்திரிகைகளைப் பற்றி சொல்லவே வேண்டாம். அவை செய்திகளை செய்திகளாக வழங்குவதற்குப் பதில் எடிடோரியலாக, தன் முன் சார்பை வெளிப்படுத்தும் திரிபுகளாகவே வழங்குகின்றன. தமிழீழப் போராட்டத்தையும், புலிகளையும் கொச்சைப் படுத்தியே வெளியிடுகின்றன.

### கட்சிகள் வைக்கும் வேட்டு

காவிரிப் பிரச்சனையில் கர்நாடகக் கட்சிகள் எவ்வாறு ஒருமனப்பட்டு நிற்கின்றன என்றும் தமிழகக் கட்சிகளிடையே அந்த ஒற்றுமை இல்லை என்றும் கூறினார் தோழர் புரட்சிக்கொடி.

ஈழத்தமிழர் பிரச்சனைகளிலும் தமிழகக் கட்சிகள் பிளவுபட்டே நிற்கின்றன. ஒன்றையொன்று எதிர்க்கும் ஓட்டு அரசியலுக்கும் இதைப் பலியாக்குகிறார்கள் .

கொள்கைக்காக மட்டுமே கட்சிகள் கூடவேண்டும். பிரச்சனைகளை மட்டுமே (Focus) முதன்மைப்படுத்தி அணியமாக வேண்டும். தங்களது விருப்பு வெறுப்புக்களை பின்னிலைப் படுத்திவிட வேண்டும்.

அமெரிக்காவில் கூட ஈழத்தமிழர்கள் இந்தியத் தமிழர்களை அதிகம் நம்புவதில்லை; காரணம் நம்மவர்களின் முதுகெலும்பற்ற நிலை, பாராமுகம் போன்றவைதாம். புலம்பெயர்ந்த, ஒவ்வொரு ஈழத்தமிழனும் நான்கைந்து வேலைகள் செய்து பொருளீட்டி ஈழத்தமிழர் போராட்டத்திற்கு உதவுவதைப் பார்க்கும் போது அவர்களின் நாட்டுப்பற்று மொழிப்பற்றுக்குமுன் நாம் தலைகுனியத்தான் வேண்டும்.

எனவே, தமிழீழ மக்களுடைய வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் நமது நிலை 'நாம் செய்ய வேண்டியதைச் செய்வோம்; அடுத்தவரை எதிர்பார்க்க வேண்டாம்' (Just do it) என்பதாகத்தான் இருக்க முடியும். நமது பலம் முழுவதையும் ஒன்று திரட்டி நம் வரலாற்றுக் கடமையைச் செய்யவேண்டும். தமிழர்களாக இல்லாவிட்டாலும் கூட மனிதாபிமான அடிப்படையிலேனும் நமது உதவி அவர்களுக்கு அவசியம்.

### முனைவர் தனிகுமார் சேரன் அவர்களின் உரையிலிருந்து

ஈழத்தமிழர் போராட்டத்தில் நமது; பங்களிப்பை இரண்டு நிலைகளாகப் பார்க்கலாம்.

*1. உடனடி நிவாரணம்:* உணவுப் பொருட்கள், மருந்துகள் இருக்க இடம் அமைத்துக் கொடுத்தல் ஆகியவை ஈழத்தில் அவதிப்படும் தமிழருக்கு நாம் உடனடியாகச் செய்யவேண்டும். உங்கள் இயக்கம் அதைச் செய்வதாக அறிந்து மகிழ்ந்தேன். அதற்குக்கூட சந்திரிக்கா அரசு தடை விதித்திருக்கிறது. இங்கு அகதிகளாக வரும் ஈழத்தமிழரை மனித நேயத்தோடு நடத்த மத்திய – மாநில அரசுகளை நிர்பந்திக்க வேண்டும்.

*2. நிரந்தரத் தீர்வு:* யுத்தம் செய்யும் இரு குழுக்களும் ஒத்துக்கொள்ளும் ஒரு நிரந்தரத்தீர்வு ஏற்பட வழியமைக்க வேண்டும்.

நோர்வே, ஸ்வீடன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற உண்மையான நடுநிலை நாடுகள் நியாயமாகச் சொல்வது எதையுமே சந்திரிகா ஏற்றுக்கொள்வதில்லை.

இந்தியா முயன்றாலும் நடுநிலை வகித்து இப்பிரச்சினையைத் தீர்க்கலாம். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் நடந்த போது இலங்கை பாகிஸ்தானுக்கு உதவியது. அந்த துரோகத்தைக்கூட மறந்து இன்று தமிழருக்கெதிரான யுத்தத்தில் இலங்கைக்கு உதவுகிறதெனில் மத்திய அரசின் தமிழர் விரோதப் போக்கு தெளிவாகிறது.

நேருவின் ஆட்சியில் உகண்டாவில், குஜராத்தியர்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியில் ஓடோடிச் சென்று உதவியது. ஈராக் யுத்தத்தில் மலையாளிகளைக் காப்பாற்ற உன்னிக்கிருஷ்ணன் என்ற அமைச்சர் தனி விமானமே அனுப்பி உதவினார். ஆனால் ஈழத்தமிழர் பிரச்சினையில் பாரபட்சமாய்ச் செயல்படுவதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

மாநில அரசுதான் மத்திய அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் தமிழர்க்கே இருக்கின்றது.

ஏறக்குறைய ஒன்பது கோடிப் பேரான அரபு மக்களுக்கு 25 நாடுகள் இருக்கின்றன; ஐ.நா.வில் 25 வாக்குகள். ஆனால் ஒன்பது கோடித் தமிழருக்கென்று தாயகம், அரசு ஒன்றும் இல்லை என்பது அவமானத்துக்குரியது. ஐ.நா.வில் நமது கருத்துக்களைப் பிரதிபலிக்க எந்த வாய்ப்பும் இல்லை.

எனவே தமிழர்க்கென்றொரு தாயகம் வேண்டும். அது தமிழீழ தாயகமாக மலர வேண்டும்.

கூட்டத்தின் இறுதியில் தமிழர் விரோத சிங்கள இனவெறி, இந்திய அரசுகளை, பத்திரிகைகளைக் கண்டனம் செய்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, கூட்டத்தலைவர் திரு. மெல்கியோர் நிறைவுரையாற்றினார் உரிமைகள் கேட்டுப்பெறுவதில்லை; எடுத்துக் கொள்வதாகும் என்று குறிப்பிட்டார்.

**- ஜெசி**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐ.நா. நோக்கிய அமைதிப் பேரணி

ஐ.நா. மனித உரிமைகள் சம்மேளனத்தின் 53–ம் கூட்டத்தொடர் 1997–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 24–ம் திகதி வரை நடைபெறவுள்ளது. சிறீலங்காவின் மனித உரிமை மீறல் சம்பந்தமாக இக்கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் முன்னரே ஐ.நா. சபை சர்வதேச அமைப்புக்களையும், ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாட்டின் பிரதிநிதிகளையும் சந்தித்து சிறீலங்காவின் மனித உரிமை மீறல் குறித்து விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. குறிப்பாக சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இடம்பெறும் பாலியல் வன்முறைகள், ஆட்கடத்தல், நீதி விசாரணை இன்றி சிறை வைப்பு, பலாத்காரம், துன்புறுத்தல், படுகொலைகள் பற்றியும் சிங்கள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் சிங்கள இராணுவத்தால் இடம்பெறும் கண்மூடித்தனமான குண்டு வீச்சு, பொது மக்கள் வாழும் பகுதிகளில் இரவுபகல் வேறுபாடின்றி நடைபெறும் செல்வீச்சுக்கள், பல்லாயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்வு, பொருளாதாரத் தடை (குறிப்பாக உணவு, மருந்துப் பொருட்கள்) பற்றியும் சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் இப்பகுதிகளில் தொண்டுபுரிவதற்கு சிறீலங்கா





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசு அனுமதி மறுத்து வருவதையும், அத்துடன் போர் நடக்கும் பகுதிகளில் உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளிற்கு தடை போன்றவற்றைக் கண்டித்தும் சிறீலங்கா அரசுக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரக் கோரப்பட்டது. அத்துடன் சிறீலங்கா அரசின் இந்த இன அழிப்பு நடவடிக்கை பற்றி இக்கூட்டத் தொடரின் போது தங்கள் கண்டனக் குரல்களை எழுப்புமாறும் சர்வதேச அமைப்புக்களிடம் கோரப்பட்டது.

மார்ச் மாதம் 10ம் திகதி ஆரம்பமான இக்கூட்டத் தொடரில், ஐ.நா. அங்கத்துவ நாடுகள், பார்வையாளர் நாடுகள், மற்றும் நூற்றுக்கணக்கான ஐ.நா. அரசு சார்பற்ற நிறுவனங்களும் பங்குபற்றின. இக்கூட்டத் தொடரின் ஏழாம் பகுதியான, காலனித்துவ ஆட்சியின் கீழ் அல்லது அயல்நாட்டின் ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிட்சர்லாந்து நாட்டிற்கான பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் அவர்கள் பத்து சர்வதேச அமைப்புக்கள் சார்பாக சர்வதேசக் கல்வி முன்னேற்ற நிறுவனத்தினூடாக தனது கண்டனத்தை அறிக்கையூடாகத் தெரிவித்தார். அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டதாவது, இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காக நாற்பது வருடங்களுக்கு மேலாக சிறீலங்கா ஆக்கிரமிப்பு இனவாத அரசிற்கெதிராக போராடிக்கொண்டிருக்கிறார்கள். சிங்கள இனவாத அரசின் இன அழிப்பு முறைகளும் அவற்றை நிவர்த்திசெய்ய ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களான, *1957–இல்* பண்டா – செல்வா ஒப்பந்தம், *1965* இல் டட்லி – செல்வா ஒப்பந்தம் என்பன, வெற்றி பெற்ற சிங்கள அரசுகளினால் நிராகரிக்கப்பட்டமையால் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள். *1995–ம்* ஆண்டு *19* ஐ.நா. அரச சார்பற்ற அமைப்புக்கள், உப மனித உரிமைகள் சம்மேளனத்தின் *47–ம்* கூட்டத்தொடரில் பின்வருமாறு கேட்டுக் கொண்டன. "கடந்த *12* ஆண்டு காலமாக ஐ.நா. மனித உரிமைகள் சம்மேளனத்தில் நூற்றுக்கணக்கான கண்டன அறிக்கைகள் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல் குறித்து வாசிக்கப்பட்டன. அத்துடன் சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த கட்சிகள் எல்லாம் தொடர்ந்து *56, 58, 61, 72, 77* ஆகிய ஆண்டுகளில் நடாத்திய இனப்படுகொலையின் விளைவாக *1983–ம்* ஆண்டில் தமிழரது தற்பாதுகாப்பு ஆயுத எதிர்ப்பு போராட்டம் முனைப்படைந்தது. தமிழர்களின் இந்த ஆயுத எதிர்ப்புப் போராட்டம் சட்டபூர்வமானது.

இறுதியாக இக்கூட்டத் தலைவரிடம் பின்வரும் வேண்டுகோள்களை விடுத்தார்.

1. சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு இராணுவத்தை தமிழர் தாயகமான இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து உடனடியாக சிறீலங்கா அரசு திருப்பி எடுக்க வேண்டும்.
2. தமிழரது அரசியல் தலைவிதியை தமிழர்களே தீர்மானிக்கக்கூடிய ஓர்



சிறீலங்கா அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த்தேசிய இனத்தின் அவலத்தை அகிலத்திற்கு எடுத்துரைக்கவும், அனைத்துலக நாடுகளிலும் வதியும் தமிழீழ மக்கள் தமிழீழவிடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழத்திலுள்ள மக்களுக்கும் ஆற்றும் உதவிகளின் தார்மீகத்தன்மையை எடுத்துரைக்கவும் சிறீலங்காவின் போர்ச்சூழலே தமிழீழ மக்களை வெளிநாடுகளில் அரசியல் அகதிகளாக்கியுள்ளது என்பதை எடுத்துரைக்கவும் 17.03.1997 அன்று ஜெனீவாவில் மாபெரும் அமைதிப் பேரணி ஒன்றும், பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றும் நடைபெற்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியற் தீர்வினை அங்கீகரித்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இரு பகுதியினரும் ஓர் அரசியற் தீர்வுக்கு வரவேண்டும்.

இக் கூட்டத் தொடருக்கு திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் சர்வதேசக் கல்வி முன்னேற்ற நிறுவனத்தினூடாக வந்திருந்தார். வணக்கத்திற்குரிய குருவானவர் எஸ்.ஜே. இமானுவேல் அவர்கள் 'பக்ஸ் கிறிஸ்டி' என்ற அமைப்பு ஊடாகவும் திரு. மகேந்திரராஜா அவர்கள் சர்வதேசக் கல்வி முன்னேற்ற நிறுவனமூடாகவும் செல்வி. எலிசா மான், செல்வி. டியற்றி மக்கோல்ன் ஆகியோர் 'வடக்கு தெற்கு 21' என்ற சர்வதேச அமைப்பின் ஊடாகவும், திரு. கெங்காதரன் அவர்கள் 'விடுதலை' என்ற அமைப்பின் ஊடாகவும், சர்வதேச கல்வி முன்னேற்ற நிறுவனத்தின் ஊடாக அதன் ஜெனீவா நிரந்தரப் பிரதிநிதி திரு. அன்ரன் பொன்ராசாவும் தமிழ் மக்கள் சார்பில் கலந்து கொண்டார்கள்.



எமக்கென ஆயிரம் கடமைகள் காத்திருக்கின்றன. ஒவ்வொரு மனச்சாட்சி படைத்த ஈழத்தமிழனும் தனது திறமைக்கேற்ப அவன் சார்ந்த துறையில் எமது போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதானது அவனது கட்டாய கடமையாகும். சத்தியமும் அறமும் தாங்கிய இந்த விடுதலைப் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும்

## ஊர்வலம்

இக்கூட்டத் தொடரிற்குச் சிகரம் வைத்தாற்போல் சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனம் 17.03.1997 அன்று மாபெரும் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்து ஜெனீவா நகரையே தமிழ் மக்களினால் நிரம்பச் செய்தது. ஊர்வலத்தின் போது 'எங்கள் தலைவர் பிரபாகரன்', 'எங்கள் நாடு தமிழீழம்', 'சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படையே தமிழீழத்தைவிட்டு வெளியேறு', 'சந்திரிகாவே இனக்கொலையை நிறுத்து' என்ற கோஷங்கள் தமிழ் மக்களால் எழுப்பப்பட்டன. 25 மீற்றர் நீளமுடைய துணியில் "சர்வதேசமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி" என எழுதி மக்களால் கொண்டு வரப்பட்டது. அத்துடன் பெரியளவிலான தேசியக்கொடி இரண்டும் மக்களால் கொண்டுவரப்பட்டன. சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறலைக் குறிக்கும் அட்டைகள் ஆயிரக் கணக்கில் கொண்டுவரப்பட்டன. அத்துடன் தமிழ்த்தேசிய இனம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையதென மும்மொழிகளில் பொறிக்கப்பட்ட மஞ்சள், சிவப்பு நிற பலூன்களையும் மக்கள் கொண்டு சென்றனர். இவ் ஊர்வலத்தில் சுமார் பத்தாயிரம் வரையிலான மக்கள் பங்குபற்றியிருந்தனர். ஊர்வலத்தின் இறுதியில் பிற்பகல் 4 மணியளவில் ஐ.நா. சபையின் 53–ம் கூட்டத் தொடரின் செயலாளரிடம் மனு ஒன்று கொடுக்கப்பட்டதுடன் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. இக் குழுவில் திரு. குமார் பொன்னம்பலம், வண. இமானுவேல் அடிகளார், திரு. மகேந்திரராஜா, திரு. பொன்ராசா அன்ரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தார்கள். ஊர்வலத்தின் இறுதியில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அங்கு ஐ.நா. முன்றலில் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு அதன்பின் சமாதானப்புறாவும் பறக்கவிடப்பட்டது.

'எங்கள் தலைவர் பிரபாகரன்',
'எங்கள் நாடு தமிழீழம்',
'சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படையே தமிழீழத்தைவிட்டு வெளியேறு',



நீங்கள் ஒற்றுமையாக தமிழ்த் தேசிய இனத்தின் குரலாக ஒலிக்க வேண்டும். நீங்கள் ஒட்டுமொத்தமாக எமக்காகப் போராடும் விடுதலை இயக்கத்திற்கு ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்க வேண்டும்.

அத்துடன் விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியக கலைபண்பாட்டுக் கழகத்தினரால் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் பாடப்பட்டது. அங்கு வருகை தந்த மக்களும் அப்பாடலை ஒருமித்துப் பாடினர். இதன்பின் நடைபெற்ற கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சுவிஸ் நாட்டிற்கான பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன், விடுதலைப்புலிகளின் ஜேர்மனி நாட்டிற்கான பிரதிநிதி திரு. சிவநேசன், ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் திரு. சிவநேசமூர்த்தி, டென்மார்க் நாட்டைச் சேர்ந்த திருமதி. டொறிட் புறோசிலியுஸ், இங்கிலாந்தைச் சேர்ந்த டியற்றி மக்கோல்ன், குருதிஷ்தான் விடுதலை அமைப்பைச் சேர்ந்த பெண் ஒருவர், தமிழர் மனித உரிமைகள் நடுவத்தைச் சேர்ந்த செல்வி. எலிசா மான், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பத்திரிகையாளர் மகாநாடு

இவ் ஊர்வலத்திற்கு முன்னதாக காலை 10.30 மணிக்கு Hotel Warwick இல் பத்திரிகையாளர் மகாநாடு சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டது. இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. அன்சலின் பங்கவுஸர், திரு. குமார் பொன்னம்பலம், வண. இமானுவேல் அடிகளார், சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனத்தின் செயலாளர் திரு. சி. சிவாஜி, இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த செல்வி. டியற்றி மக்கோல்ன் ஆகியோர் பங்குபற்றினர்.



அன்சலின் பங்கவுஸர் அவர்கள் தனது உரையில், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் உண்மையானது. அவர்களுக்கு நாம் தார்மீக ஆதரவு வழங்க வேண்டும். ஆனால் சுவிஸ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி நடராஜா முரளிதரனையும் அவருடன் வேலை செய்யும் அங்கத்தவரையும் கைதுசெய்தது ஓர்



**சிறீலங்காப் படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கும் இரவு பகல் பாராது நடைபெறும் செல்வீச்சுக்களுக்கும் பொதுமக்கள் பலியாகின்றார்கள். சிறீலங்கா அரசின் குண்டு வீச்சுக்கு இரு பெரும் தேவாலயங்கள் இலக்காகின. அதில் தஞ்சம் கோரிய மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதற்கு நான் உங்கள் முன்னிலையில் சாட்சி கூறுகிறேன்**

அநீதியான செயல் எனவும் குறிப்பிட்டார். தமிழ் மக்களிடம் வற்புறுத்தல் மூலம் அல்லது பலாத்காரமாக பணம் சேகரிக்கப்படுகிறதா என்ற பத்திரிகையாளர் கேள்விக்குப் பதிலளிக்கையில், வற்புறுத்தல், பலாத்காரம் மூலம் பணம் சேர்த்தல் என்ற குற்றச்சாட்டு பொதுவாக விடுதலை அமைப்புக்களுக்கு எதிராக வைக்கப்படும் ஒரு குற்றச்சாட்டாகும். இதில் எதுவித உண்மையும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

திரு.பொன்னம்பலம் தனது உரையில், தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் நீதி விசாரணைகள் இன்றி சிறீலங்காவின் பல்வேறு பகுதிகளில் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். தமிழர் கொழும்பில் வாழ்வது மிகவும் ஆபத்தானது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். அங்கு பத்திரிகைச் சுதந்திரம் இல்லை. குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளுக்கு அரசு பத்திரிகையாளரை அனுமதிப்பதில்லை. இதை யாரும் கண்டிப்பதில்லை என்றும் கண்டனம் தெரிவித்தார்.

வண. இமானுவல் அடிகளார் தமது உரையில், தான் எந்தவொரு அரசியற் கட்சிக்கும் உட்பட்டவன் அல்ல என்று தெரிவித்ததோடு, 'இன்று நாட்டில் தமிழர்களாகிய எமக்கு வாழ்வதற்குரிய அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு காடுகளிலும், மர நிழல்களிலும் மக்கள் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். சிறீலங்காப் படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்கும் இரவு பகல் பாராது நடைபெறும் செல்வீச்சுக்களுக்கும் பொதுமக்கள் பலியாகின்றார்கள். சிறீலங்கா அரசின் குண்டு வீச்சுக்கு இரு பெரும் தேவாலயங்கள் இலக்காகின. அதில் தஞ்சம் கோரிய மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதற்கு நான் உங்கள் முன்னிலையில் சாட்சி கூறுகிறேன்' என்று தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்,



**சிறீலங்காவிற்கு வெளிநாடுகள் செய்யும் பண உதவிகள் சிறீலங்காவின் தமிழின அழிப்பிற்குப் பயன்படுத்தப்படுகிறது**

இன்று தமிழரின் ஆயுத எதிர்ப்புப் போராட்டமானது, பல சகாப்தங்களாக நடந்துகொண்டிருக்கும் சிங்கள அரசின் அடக்குமுறைகளின் பிரதிபலிப்பாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

செல்வி. டியற்றி மக்கோல்ன் அவர்கள் குறிப்பிடுகையில், சிறீலங்காவிற்கு வெளிநாடுகள் செய்யும் பண உதவிகள் சிறீலங்காவில் தமிழின அழிப்பிற்குப் பயன்படுத்தப்படுகிறது என்றார். அத்துடன் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது.

(ஐநா கூட்டத் தொடர் பற்றிய மேலதிக விபரம், குமார் பொன்னம்பலத்தின் அறிக்கைகள் என்பன அடுத்த வெளியீட்டில் வெளிவரும்.)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிராமத்து உதயங்கள்



அவள் தான், அவளேதான்நேற்று தெருக்கூத்துப் பாக்கேக்க முன்னுக்கிருந்து அழுதாளே, அவளே தான்.

இதயத்துடிப்பின் வேகம் இன்னும் சமநிலைக்கு வரவில்லை. சைக்கிளை வேகமாக உழக்கினேன்.

பொன்னம்பலண்ணர், படுகாட்டாச்சி, நொச்சிக்குளமாச்சி என்று ஒவ்வொருவரின் நினைவுகளும் இடையே மாறிமாறி வந்தன.

ஆக்களோடு அதிகம் பேசாத பொன்னம்பலண்ணர் நேற்றுப் பின்னேரம் என்ன துள்ளுத்துள்ளினார். "ஆர் சொன்னவன் இதில தெருக்கூத்து போடச்சொல்லி; நேற்றுத்தான் காங்கேசுத் தம்பி சந்தியை துப்பரவாக்கச் சொன்னது. இவ்வளவு நேரமும் நான் அதில துப்பரவாக்கிட்டுவாறன். அதில கொண்டுவந்து கூத்தை போட்டிருக்கலாம்தானே. போட்டிருந்தா என்ர மானும் மரைக்குட்டியும் பாத்திருக்குமில்லையா? எங்க காங்கேசுத்தம்பி. நான் பொல்லாதவன் கூத்தை நிற்பாட்டு. காங்கேசுத்தம்பியை வரச்சொல்லு."

பொன்னம்பலண்ணன் கத்தினார். பொழுதும்பட இறக்கிய கள்ளில கொஞ்சம் பூசிப்போட்டார். இல்லாவிட்டால் இப்படிப் பேசுற மனிசனா. வாய்க்குள்ள இருந்து கதை எடுக்கிறதே பெருங்காரியம். கள்ளு அவரைப் பேசவைத்தாலும், அவர் பேச்சில் எந்தளவு உரிமை இருந்தது. ஒரு அசல் கிராமமாய் அவர் நின்றிருந்தார். ஆனாலும் அவரை அடக்கப் பட்டபாடு... கூத்தில் ஒன்றிப் போயிருந்த மருதோடை மக்கள் கூட அவரைக் கோவிக்க வில்லை. கோவிக்கமாட்டார்கள். அவரின் உறுதியிலும், வல்லமையிலுந்தான் அந்தக் கிராமம் இன்னும் இடம் பெயரவில்லை. மருதோடை மட்டுமல்ல இப்பகுதி கிராமத்து 'பழசுகள்' எல்லாத்திட்டையும் வீரமும் உறுதியும் இருந்தது.

படுகாட்டாச்சி: அவரைத் தெரியாத போராளிகள் இல்லையென்றே சொல்லலாம். நீண்ட போராட்ட வரலாறு அந்த முதுமைக்குள் உறங்கிக்கிடக்கிறது. இந்திய இராணுவ இரும்புப் பிடிக்குள் இருந்து போராளிகளைக் காத்து வளர்த்துவிட்ட விறச்சகட்டை அவள். போராளிகள் சம்பந்தப்பட்ட இரகசியங்களை அவள் வாயிலிருந்து எடுக்கவே முடியாது. நேற்று...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பாட்டி என்னக்க வச்சிருக்கிறாய்?''

இடுப்புக்குள் சொருகியிருந்த தொங்கல் சீலைமடிப்பை அவிட்டுத் தோடம் பழமும், விளாம்பழமும் எடுத்து தந்தாள் பாட்டி.

"அது சரியிண, ஜீப்படி கிடக்குது. ஆர் வந்து போனது. தளபதியே.''

"இஞ்ச ஒருத்தரும் வரேல்ல. என்ர வீட்ட ஏன் ஆரும் வாறாங்கள்'' பாட்டி படு பொய் சொன்னாள்.

"என்னண ஜீப்படி இன்னும் அழியேல்ல இந்த மாதிரி சொல்லிறாய். உண்மையைச் சொல்லண''

பாட்டி ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள்.

"எனக்குங்க ஒரு பொடியளேம் தெரியாது. இஞ்ச வரேமில்ல. இங்கால எங்கேம் வந்து போனாங்களோ எனக்குத் தெரியாது.''

பாட்டி சொல்லமாட்டாள். இருந்தாலும் அவளோடு சண்டை போடாவிட்டால் திருப்தியிருக்காது.

"ம் நட. இளனியைக் கிளனியைப் பிடுங்கி குடிச்சிட்டுப்போ'' கூட்டிச் சென்றாள் பாட்டி.

"பாட்டி; பார் ஒரு நாளைக்கு கிழவனையும் உன்னையும் ஆமி வந்து சுட்டுப்போட்டுப் போவான்.''

"சுடட்டன். அது தானே செய்ய முடியும்.''

பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை கண்ட பின்னும் எவ்வளவு உறுதி. ஒரு நாளைக்கு ஒரு பொறுப்பாளர் வீட்டுக்கு வந்து போனால் அதை ஊரெல்லாம் சொல்லிப் பெருமைப்படுபவர்களையும், அதைச் சொல்லியே பயன் பெற நினைப்பவர்களையும் பாட்டியுடன் ஒப்பிட்டுப்பார்த்தால்.....

பாட்டிக்குச் சீவியம் என்ன? தையில வளவில கிடக்கிற பனையள கள்ளுக்குக் கொடுத்தால் வைகாசிக்காத்து எழும்பும் வரையும் காணும். அங்கால மாமரங்களை உலுப்பினால் மாரி வரையும் சீவியம் ஓடும். ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு போராளியாவது பாட்டியிடம் செல்லத் தவறமாட்டார்கள். எண்பது தாண்டியும் எந்தளவு உறுதியோடும் மகிழ்வோடும் இருக்கிறாள் பாட்டி.

படுகாட்டாச்சியின் நினைவுகளோடு நொச்சிக்குளமாச்சியையும் ஒரு நிமிடம் எண்ணிப்பார்த்தேன்.

மாவீரன் அப்பனின் பேத்தி என்று சொன்னால் பலருக்கு விளங்காமலிருக்கலாம். நொச்சிக்குளமாச்சி எண்டால் நெடுங்கேணிப் பிரதேசத்தில இருக்கிற எல்லாருக்கும் தெரியும். நூற்றி இருபதாவது வயதில அவள் செத்திட்டாள். ஆனால் சாகும் வரை எந்தளவு உறுதியோடு இருந்தாள்.

முத்தமெல்லாம் தோடம்பழம் சொரிஞ்சு கிடக்கும். பதினைஞ்சு இருபது நாய்களும், பத்துப்பன்னிரண்டு பூனைகளும் பசு மாடுகளும் அவளைச் சுற்றி நிற்கும். தனக்கில்லாவிட்டாலும் இந்தச் சீவனுகளுக்கு சாப்பாட்டில குறைவிடாள்.

"என்ன பாக்கிறியள். போய் சுத்திப் போட்டு வாருங்கோ. இஞ்ச உங்களுக்கின்னும் சமைக்கேல்ல.''



"வெள்ளச்சி !என்ன இண்டைக்கு முகத்த முகத்தப் பார்த்துக்கொண்டு கிடக்கிறாய். மேச்சலுக்குப் போறேல்லய.''

ஆச்சி ஆரோட கதைக்கிறாள் எண்டு பார்த்தால்..... அந்த நாய்களோடும் பசு மாடுகளோடும் தான்.

வித்தியாசமான ஆச்சி விசித்திரமான உறவு.

இப்போதெல்லாம் நொச்சிக்குளம் கிராமத்து அழகை மந்துக் காடுகள் விழுங்கிவிட்டன. ஆமிக்குப் பயந்து மக்களெல்லாம் இடம் பெயர்ந்து விட்டார்கள். குதூகலமாய் வாழ்ந்த நொச்சிக்குளமாச்சியின்ர வீட்டில ரெண்டு ஜீவன்கள் காத்திருக்கிறார்கள். வேறு யாருமில்லை. நொச்சிக்குளம் ஆச்சியின் பூட்டியும் தாயும்தான்

"என்ர கணவரும் அவற்ற அப்பாவும், அப்பம்மாவும் வாழ்ந்த வீடு. அவர் வீரத்தோடு வாழ்ந்து வீழ்ந்த மண்ணிது. நான் வாழும்வரை இந்த வீட்டில விளக்கணையக்கூடாது.''

அப்பனின் மனைவி கண்கலங்கக் கூறிநின்றதை எப்படி மறக்கமுடியும்?

பனிமூட்டம் குறையத் தொடங்கியிருந்தது. மாடுகள் நடந்து போட்ட ஒற்றையடிப்பாதை. அந்தப் பக்கம் பார்த்தபடி சைக்கிளை மிதித்தேன். ஆமி வரமாட்டான் என்ற நம்பிக்கையோடு அதிகாலையிலேயே புறப்பட்டேன்.

கோர மோட்டை... மாரிபெய்யாததால் குளம் வற்றிக்கிடந்தது. ஆனாலும் குளக்கரையில் நின்ற விளாத்திமரங்கள் நிறையக் காத்திருந்தன. அந்த விளாத்தி மரங்களுக்குப் பக்கத்தே ஓர் உருவம் அசைந்தது. சடுதியாக சைக்கிளை நிறுத்தினேன்.

யாராக இருக்கும். நிச்சயம் ஆமியாக இருக்க முடியாது. ஏனெனில் அது தினமும் பட்டி கட்டும் இடம். அப்படியாயின் அந்த உருவம்.... நீண்ட நேரம் எடுக்கவில்லை.

அவள் தான் அவளேதான்.

தெருக்கூத்துப் பார்க்கேக்க முன்னுக்கிருந்து அழுதாளே... அவளே தான். நின்ற என்னைப் பார்த்து வரும்படி கையசைத்தாள். இதயம் வேகமாக அடிக்கத்தொடங்கியது.

நிற்பதா?... போவதா?... கேட்பதா?...

அவளுடைய முகத்தை ஒரு தடவை ஆழமாக நோக்கினேன். எனது பார்வையும் அதிலிருந்த பயமும் அவளுக்குச் சிரிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். வாயைப் பொத்திக்கொண்டு கிளுக்கெனச் சிரித்தாள். அடுத்தகணம், அவசரத்தை உணர்த்துவது போல் கையசைத்தாள். என்னை நிதானப்படுத்திக் கொண்டேன்.

என்ன?... சூடாகவே கேள்வியை எழுப்பினேன். மீண்டும் அதே சிரிப்பு. ஆனால் இப்பொழுது வாய்திறந்து பதில் தந்தாள்.

"இயக்கத்துக்கு வரப்போறன்''.

இந்தக் கிராமத்துப் பெண்ணுக்கு இந்தளவு துணிவா?... யாரிவள்? படுகாட்டாச்சியின்ர பரம்பரை தான். ஆச்சரியப்பட என்ன இருக்கிறது.

"அக்காக்களை அனுப்பி விடுறன்.'' பதில் கொடுத்ததும் என் சைக்கிள் வேகமாகப் பறந்தது.

**நன்றி: 'வெளிச்சம்'**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எஸ். எம். நடராஜா பாகவதர்

# ஒரு கலைஞனின் நினைவுப் பாதையில்



### ஒரு அனுபவப் பகிர்வு

இணுவிலைப் பிறப்பிடமாகவும் பரந்தனை நீண்டகால வதிவிடமாகவும் கொண்டு 80–ஆவது வயதை எட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் திரு. நடராஜா பாகவதர் அவர்கள் இசை நாடகத் துறையில் 60 வருட அனுபவம் வாய்ந்தவர்.

இசை, நாடகம், நடிப்பு எனப் பல்வேறு துறைகளிலும் வல்லவராகி இன்னும் மேடைகளில் இளைஞனைப் போன்ற உற்சாகத்துடன் வலம் வருகிறார்.

நடிகமணி வைரமுத்து அவர்களினால் மிகவும் மதிக்கப்பட்டவரான இவர் தனது அனுபவங்களை "வெளிச்சம்" வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். வன்னியில் இன்று வாழ்ந்து வரும் இந்த முதுபெரும் கவிஞரை பல்லாண்டு வாழ்க என "வெளிச்சம்" வாழ்த்துகிறது.

கொம்புக்கு வெள்ளிப்பூணும், கழுத்தில் குஞ்சமுமாக 'கல கல' ஒலி எழுப்பி அந்தக் கருங்காளை இழுத்து வரும் ஒற்றைத் திருக்கல் வண்டியில் வந்த அந்த பிரமுகர் யார் என்பது இப்போ எனக்கு நினைவில்லை. ஒரு உடையாராகவோ, மணியக்காரனாகவோ அல்லது ஒரு பெரும் தனவந்தராகவோ இருக்கலாம். வின்ஸர் மடுவத்திற்கு அடிக்கடி வரும் அவரை மடுவ நிர்வாகி ஓடிச் சென்று வரவேற்று முன்வரிசையில் விஷேடமாக கதிரை போட்டு அமரவைப்பார். அவர் யார் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய வயதில் அப்போது நான் இல்லாத போதிலும், அவர் ஒரு சிறந்த கலை இரசிகராய் இருக்கவேண்டும் எனப் பிற்காலத்தில் நினைவுபடுத்திப் பார்த்ததுண்டு.

வின்ஸர் மடுவத்தில் காவலாளியாகவும், ரிக்கற் கிளிப்பவராகவும் பணியாற்றிய எனது தந்தையார் இணுவிலில் இருந்து யாழ்ப்பாணம் வரையும் என்னைத் தோளில் சுமந்து செல்லும் போது, அந்தப் பிரமுகர் 'ஒற்றைத்திருக்கலில்' செல்வதுபோல் நானும், தந்தையாரின் நடைக்கேற்ப மெல்ல அசைந்து கொள்வதுண்டு. தந்தையாரின் செல்வாக்கில் எனக்கும் முன் வரிசையிலே அந்தப் பிரமுகரைப் போல் இடம் கிடைக்கும்; ஆனால் அவர் கதிரையில், நான் நிலத்தில்.

எப்படி இருப்பினும் நாடகம் ஆரம்பித்ததும் என் கவனம் நாடகத்தைப் பார்ப்பதுபோலவே அடிக்கடி அவரிடமும் சென்றுவரும். இசைப் பாடல்கள் வரும்போது தாளம் போடுவதும், சோகம், வீரம், காதல் போன்ற உணர்வுகள் மேடையில் வெளிப்படும் போது அவரில் ஏற்படும் பிரதிபலிப்புகளும், அவரை இரசிக்கும் ஒருவனாக என்னை மாற்றியது. அதாவது எனது கலைப் பயணம் ரசிகனை ரசிக்கும் ரசிகனாகவே முதற்கால் பதித்தது என்று சொல்ல வேண்டும். 'அடம் பிடித்து தந்தையார் வேலைக்குச் செல்லும் போது அவருடன் கூடிச் சென்று, நாடக அரங்கில் அந்த ரசிகப் பெருமானின் ரசனையுடன் ஒன்றிக் கலந்து.... நான் காலப் போக்கில் அவரைப்போலவே தாளம் போடவும் (தாளம் தெரியாவிட்டாலும்), சிரிக்கவும், அழவும், கோபப்படவும் மெய்மறந்து காட்சியுடன் ஒன்றிப் போகவும் கற்றுக் கொண்டேன். இப்படியே ஒரு ரசிகனாக என் கலைத் தொடர்பு ஆரம்பித்த அக்காலத்திலேயே என் சின்னஞ்சிறு உள்ளத்தில் நான் ஒரு "பாகவதராக" வந்து மேடையில் பாடி நடிக்க வேண்டும் என்ற எண்ணம் வேரூன்ற ஆரம்பித்தது. அப்போதெல்லாம் நன்றாகப் பாடத்தெரிந்தவர்கள் மட்டுமே மேடை நடிகர்களாக முடியும்.

நான் பிறந்த ஊரான இணுவிலில் அன்று நிலவிய சூழலை நினைத்துப் பார்க்கும் போது மனதில் மீண்டும் அப்படி ஒரு காலம் வரக்கூடாதா என்ற ஏக்கம் எழுவதுண்டு.

அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து என் தாயாருக்கும், சகோதரிகளுக்கும் மாலை கட்டுவதற்காக பூக் கொய்ய எங்கள் ஒழுங்கையால் செல்லும் போது நிலவும் அந்த இனிமை என் நெஞ்சில் பசுமையாக நிலைத்திருக்கிறது. இன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னும் விலகமுடியாத பனிமூட்டத்தை ஊடுருவிக்கொண்டு பிள்ளையார் கோவிலிலிருந்து தவழ்ந்துவரும் "பெருங் கதை" அதிகாலைப் பொழுதிற்கு சுருதி சேர்க்கும் தவில், நாதஸ்வர இசைகள். தமது திறமையில் கீறல் விழுந்துவிடாமல் இருக்க இசைக்கப்படும் சங்கீத ஆலாபனைகள், நடனம் பயிலும் இளம் பெண்களின் கால் அசைவுகளிலிருந்து வெளிவரும் சதங்கை ஒலிகள் என எங்கும் இசையே விரவி நிற்கும்.

காலங்காலமாக இணுவில் யாழ்ப்பாணத்தின் கலைத்துறையில் ஒரு பிரதான இடத்தை வகித்து வந்துள்ளது. நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் வித்துவான்கள், பாடகர்கள், ஆர்மோனியம் வாசிப்பவர்கள், நடிகர்கள் என கலைத்தாயை அலங்கரித்த பலர் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இது மட்டுமன்றி இந்தியாவில் இருந்து கலைஞர்களை அழைத்து வந்து ஆலய உற்சவங்களில் நிகழ்ச்சிகளை நடத்துபவர் பலர் அங்கு குடியிருந்தனர். அப்படியான ஒரு கலைச் சூழலில் பிறந்த எனக்கு கலைத்துறையில் ஒரு தீவிரமான ஆர்வம் ஏற்படுவது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. எனது தந்தையாருக்கு இசைத்துறையில் ஈடுபாடிருந்ததனால்தான் புத்துவாட்டி குடும்பத்தினருடன் பணியாற்றினாரோ அல்லது அவர்களுடன் பணியாற்றியமையினால் தான் அத்துறையில் ஆர்வம் ஏற்பட்டதோ என்று தெரியவில்லை. ஆனால் நான் சங்கீதம் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டபோது வெகு உற்சாகமாகவே ஆதரவு தந்து எல்லாவிதமான ஊக்கத்தையும் வழங்கினார். அதுமட்டுமன்றி எனக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும் போது வின்ஸர் மடுவத்தில் எம்.கே.தியாகராஜ பாகவதர், எஸ்.டி. சுப்புலஷ்மி (எம்.எஸ். அல்ல) ஆகியோர் தொடர்ச்சியாக வந்து நாடகம் போடுவார்கள். எம்.கே. தியாகராஜ பாகவதரின் கணீரென்ற கம்பீரமான குரலும், மனதைத் தொடும் நடிப்பும் வசனங்களைப் பேசும்போதுகூட, சுருதி, லயம் பிசகாத தனித்துவமும் என்னுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அவரைப் போன்ற ஒரு புகழ் பெற்ற நடிகனாக வரவேண்டும் என்ற ஒரு வெறி என்னுள் முகிழ்ந்தெழுந்தது.

இதன் விளைவாக அந்த வயதிலேயே பிரபல மேதையான திருப்பங்கொட்டை சுப்பிரமணிய பாகவதரிடம் முறைப்படி சங்கீதம் பயில ஆரம்பித்தேன். அப்போ இவரும் புகழ்பெற்ற வித்துவானாக

# எதில் நம்பிக்கை கொள்ள?

- கருணாகரன்

எப்படி மறத்தல் கூடும்

எல்லாவற்றையும்
எங்கே புதைத்திட முடியும்

யுத்த கின்னரர் சந்நதமாடிய
அப்பொழுதுகளை?

வீதிகள் எல்லாம் பீதியிலுறைய
திகிலுடன் கழிந்த அந்தக் கணங்களில்
மரணம்
ஒவ்வொரு முற்றத்திலும் வந்துநின்றதே!

கைது
சித்திரவதை
காணாமற்போதல்
கேள்விகளையும் நியாயங்களையும்
புறந்தள்ளியபடி
கடையிலோ, தெருவிலோ,
பள்ளியிலோ, கோவிலிலோ
அன்றி வீட்டிலோ விளையாட்டரங்கிலோ
கூட
சுடப்பட்டிருந்தது நம் வாழ்க்கை...

எங்கும் சாவின் ஓலம் ஒலித்த
அக்கணங்கள்....

பிள்ளையை இழந்த தாய்.....
அண்ணனை இழந்த சோதரன்...
கணவனை இழந்த மனைவி....
தந்தையை இழந்த பிள்ளைகள்...
இவ்வாறு ஒரு வாழ்வு இருந்ததை
என்றும் மறத்தல் நியாயமோ?

பதின்மூன்று ஆண்டுகள் போயினவாயினும்
ரணம் இன்னும் நெஞ்சுள் வலியெடுக்கிறது

வெலிக்கடைச் சிறையின் கதவின் கீழ்
வடிந்த குருதியின்
ரத்தவாடை .....
ஞாபகத்தின் அடுக்குகளில்
அழிந்திடவில்லை

பூவரசங்குளம்...
கொக்கட்டிச்சோலை...
குமுதினிப்படகு....
குருநகர்...
நவாலி...

நாகர்கோவில்...
என்று எத்தனை படுகொலைகள்....

உப்புக்கும் உரத்துக்கும் செப்புக்கும்
சின்னக்குழந்தையின் பாலுக்கும் கூட
மறுப்பு...
கத்தி, துவக்கு, சப்பாத்து
சாவோலம், வெறுமை, இருள்.......
ஆழப்பதிந்த துன்பியயில்
நொருங்குண்டு நொருங்குண்டு
அழிந்தது நம் கதை.

கனவிலும் நனவிலும்
வாளேந்தி நின்றது சிங்கம்
காவுகொண்ட ஊர்களிலிருந்து
சுவாலைகள் எழுந்தன.

பேய்கள் பற்றிய கதைகளே எங்குமிருந்தன

இன்றோ பேய்கள் உருவம்மாறின
கைகுலுக்கிக் கொண்டன;
புன்னகை புரிந்து
பூச்செண்டேந்தி
கண்களைச் சிமிட்டி
காதலாகிக் கசிந்துருகின

துப்பாக்கி
சப்பாத்து
சீருடை
தொப்பி
முட்கம்பிவேலிகளும் தடையரண்களும்
கொண்டு
ஊர்மனைதோறும் வாளேந்திய சிங்கம்
நிற்கிறது

தலைகவிழ்ந்து
இறங்கி ஏறி
நில்லென்றால் நின்றும்
செல் என்றால் சென்றும்
வாழ்தல் ஒரு சாத்தியமா?

எல்லாவற்றையும் மறந்து
எதில் நம்பிக்கை கொள்வது?

துன்பத்தின் அடைவில்
மீண்டுமொரு
காலத்தைப் புதைத்தல்
தகுமோ?





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்கிய பெரிய பழனியும் ஆலய உற்சவங்களில் நாதஸ்வரக் கச்சேரிகளை நடத்துவதற்காக இந்தியாவில் இருந்து வந்து இணுவிலில் நீண்ட காலம் தங்கி யிருந்தனர்.

இக்காலப்பகுதியில்தான் மெய்கண் டான் சரவணமுத்து என்ற ஒரு அற்பு தமான கலைஞர் யாழ்ப்பாணத்திலும் இசை நாடக வடிவங்களை உருவாக்க வேண்டும் என்னும் துடிப்புடன் 'டப்பா செற்' என்னும் நாடகக் குழுவை ஆரம் பித்தார். இம்முயற்சி பலரின் கேலிக் குரியதாகவும், இந்தியக் கலைஞர்க ளைப் போன்று இவர்களால் தரமான படைப்புக்களை உருவாக்கமுடியுமா என்ற கேள்விக்குரியதாகவும் பார்க்கப் பட்ட போதிலும், அப்போ இந்தியா சென்று கலைஞர்களை இங்கு கொண்டு வருவது, இங்கு நாடக மேடையேற் றங்களை ஒழுங்குபண்ணுவது போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்த 'ஏஜன்டர் கதிர்காமர்' அவர்கள் தந்த ஊக்கம் 'டப்பா செற்' வளர்ச்சியடைய உதவி யது. என்னை அக்குழுவில் இணைப் பதற்கு சிபாரிசு செய்தவரும் அவரே. அன்று புகழ்பெற்று விளங்கிய பொன் னுச்சாமி தேசிகர், ஸ்திரி பாட் சரவண முத்து, சி.ரி.செல்வராஜா, வி.என். செல்வ ராஜா போன்ற அனேக கலைஞர்கள் வளர்ந்தது இப்பட்டறையிலே என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் நான் எனது குருவாகக் கருதும் மெய்கண்டான் சரவணமுத்து அவர்களின் வழிநடத்து தலிலே என்னுடைய முதல் மேடை யேற்றம் இடம் பெற்றது. 'பாதுகா பட் டாபிஷேகம்' நாடகத்தில் முதல் முத லாக நான் வசிஷ்ட முனிவராகத் தோன்றி நடித்தமையும், என் உருவப் பொருத்தமும், குரல் வளமும் சங்கீத ஞானமும் என்னை ஒரு நல்ல நடிக னாக இனம் காட்டின.

பிற்காலத்தில் எனக்கு கிருஷ்ணன், நாரதர் போன்ற பாத்திரங்கள் பெரும் புகழ் ஈட்டித் தந்த போதிலும், இதற் கெல்லாம் வழி திறந்துவிட்டது வசிஷ் டர் பாத்திரம் தான் என்பதில் எனக்கு எவ்வித ஐயமுமில்லை.

இக்கால கட்டத்தில் எம்.ஆர். கோவிந்தசாமி, அனந்தநாராயண ஐயர், சின்னமணி பாகவதர் கமலவேணி போன்றோர் இசை நாடக மேடையில் கொடிகட்டிப் பறந்தவர்கள். அதிலும் எம்.ஆர்.கோவிந்தசாமி அவர்கள், மேடைக்கு வருமுன்பதாகவே பாடும் படி இரசிகர்கள் கூக்குரலிடத் தொடங்கி விடுவார்கள். எனவே ஒப்பனை நடக் கும் போதே எம். ஆர் பாட ஆரம் பித்து, ஒப்பனை முடிந்ததும் தொடர்ந்து பாடியவாறே மேடைக்கு வருவார். அப்போது இரசிகர்களின் 'கரகோஷம்' நாடகக் கொட்டகையின் கூரையையே பிரிக்கும். இதேபோல் அனந்தநாரா யண ஐயர் பிரதான பாத்திரங்கள் செய்யும் காலத்தில் பின்னாளில் நாடக மேடையிலும், சினிமாவிலும் பெரும் புகழ் பெற்ற 'கிட்டப்பா பாகவதர்' 'பலபார்ட்' பாத்திரங்களில் தோன்றி மிக இனிமையாகப் பாடுவார். வின் ஸர் மடுவம் புகழ்பெற்று விளங்கிய காலத்தில் எம்.கே. தியாகராஜ பாகவ தர், சுப்பையா பாகவதர், சுப்பிரம ணிய பாகவதர் ஆகியோரின் நாடகங் கள் மேடையேறும். இவ்வாறே எம். எம். மாரியப்பா எமது நாடக மேடை களில் அடிக்கடி வந்து தமது நாடகங் களை மேடையேற்றுவதுண்டு.

இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ்க்கொடி நாட்டி உலா வந்த எம். ஆர். கோவிந்தசாமி அவர்களுடன் போட்டிக்கு நடிந்தவர்களும் எம்மி டையே இருந்தனர் என்பது ஒரு முக்கி யமான விஷயம். பழக்கடிவேலு அவர் களின் சிறிய தகப்பனாரான இலங்க ராசசிங்கம் நாகலிங்கம் என்ற மேதை, எம். ஆருடன் போட்டியாகப் பூதத் தம்பி நாடகத்தில் நடித்தார். இது புத்து வாட்டிச் சாரதியில் இடம் பெற்றது. இப்போட்டியில் எம். ஆரே வென்ற போதும், மணிக்கணக்காக அவருடன் நின்றுபிடித்துப் போட்டியிட்டு, அவ ரின் பாராட்டை எமது நடிகர் பெற் றது ஒரு மறக்கமுடியாத சம்பவமா கும். இதேபோன்று பிற்காலத்தில் எம். எம். மாரியப்பா அவர்களின் கோஷ்டி யினருடன், நான் சி.ரி செல்வராஜா, வி.என் செல்வராஜா, பபூன் ரத்தினம், ராமலஷ்மி ஆகியோர் அளவெட்டியில் போட்டியிட்டு, இருபகுதியினருமே ஒத்த பாராட்டைப் பெற்றதும் குறிப்பிடத் தக்கது. இப்படி ஒரு ஆரோக்கியமான போட்டி நிலவிய போதிலும் இந்தியக் கலைஞர்களும், நாங்களும் இணைந்து பல நாடகங்களை மேடையேற்றினோம். குறிப்பாக எம்.எம். மாரியப்பா, கிருஷ் ணாழ்வார், சி.ரி., வி.என்., ரமாலஷ்மி, ஆர்மோனியம் சரணவமுத்து, கன்னிகா பரமேஷ்வரி, சந்திரா, பொன்னுச்சாமி தேசிகர் ஆகியோர் பல தடவைகளில் இக்கூட்டு முயற்சிகளில் இறங்கி வெற்றி பெற்றோம்.

இவ்வாறு அளவெட்டியில் திரு. எம்.எம். மாரியப்பா அவர்களுடன் நான் நடித்துக் கொண்டிருக்கும்போது அவர் கற்பனை மெட்டுக்களில் பாடல் களை எடுக்க ஆரம்பித்தார். நானும் விட்டுக் கொடுக்காமல் அவருடைய மெட்டுக்களில் பாடியும், பின் புது மெட்டுக்களை எடுத்து அவருடைய பாணியில் பாடினேன். நாடகத்தின் கடைசிக் கட்டம் வருமுன்பே, அவர் என்னை மேடையில் அழைத்து 'சதா சியமணி' என்ற பட்டம் வழங்கி என் னைக் கௌரவித்துப் பாராட்டினார். இது எனது வாழ்நாளில் என்றும் பசுமையாக நிற்கும் சம்பவமாகும்.

மெய்கண்டான் சரவணமுத்து அவர் கள் காலமான காரணத்தினால் 'டப்பா செற்' என்ற எமது ஆரம்ப நாடகக் குழு மெல்லச் செயலிழக்க ஆரம்பித் தது. எனவே நாங்கள் தனி நாடக மன் றம் அமைக்கவேண்டிய தேவை எழுந் தது. *1940*–இல் இதைத் தொடங்கி னோம். நாம் தனி மன்றமாக இயங்கிய போதிலும் கிருஷ்ணாழ்வார், நெல்லியடி ஐயாமாமா போன்றோர் எமது நாடகங் களில் நடிப்பதும் நாம் இணைந்து செயற்படுவதும் இயல்பாகவே நடந்து வந்தன. குறிப்பாக கிருஷ்ணாழ்வார் யமனாகவும், ராமலஷ்மி சாவித்திரி யாகவும், நான் கிருஷ்ணனாகவும் நடிக் கும் 'சத்தியவான் சாவித்திரி' ரசிகர்க ளிடத்தில் தனி ஆதரவு பெற்றிருந்தது.

இதே போன்று எங்களது 'பவளக் கொடி' நாடகமும் ஒரு தனி முத்திரை பதித்திருந்தது. இது சங்கரதாஸ் சுவாமி களால் எழுதப்பட்டு மேடையேற்றப் பட்ட நாடகமாகும். இயல்பான சங்கீத ஞானம் உள்ளவர்களே இந்நாடகத் தைச் சிறப்பாகச் செய்யமுடியும். இதில் வரும் இராகமாலிகைகள் நடிகர்களுக்கு ஒரு பரீட்சை என்றே சொல்லவேண் டும். எவ்வளவுக்கெவ்வளவு நுட்பமாக அந்த இராகங்களைக் கையாளுகி றோமோ, எவ்வளவு அலங்காரங்களை

**கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களைச் சிந்திக்க தூண்டவேண்டும்; பழமையிலும் பொய்மையிலும், பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்கவேண்டும்; மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.**

*– தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வைக்கிறோமோ அந்தளவுக்கு அந்நாடகம் சிறக்கும். இதில் நான் கிருஷ்ணனாகவும், சி.ரி. செல்வராஜா அர்ச்சுனனாகவும் வரும் கட்டங்களில் போட்டி எழுந்துவிடுவதுண்டு. கற்பனை மெட்டுகளால் மோதிக்கொள்வோம். அதிலும் போட்டி உச்சமடைந்து சுரவரிசைகளால் மோத ஆரம்பித்துவிட்டால் ரசிகர்கள் மத்தியில் ஒரே கரகோஷம் தான். இப்படி எங்களுக்கு மக்கள் தந்த ஆதரவு காரணமாக இப்போட்டியை நாடகத்தில் நிரந்தர அம்சமாகவே இணைத்துவிட்டோம்.

சங்கீதக் கச்சேரி செய்யும் வித்துவான்களைப் போன்றே, இசைநாடகக் கலைஞர்களுக்கும் ஆழமான கற்பனை வளமும், சமயோசிதமாக செயற்படும் ஆற்றலும் தேவை. அவர்களுக்கும் வாத்தியக்காரர்களுக்குமிடையே ஒருவிதமான போட்டி ஏற்படுவதுண்டு. இவ்வாறே இங்கு நடிகர்களுக்குள்ளும் ஏற்படுவதுண்டு. சங்கீதம் என்பது ஒரு கடல். அதை நெருங்க நெருங்க அது தானாகவே கலைஞனுக்குப் பற்பல புதிய திறமைகளை வழங்கிவிடும்.

உதாரணமாக திரு. வைரமுத்து அவர்கள் எங்களைவிட இளைய கலைஞனாக இருந்த போதிலும், அவர் கலையின் மேல் வைத்திருந்த பக்தியும், புதிது புதிதாகச் செய்வேண்டும் என்ற துடிப்பும், மூத்த கலைஞர்களுக்கு மதிப்பளித்து அடக்கத்துடனும், பணிவுடனும் அவர்களிடமிருந்து மேலும் கற்றுக் கொள்ளும் சுபாவமும் அவரை ஒரு அற்புதமான கலைஞனாக்கின. மோகன இராகம் மத்திமத்தில் வரும்போது கனிவைக் கொடுக்கும். அதுவே மேல் ஸ்தாயி எடுப்பு மோகனமாகும் போது கோபத்தை வெளிப்படுத்தும். 'யாரடி கள்ளி' என்ற மயானகாண்டப் பாடலை சங்கரதாஸ் சுவாமிகள் எடுப்பு மோகனத்தில் அமைத்திருந்த போதிலும் அதை வைரமுத்து அவர்கள் கையாளும் விதம் தனித்துவமானது. கோப உணர்வை வெளிப்படுத்தும் 'அடானா' இராகத்தை திருமதி எம்.எஸ். சுப்புலஷ்மி அவர்கள் 'நீயிரங்காயெனில் புகழேது' என்ற பாடலில் சோக ரசம் ததும்பப் பாடியதை இங்கு நினைவு கூரலாம். இன்று பல கலைஞர்கள் வைரமுத்து அவர்களைப் பின்பற்றுவதன் காரணம் அவரது இத்தகைய தனித்துவங்களே. இது போன்றே சி.ரி. செல்வராஜா அவர்களுக்கு இரவில் பார்வை தெளிவாக இருப்பதில்லை. ஆனால் யாராவது கைப்பிடித்து மேடையில் ஏற்றி விட்டால், எவருமே அவர் பார்வைக் குறைபாட்டைக் கண்டுபிடிக்கமுடியாது. இவையனைத்தும் கலைத்தாய் மேல் இவர்கள் கொண்ட பக்தி காரணமாக அவள் வழங்கிய கொடைகள் என்பதை மறக்கக்கூடாது.

அறுபது வருடங்களுக்கு மேலாக இசை நாடகத் துறையில் ஒரு தொழில் நடிகனாகவே என்னை இணைத்துக் கொண்ட நான் இன்று வரை நடிகனாகவும், பயிற்சியாளனாகவுமே இருந்து வருகிறேன். என் இறப்புவரை இது தொடரும். எனது இனிய அனுபவங்கள் இளைய கலைஞர்களை மேலும் மெருகுபெற உதவுமானால் நான் மிக மகிழ்ச்சியடைவேன். ★

# மொஹஞ்சதாரோ வண்டி



தமிழீழத் தெருக்களில் இன்று மாட்டு வண்டிகளை நித்தம் காணலாம். இவை போன்ற வண்டிகளை இற்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களும் உபயோகித்தனர். அங்கு சிதைவுகளாகக் கண்டெடுக்கப்பட்ட பொருட்களிடையே களிமண்ணால் செய்யப்பட்ட வண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. எனவே, அப் பழைய கால நாகரிக மக்கள் இத்தகைய வண்டிகளை உபயோகித்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

இந்தியத் துணைக்கண்டத்தில் வடமேற்குப் பகுதியில் ஓடும் மிக முக்கியமான நதி இந்து நதியாகும். இது இன்று பாகிஸ்தானுக்குச் சொந்தமானது. இமய மலையில் உற்பத்தியாவதும், ஜீலம், செனாப், ரவி, பியாஸ், சட்லெஜ் ஆகிய கிளைகள் ஐந்தையும் கொண்டதுமான இந்து நதி கராச்சித் துறைமுகத்துக்கருகில் அராபிக் கடலில் விழுகிறது. இந்துநதிப் பள்ளத்தாக்கில் மிக ஆதிகாலம் தொட்டு மக்கள் குடியேறியிருந்தனர்.

கிறிஸ்துவுக்குப் பின் 1921-ஆம் ஆண்டு தயாராம் ஷனி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் பஞ்சாப்பில் ரவி நதிக் கண்மையில் ஹாரப்பா என்ற நகரத்தின் சிதைவுகளைக் கண்டுபிடித்தார். 1922ஆம் ஆண்டு ஆர்.டி. பனர்ஜி என்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் இந்துநதியின் கீழ்ப்பகுதியிலுள்ள சிந்துப் பிரதேசத்தில் மொஹஞ்சதாரோ என்ற பண்டை நகரின் சிதைவுகளை கண்டுபிடித்தார். இவற்றைத் தவிர இந்துநதி நாகரிகத்துடன் சம்பந்தப்பட்ட வேறு எழுபது இடங்களையும், வேறு புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். இவற்றுள் சில இந்துநதியின் மேற்பகுதியிலும், சில கங்கை நதியின் மேற்பகுதியிலும், வேறுசில குஜராத்திலும், நர்மதா நதி ஆற்றுமுகத்துக் கருகிலும் அமைந்துள்ளன. இவற்றிலிருந்து இம் மக்கள் இந்து நதிப் பள்ளத்தாக்கிலும் இந்தியாவின் ஏனைய பிரதேசங்களிலும் பரவியிருந்தனர் என்பது தெளிவாகின்றது. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் மொஹஞ்சதாரோவிலும் ஹாரப்பாவிலும் மாபெரும் நகரங்களைக் கண்டுள்ளனர். இந்நகரங்களில் பதிந்த மதில் சுவர்களுக்குள் அமைந்த உள் நகரங்கள் இருந்தன. பிரதான கட்டிடங்களெல்லாம் உள் நகரத்திலேயே அமைந்திருந்தன. மதில்களுக்கு அப்பால் அமைந்திருந்த வெளி நகரில் சாதாரண குடிமக்கள் வாழ்ந்தனர். கட்டடங்களும் மதில்களும் ஒரேமாதிரியான கற்களால் கட்டப்பட்டிருந்தன.

இவ்விரு நகரங்களிலும் பெரிய தானியக் களஞ்சியங்கள் அமைந்திருந்தன என்பது சிதைவுகளிலிருந்து புலனாகிறது. அவர்களுடைய பிரதான உணவு கோதுமையாக இருந்தபோதும், வாற்கோதுமை, எள் ஆகிய தானியங்களையும் பயிரிட்டுள்ளனர். ஆடு, மாடு, எருமை, பன்றி, செம்மறி, கழுதை ஆகிய விலங்குகளை வளர்த்துள்ளனர். கோழிகளும் நாய்களும் வளர்க்கப்பட்டுள்ளன.

ஆண்களும் பெண்களும் பருத்தியினாலான மென்மையான உடைகளை அணிந்துள்ளனர். தங்கம், வெள்ளி, செப்பு, யானைத்தந்தம் ஆகியவற்றைக் கொண்டு செய்த காப்பு, மாலை, காதணி, மூக்கணி, நெற்றிப்பட்டம், கணையாழி ஆகிய அணிகளை அணிந்துள்ளனர். இந் நாகரிக மக்களது வீடுகளில் குளியலறைகள் இருந்துள்ளன. வீதிகள், வடிகால்கள் இந்நகரங்களில் நன்கு அமைந்திருந்தன. சித்திர எழுத்துக்களை இந் நாகரிக மக்கள் பயன்படுத்தியுள்ளனர். இங்கு அகப்பட்ட சிலைகள், சின்னங்கள் என்பவற்றைக் கொண்டு இங்கு திராவிட நாகரிகம் செழித்திருந்துள்ளதெனக் கணிக்கின்றனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கறைகள்

விறாந்தையில் சைக்கிள் நிற்பாட்டும் சத்தம் கேட்டு சமையல் அறையில் இருந்து அம்மா கேட்டாள்.

"என்ன பிள்ளை! இவ்வளவு நேரம்... சாப்பாடும் இல்லாமல் நின்றிட்டு வாறாய்?......"

"ஸ்ரூடியோவில சின்ன அண்ணையின்ர படத்தைக் கேட்டனான்...... இன்னும் மூன்று நாளில எல்லா வேலையும் முடிச்சுத் தாறம் எண்டு சொல்லினம்....." சொல்லியவாறு சமையல் அறையை நோக்கி நளினி வந்தாள்.

".....அம்மா! சின்ன அண்ணையின்ர நினைவு தினத்திற்குப் பள்ளிக்கூட வாசலிலை பெரிய முழுப் படத்தை பள்ளிக்கூடக்கணக்கா வைக்கப்போயினம். அந்தப் படத்தைப் பார்த்தனான் சரியாச் சின்னண்ணை உயிரோட வந்த மாதிரி....." கண்களில் பாசம் பிரகாசமாக ஒளிவிட நளினி சொன்னாள்.

".....ம்......ம்..... பள்ளிக்கூட வாசலிலும், முச்சந்திகளிலும் அவன் படமாகத் தொங்கிக் கொண்டிருக்க.... நான்..." நளினிக்கு விளங்கிவிட்டது. இனி, அம்மா ஒரு வேலையும் செய்யாமல் சின்னண்ணையை நினைத்து அழுது கொண்டிருக்கப் போகிறா என்று.

நளினியின் சின்னண்ணை மணி, ஆறு வருடங்களுக்கு மேலாக இயக்க செயல்பாடுகளில் ஈடுபட்டு சென்ற தை மாதம் நடந்த மன்னார் மோதலில் தன்னுயிரை விட்டு மாவீரனானவன். அவனது முதலாவது நினைவு தினம் வருகிற தை மாதம் வருகிறது. அம்மா விரல் நுனியில் துக்கத்தையும், கண்ணிறையக் கண்ணீரையும் எந்த நேரமும் கொட்டிவிடத் தயாராகத் தான் இருப்பாள்.

சின்ன அண்ணையின் நினைவில் இருந்த அம்மாவைத் திருப்ப நளினி கேட்டாள்.... அம்மா! பெரியண்ணை சனிக்கிழமை கொழும்பு போகப்போறன் என்றவர்...... உடுப்புகள் தோய்க்கச் சொன்னவரோ?...

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அம்மா சொன்னாள்..... ஓம் பிள்ளை மறந்து போனன். கொடியில கிடக்கிற மூண்டு சோடி உடுப்பையும் தோய்க்கச் சொன்னவன்..... என்றபடி அம்மா சமையலைத் தொடர்ந்தாள்.

நளினி பெரியண்ணையின் அறைக்குள் சென்று கொடியில் கிடந்த உடுப்புகளை உருவி எடுத்தாள். ஜீன்ஸ் ஒன்று பொத்தெனக் கீழே விழுந்தது. அது விழுந்தபோது பலத்த சத்தமாக இருந்தது. நளினிக்கு மனம் திக்கென்றது.

........ அண்ணையுடைய பொக்கற் றேடியோ ஜீன்ஸ் பைக்குள் கிடந்ததோ...... உடைந்து நொருங்கின..... கடவுளே அண்ணைக்கு என்ன மறுமொழி சொல்லுவன்..... எண்ணியவாறு ஜீன்ஸ் பையை மேலாகத் தடவிப் பார்த்தாள்.

பலமான சந்தேகம் மூளையை மின்னலெனத் தாக்கியது... இது நிச்சயமாகப் பொக்கற் றேடியோ இல்லை.... அப்ப...அவளுக்கு சந்தேகம் வலுத்தது. பைக்குள் கையைவிட்டு எடுத்தாள். அவள் நினைத்தது சரிதான். அது 'கைத்துப்பாக்கி' அண்ணைக்கு ஏன் துவக்கு..... அண்ணையும் ஒரு வேளை சின்னண்ணை மாதிரி..... சீ..ச்...சீ இருக்காது. இரகசியமாக எப்படி இயக்கத்திலை இருக்கமுடியும்.... பத்து வருஷங்களுக்கு முன் எண்டால் அது சரியாய் இருக்கும்.... இப்ப எல்லாம் வெட்ட வெளிச்சம் தானே.... என்று பலவாறாக சிந்தித்தபடி அம்மாவைக் கூப்பிட்டாள்.

அம்மா கையின் ஈரத்தைச் சேலைத் தலைப்பில் துடைத்தபடி வந்தாள். நளினி காட்டிய கைத்துப்பாகியைப் பார்த்தவுடன் வெலவெலத்துப் போனாள்.

.... சேலைத் தலைப்புள் மறைந்து நின்று வேடிக்கை காட்டிய மணி.... பெரியவனாக வளர்ந்து படிப்பில் மிகக் கெட்டிக்காரனாகி.... விளையாட்டில் வீரனாகி.... ஒரு நாள் போராளியாகி துப்பாக்கியுடன் வந்தபோது எப்படி நடுங்கினாளோ அதிலும் பார்க்கப் பல மடங்கு பெரிதாக இப்போது நடுங்கினாள். சின்னவன்தான் போய்விட்டான் என்றால் பெரியவனது ஆறுதலாவது இருந்தது. இப்போ பெரியவனும் இப்படியெண்டால் இந்தப் பெட்டையை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்?..... கலங்கினாள் அம்மா.

பிள்ளை இவன் எப்ப இதில சேர்ந்தவன்.... ஒருவேளை தம்பி மணியின்ரை துவக்கோ. சந்தேகத்துடன் அம்மா கேட்டாள்...

"..... இல்லை அம்மா! சின்ன அண்ணையுடைய துவக்கு இஞ்சை இல்லை.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்ன அண்ணை எந்த நேரமும் இடுப் பிலதானே கட்டி இருப்பார்.

..... அப்ப பிள்ளை இந்தத் துவக்கு இவனுக்கு எப்படிக் கிடைச்சது" அம்மா கேட்டாள்.

....அம்மா இதைக் கொண்டுபோய் என்னுடைய பெட்டியில வைக்கிறன்... அண்ணை வந்து கேட்டால், தெரியாது எண்டு சொல்லுவம்.... அண்ணையு டைய வாயால் உண்மை வரட்டும் நீ ஒண்டும் பேசாதை.... சத்தம் போட் டுக் கதைக்காதை"

நளினிக்குச் சந்தேகம் முளைத்து கிளைவிட்டு பரவத் தொடங்கியது... அண்ணை வெளிப்படையாக இயங் காமல் மறைவில் இரகசியமாக இயங் குகிறானோ.... பலர் அப்பிடியும் இயங் குவதாக அவள் கேள்விப்பட்டிருக்கி றாள்.... ஆனால் இவ்வளவு நாளும் தனக்குத் தெரியாமல் எப்படி இயங்க முடியும்.... மாணவர் அமைப்பானாலும் போர்க்கால நடவடிக்கையானாலும் இராப்பகலாகப் போராளிகளுடன் இயங்கி இருக்கிறாள். எத்தனையோ மாவீர இறுதிச் சடங்கில் கலந்திருக்கி றாள். ஒருநாளாவது அண்ணையை எந்த இடத்திலும் காணவில்லை.... சந் தேகத்துடன் அண்ணனின் பெட்டியை மெள்ளத் திறந்தாள்.

..... பிள்ளை அவன்ரை பெட்டி யைத் திறவாதை.... வந்து தொங்கப் போறான்.....! அம்மா தடுத்தாள். பெட் டியை ஆராயாமல் மூடப் போன நளி னியை பெட்டியின் மேலாக தாறுமா றாக, வளைந்தும் நெளிந்தும், கீறிய காகிதம் கவனத்தைத் திருப்பியது. இரண்டாக மடிக்கப்பட்டிருந்த அந்த காகிதத்தை விரித்து மேசையில் பரப்பி னாள். அவளது கண்கள் வியப்பால் விரிந்தன. நெஞ்சுக் கூட்டுக்குள் பட பட என பந்துகள் எழும்பிக் குதித்தன.

பல, பல நிறங்கள் தீட்டிய வரை படம் அது. ஏதோ ஒரு நிலப் பகுதி அழகாகத் துல்லியமாக வரையப்பட்டி ருந்தது. பல இடங்களில் சிவப்புப் புள் ளிகள் கண்களைச் சிமிட்டின. இரண்டு சிவப்புப் புள்ளிகளுக்கு அருகே நீல நிற மையால் சரி போட்டிருந்தன.

..... பிள்ளை அவன் வாற நேரம்.... அதை வை பிள்ளை! அம்மா ஆத்தி ரத்துடன் அவசரப்படுத்தினாள்.

நளினி சரியான நிலைக்கு படத் தைத் திருப்பிக் கொண்டாள்..... ஓ.... அவளுக்கு இப்போ புரிந்துவிட்டது. அது எந்தப் பிரதேசத்தை உள்ளடக் கிய படம் என்று நன்றாகப் புரிந்து விட்டது..... சிவப்புப் புள்ளிகள் நிச்சய மாகப் போராளிகளின் முக்கியத் தளங் களைக் காட்டுகின்றன.

சரி போட்ட இரண்டு இடங்கள்... அடக்கடவுளே! போன கிழமை சிறீ லங்கா குண்டு வீச்சு விமானங்கள், குண்டு வீசி அழித்த பகுதிகளா?....

நளினியின் கைகள் நடுங்குவதைக் கண்ட தாய் கேட்டாள், என்ன பிள்ளை! பேப்பரைப் பிடித்துக் கொண்டு நடுங் குகிறாய். உள்ள வையன்......

அம்மா இது பேப்பரில்லை..... எங் கடை உயிர்.... அண்ணை போரா ளியோ என ஏங்கிப் போனாய்..... அவன் யமன் எண்டு அறிஞ்சால் நீ செத்துப் போய்விடுவாய். அம்மா எதுவும் விளங் காமல் நளினியை உற்றுப் பார்த்தாள். அம்மா! அண்ணை மோட்டார் சைக் கிள் பிஸ்னஸ் எண்டு சொல்லி அடிக் கடி கொழும்புக்குப் போனானே, அவன் வேற வியாபாரம் செய்துதான் காசு சம்பாதிக்கிறான். என்னடி விசர் அலம்பு கிறாய்" அம்மா கோபத்துடன் கேட் டாள்.

.... ஓம் அம்மா எங்கட மண்ணை... எங்கட இரகசிய இடங்களை.... எதி ரிக்குப் படம் போட்டுக்காட்டிப் பணம் சம்பாதிக்கிறான். அந்தப் பணத்தில தான் நானும் நீயும் உடம்பு வளர்த்தி ருக்கிறம்...." அருவருப்புடன் சொன் னாள் நளினி.

..... என்னடி சொல்லுகிறாய்.... அவன் அப்படிச் செய்வனே? மணியின்ர தமை யன்தானே அவன்..... நீ எல்லாத்தை யும் போட்டுக் குழப்பாதை.... அவன் வரட்டும் இஞ்சால வா? நளினி பெட்டி யைப் பழையபடி மூடிக்கொண்டாள். கைத்துப்பாக்கியை மாத்திரம் தனது அறையை நோக்கி கொண்டு போனாள். நடை தளர்ந்திருந்தாலும் சிந்தனை தளராமல் தொடர்ந்தது..... அண்ணை யின் மேசையில் பரவிக் கிடக்கும் பல நிறப் பேனைகள்..... அறையைப் பூட் டிப் போட்டு இரவு நெடு நேரம் வரை ஏதோ எழுதுவதும் சில நேரங்களில் கையில் 'கமெரா' வுடன் வருவதையும் அவள் கண்டிருக்கிறாள். கமெராவைப் பற்றிக் கேட்டால் அவனிடமிருந்து பதிலே வருவதில்லை. எல்லாவற்றை யும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் வரைபடம்தான் முடிவுக்கு வந்தது.

மத்தியானச் சமையலை இடையில் நிறுத்திவிட்டு அம்மா விறாந்தையில் ஓரத்தில் பாயில்லாமல் படுத்துக் கிடந் தாள். மூடிய கண்களுக்குள், சின்ன வன் மணி இடுப்பில் கைத்துப்பாக்கி யைக் கட்டியபடி சிரித்தபடி வந்து போனான். பாடசாலை முகப்பில் ஒளி வெள்ளத்தில்...... பனை அளவில் நின்று ஊரைப் பார்த்து சிரித்துக் கொண்டி ருந்தான். நளினி சொன்னமாதிரி பெரிய வன் முகாம்களைக் காட்டிக் கொடுக் கிற அலுவலாகத்தான் அடிக்கடி கொழும்பு செல்கிறானோ? இல்லை... இல்லை.... திடுக்கிட்டு எழுந்து சுவ ரோடு சாய்ந்து கொண்டாள்.

வெளியே மோட்டார் சைக்கிள் வந்து நிற்கும் ஒலி கேட்டு, ஓ.... பெரிய வன் சரவணன். வந்துவிட்டான் போல..

**மூடிய கண்களுக்குள், சின்னவன் மணி இடுப்பில் கைத்துப்பாக்கியைக் கட்டியபடி சிரித்தபடி வந்து போனான். பாடசாலை முகப்பில் ஒளி வெள்ளத்தில்...... பனை அளவில் நின்று ஊரைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். நளினி சொன்னமாதிரி பெரியவன் முகாம்களைக் காட்டிக் கொடுக்கிற அலுவலாகத்தான் அடிக்கடி கொழும்பு செல்கிறானோ? இல்லை... இல்லை.... திடுக்கிட்டு எழுந்து சுவரோடு சாய்ந்து கொண்டாள்.**

அம்மா எதுவுமே நடக்காதமாதிரி எழுந்து கொண்டாள். விரைவாக சமை யல் அறைக்குள் போனாள். சரவணன் தன் அறையை நோக்கி நடந்தான். சமையல் முடியவில்லை தேத்தண்ணி போட்டுத்தரட்டே அம்மா கேட்டாள். குரலில் நடுக்கம் இழைத்தது. "வேண் டாம்..... அவசரமாக நான் போகப் போறன்..... நாளைக்கு கொழும்புக்குப் போக வேணும்... நளினியை உடுப்புக ளைத் தோய்க்கச் சொல்லம்மா.... அறைக் குள் நுழைந்தான் சரவணன்."

நளினி தன்னறையை விட்டு வெளியே வந்து சரவணனின் அறையை எட்டிப் பார்த்தாள்

சரவணன் பெட்டியைத் திறந்து, நளினி பார்த்த அதே வரை படத்தை எடுத்து மடித்து ஒரு அறைக்குள் போட்டுக் கொண்டான். இன்னுமொரு உறையை எடுத்து.... உள்ளங்கையை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விரித்து அதில் கொட்டினான். அது ஒரு புகைப்படச்சுருள் என்பதை நளினி தெரிந்து கொண்டாள். அவளது நெஞ்சு திடுக்குற்றது. சரவணனின் அறைக்குள் திடீரென நளினி நுழைந்தாள்.

அண்ணை! அது என்ன பிலிம் சுருள்..... கேட்டாள், சரவணன் அதிர்ந்து விட்டான். அது... அது....நானும் சினேகிதர்களும் எடுத்த படங்கள். நாளைக்கு கொழும்புக்குக் கொண்டு போய் கழுவ வேணும்..... அப்ப, கவருக்குள் கிடக்கிற அந்தப்படம்...... "வரைபட உறையைக் காட்டிக் கேட்டாள்.

"...... அது படமல்ல கடிதம்..... சரவணன் எடுப்பதற்கு முன் நளினி முந்திக் கொண்டாள்.

அண்ணை உள்ளதைச் சொல்லு.... நீ என்ன வேலை செய்கிறாய்?.....

நளினி! இது எல்லாம் உனக்குத் தேவையில்லாத விஷயங்கள்....." முகாம்களையும் இரகசிய இடங்களையும் நிறம் நிறமாக படம் கீறுவதும்– அதுகளைப் படம் பிடிக்கிறதும்தான் தேவையான விஷயங்களோ....." பார்த்தாள் நளினி.

.....தேவையோ.....தேவையில்லையோ இதனாலை எனக்கு நிறைய வருமானம் வருகுது.... இதுவரையும் சமையல் அறையில் புழுங்கிக் கொண்டிருந்த அம்மா வெளிப்பட்டாள்..... டேய்! பெரியவா நீ என்ன சொல்லுகிறாய்.... காசு வருகிறது என்றால் எதையும் செய்வியோ? தம்பி மணியைப் பற்றி கொஞ்சமாவது யோசிச்சியோ..... அவனாலை என்னமாதிரி தலைநிமிர்ந்து நடக்கிறம். நீ தலையைக் குனியிற வேலையல்லோ செய்கிறாய்.... அம்மாவுக்கு மூச்சிரைத்தது.

...... அம்மா உங்களுக்கெல்லாம் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. கொஞ்சம் கத்தாமல் இருங்கோ. ஐயோ! இந்தப் பிள்ளையின்ர புத்தி ஏன் இப்பிடிப் போச்சுது. இது மண்ணைக் காட்டிக்கொடுத்து காசு சம்பாதிக்குது.... தலையில் அடித்துக் கொண்டு அம்மா புலம்பினாள்.

.... நளினி அந்தப் படத்தைக் கொண்டா.... நளினி படத்துடன் வெளியே வரமுயன்றாள். சரவணன் மிக இறுக்கமாக நளினியின் தலைமுடியைப் பிடித்துக் கொண்டான். அவளது கையில் இருந்த வரைபடத்தை திருகிப் பறிக்க முனைந்தான். அவள் நிலத்தில் விழுந்து கால், கைகளை அடித்துக் கொண்டாள்.

".... விடடா அவளை... விடடா..." அம்மா சரவணனின் முதுகில் ஓங்கி அடித்தாள். நளினியின் கையில் இருந்த வரைபடம் கசங்கிய நிலையில் சரவணனின் கைக்கு மாறியது..... போ நாயே காலால் எட்டி உதைத்தான். நளினி அறைக்கு வெளியே போய் விழுந்தாள்.

நீ என்னடா எல்லாரையும் முடிவெடுக்க நிக்கிறாயோ.....? அம்மா கத்தினாள். நளினி எழுந்து மிக விரைவாக தன் அறைக்குள் போனாள். எதையும் காதில் வாங்காத மாதிரி சரவணன் அவசர அவசரமாக புறப்பட்டுக்கொண்டிருந்தான்.

"...... அண்ணை! "குரல் கேட்டு சரவணன் திரும்பிப் பார்த்தான். பொறி கலங்கிப் போனான். நளினி வாசலை மறித்தபடி நின்றிருந்தாள். அவளின் இரண்டு கைகளும் இறுக்கமாக கைத்துப்பாக்கியைப் பிடித்துக்கொண்டிருந்தன. அம்மா வெலவெலத்துப்போனாள். பிள்ளை..." கத்த முனைந்தாள். சத்தம் வெளியே வரவில்லை. பயம் கலந்த சிரிப்புடன் சரவணன் சொன்னான்." அதை இங்கை கொண்டுவா.... இரண்டு காலடி எடுத்து வைத்தான்.

".... அண்ணை! கிட்ட வராதை.... சின்ன அண்ணை எனக்கு சுடக்காட்டிக் கொடுத்திருக்கிறார். அது உனக்கு நல்லாத் தெரியும். நாளைக்கு விசாரணை எண்டு உன்னைப் பிடித்துக் கொண்டு போய்.... நாலாயிரம் பேர் பார்க்க நாற்சந்தியிலை வைச்சுச் சுடுவதிலும் பார்க்க நான் சின்னண்ணை, நீ எல்லாரும் தவழ்ந்த இந்த நடு வீட்டில உனக்கு தண்டனை தாறன்.... அம்மாவின் காலடிச் சத்தம் நளினிக்குப் பின்னால் கேட்டது. அதையும் மீறி... பட்... பட்... என்ற துப்பாக்கிச் சத்தம் வீட்டைக் கலங்க அடித்தது. நெஞ்சால் இரத்தம் வழிய முழங்காலில் சரிந்தான் சரவணன். அம்மா ஓங்கி ஓங்கித் தன் தலையிலும் நளினியின் தலையிலும் அடித்துக் கொண்டாள் ஆனால் தொண்டையைவிட்டு சத்தம் வரமறுத்தது.. ஒரு வேளை இவனுக்காக அழக் கூடாதென குரலில் முடங்கிவிட்டதோ?.. பத்து மாதங்கள் கட்டிக் காத்த கருவறையில் இருந்து பந்தாகப் புறப்பட்ட ஏதோ ஒன்று தொண்டையின் ஊடாக விசும்பலாக வெளிவந்தது.

சரவணனுக்கு அருகே கிடந்த வரைபடம்... மேசையில் கிடந்த படச் சுருள் துப்பாக்கி எல்லாவற்றையும் தன் கைப்பைக்குள் போட்டுக் கொண்டு நளினி புறப்பட்டாள். அவளது கன்னங்களில் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது.

விறாந்தையில் சைக்கிள் சத்தம் கேட்டது. அம்மாவிற்குத் தெரியும் நளினி போராளிகள் முகாமிற்குப்போகிறாள் என்று.... அம்மா தொடர்ந்து வீட்டின் நடுப்பகுதியில் கிடந்து புரண்டு புரண்டு அழுதுகொண்டிருந்தாள்.

**க.சிவராஜா**
தமிழீழம்

# முதன் முதலாக

★ ஈழநாட்டில் முதலாவது தமிழ்ப் புலவர் என்ற பெருமைக்குரியவர் ஈழத்துப் பூதன்றேவனார். கடைச்சங்ககால புலவர்களில் ஒருவராக இவர் விளங்கினார். அகநானூற்றில் மூன்றும், குறுந்தொகையில் மூன்றும், நற்றிணையில் ஒன்றுமாக மொத்தம் ஏழு பாடல்களை இவர் பாடியுள்ளார்.

★ ஈழத்து எழுந்த தமிழ் நூல்களுட் காலத்தால் முந்தியது. "சரசோதிமாலை" என்னும் சோதிட நூலாகும். போசராச பண்டிதர் என்பவரால் ஆக்கப்பட்ட இந்நூல், மூன்றாம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னனின் அவையில் 1310–ஆம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டது.

★ யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் அச்சுவாகனம் ஏறிய நூல் "முத்திவழி" என்பதாகும். 'சேர்ச் மிஷனை'ச் சேர்ந்த 'ஜோசப் நைற்' என்ற பாதிரியார் 1820–ஆம் ஆண்டையடுத்து இந்த நூலை வெளியிட்டார்.

★ யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையைச் சேர்ந்த அரசகேசரி என்பவர் 'இரகு வம்சம்' என்னும் காவியத்தை இயற்றினார். ஈழத்தில் முதன் முதலில் இயற்றப்பட்ட தமிழ்க் காவியம் இதுதான்.


★ ஈழநாட்டில் இயற்றப்பட்ட முதலாவது புராணம் 'தட்சிண கைலாச புராணம்'. ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவரான சயவீர சிங்கையாரியன் என்ற 5–ஆம் செகராசசேகரன் என்பவரே இப்புராணத்தை இயற்றினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எத்துன்பம் வந்தபோதும் கலங்கக்கூடாது வீரத்தலைவன் எமக்கு வழிகாட்டுகிறான்




என்றுமே என்மேல் அன்பும் பாசமும் மறவா அப்பா, சித்தி, அண்ணா அறிவது, நான் நலம். அதுபோல் உங்களை இறைவன் காப்பான்.

நான் மீண்டும் திருமலை திரும்பிய பின் இதுவரையில் எதுவித தொடர்பும் கொள்ளமுடியாத நிலையில் இருந்ததையிட்டு முதற்கண் உங்களிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

யாழ் குடாநாடு இராணுவ வசம் சென்றுவிட்டது. நான் முன்னதாகவே உங்களை வன்னி வருமாறு கூறியிருந்தேன். நீங்கள் வன்னியில்தான் இருப்பீர்கள் என எண்ணுகின்றேன். இங்கு ஒவ்வொருநாளும் செய்திகளைக் கேட்கும் போதெல்லாம் வன்னியில் மக்கள் படும் துயரங்கள் அவலங்களைக் கேட்கும் போதெல்லாம் – நெஞ்சம் ஏங்குகிறது. உணவுக்கும் தண்ணீருக்கும் நீங்கள் எவ்வளவு பாடுபடுகிறீர்களோ ஆண்டவன்தான் அறிவான் ஆனால், எத்துன்பம் வந்தபோதும் நீங்கள் கலங்கக்கூடாது. வீரத்தலைவன் எமக்கு வழிகாட்டுகிறான். நீங்கள் எனக்குச் சோறூட்டி வளர்க்கும் போதெல்லாம் எம் பண்டைய சோழபாண்டிய மன்னர்களின் வீரத்தையும் தமிழ் பற்றையும் சேர்த்து ஊட்டித்தான் வளர்த்தீர்கள்.

அத்துடன் சிங்கள இனவாதிகளால் எம்மக்கள் பட்ட துன்பதுயரம், இன அழிப்பு, அடக்குமுறையாளர்களால் எம் மாணவ சமூகம் அடைந்த பின்னடைவு அனைத்தும் நான் வளரும் வயதிலே நீங்கள் கூறித்தான் அறிந்தேன். நான் வளரும் வயதில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுக்கு நடுவிலேயே வளர்ந்தேன். நான் அன்றாடம் காணும் காட்சிகள் எம் மக்களின் ஒப்பாரி ஒலிகளும், அவர்கள் உயிருக்குப் பயந்து மூட்டை முடிச்சுகளுடன் ஊர்ஊராக அலைவதுமே. ஏன் என் பெற்றோராகிய நீங்களே எவ்வளவு தூரம் அலைந்துள்ளீர்கள்? இவற்றுக்கெல்லாம் முடிவுதான் என்ன?

நான் வீட்டிற்கு இடைக்கிடை வரும்போது நீங்கள் என்னிடம் வேண்டுவது போல், நான் வெளிநாடு போகலாம். அதனால் நான் தப்பலாம். என் வருங்காலம் வளமாக அமையலாம். என்னை நீங்கள் ஒரு கோழையாக வளர்த்திருந்தால் அது சாத்தியமாயிருக்கும்.

ஆகவே நீங்கள் நிர்க்கதியாய் அலையும் போது உங்கள் மகன் உங்களைப் பற்றி அணுவளவும் சிந்திக்காது தன்பாட்டில் திரிகிறானே, மற்ற வீட்டுப் பிள்ளைகள் எவ்வளவு வசதியாக இருக்கிறார்களே இவன்கள் இருவருக்கும் வீட்டு நினைப்பே இல்லையா? என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் சாப்பிடும்போதும் சரி, தூங்கும் போதும் சரி உங்களைப்பற்றி எண்ணி எண்ணி என் மனம் மௌனமாக கண்ணீர் வடிப்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். இரு ஆண் பிள்ளைகளைப் பெற்றும் நீங்கள் தனியாகத் தவிப்பதை மற்றவர்கள் ஏளனம் கலந்த ஆதரவுடன் கரம் நீட்டுவதை உங்களால் ஏற்கமுடியாது இருக்கும்தான்.

ஆனால் எமது இளம் போராளிகள் கரும்புலியாகச் சென்று இவ்வளவு இளம் வயதில் எவ்வளவு பெரிய இலட்சியத்திற்காக தமது உயிரையே துச்சமாகத் தூக்கி எறிந்து தியாக உணர்வுடன் மடிகிறார்கள். அவர்கள் தம் வாழ்வில் என்ன சுகம் கண்டார்கள். அவர்கள் மட்டும் ஏன் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? வேறுயாரும் இதைச் செய்யட்டுமே என்று அவர்கள் விலகியிருக்கலாம்தானே? எவ்வளவு கரும்புலிகள் தமக்கொரு கல்லறைகூடக் கட்டமாட்டார்கள் என்று தெரிந்தும் கூட அவர்கள் தாம் முன்னெடுத்து வைத்த காலைப் பின்னே வைத்ததில்லை. மகிழ்வுடனேயே சென்று தம் பணி முடிக்கின்றனர்.

அத்துடன் நான் உயிராகப் பழகிய, தோளோடு தோளாக நின்று போராடிய போராளிகள் எவ்வளவு பேர் இன்று எம்முடன் இல்லை. அவர்கள் சுமந்த இலட்சியக் கனவை நாம் நிறைவேற்றாது பயந்து ஓடுவதா முறையான செயல்?

இன்றெல்லாம் எமக்கு வழிகாட்டுகிறான் ஒரு ஒப்பற்ற தலைவன். எமது முன்னைய அரசியல் தலைவர்கள்போல அவர் நாளுக்கொரு கதை கதைக்கவில்லை. இவ்வளவு துன்பங்களைக் கண்டும் அஞ்சவில்லை – பயந்து ஓடவில்லை. எம்முடனேயே ஒன்றாய்க் கலந்து நின்று எமக்கு வழிகாட்டுகின்றார் தலைவர் பிரபாகரன். தமிழீழம் என்ற வார்த்தையை விட்டு அதற்கு மாற்றீடான வேறு சொல்லைக்கூட உச்சரித்ததில்லை என்று, அவரது எதிரிகள்கூட அவரைப் புகழ்ந்து வாழ்த்துகின்றனர். அப்படியான ஒப்பற்ற தலைவன் கிடைத்தது தமிழினம் செய்த பெரும் பாக்கியம். அத்தலைவனின் காலத்தில் முனைப்புடன் போராடி விடுதலை பெறத் தவறினால் தமிழினத்தின் அடிமை விலங்கு என்றும் உடையப் போவதில்லை. இச்சூழ்நிலையில் அனுபவம் வாய்ந்த போராளிகளான நாம் போராட்டப் பாதையில் நின்று விலகுவது தமிழினத்திற்குச் செய்யும் மாபெரும் துரோகமே அன்றி வேறில்லை.

எனவே, என் பொருட்டு நீங்கள் எத்துன்பம் வரினும் பொறுமையுடன் எதிர்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. காலம் எம்மை யுத்தமில்லாத பூமியில் ஒன்று சேர்க்குமாயின் – அது நாம் செய்த தியாகங்களுக்கும் கடைப்பிடித்த பொறுமைக்கும் கிடைத்த வெற்றியாகும்.

இப்படிக்கு.
தங்கள் மகன்
மெ. பார்த்தீபன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமுதாயம் பண்படுதலுக்குப் பாலியற்கல்வி அவசியமாகின்றது

உலகில் வாழ்கின்ற உயிர்கள் யாவும் பாலடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருக்கின்றன. உலகியல் வாழ்க்கை முழுவதிலுமே பாலியல் என்பது இழையோடிக் காணப்படுகின்றது. சிறப்பாக மனித வாழ்வை எடுத்து நோக்கின் பிறப்பு முதலாக மனிதர்களது பருவ காலங்கள் மாற மாற அதனோடு பாலியல்சார் உணர்வுகள் வாழ்விற் தாக்கத்தை ஏற்படுத்துவனவாய் அமைகின்றன.

பால் வேறுபாடுகள் என்பது அடிப்படையில் இன விருத்திக்காகவும் சந்ததியின் வளர்ச்சிக்காகவும் இயற்கையால் படைக்கப்பட்ட போதும், அதுவே காலப்போக்கில் சமூகத்தின் தவறான கண்ணோட்டத்தினால் சிக்கலுக்குரியதாகவும் பல் வேறுபட்ட பிரச்சனைகளை தோற்றுவிப்பதாகவும் அமைந்தது ஆழநோக்குதற்குரியதே.

இன விருத்திக்காக அமையப்பெற்ற பாலியற் கூறுகள், இன்ப நுகர்ச்சியினையும் தோற்றுவிப்பதாய் அமைந்தமையால் சமூகத்தைப் பாதிக்கின்ற வகையிற் பிரச்சினைகள் எழலாயிற்று.

எனவேதான் பாலியலால் எழுந்த பிரச்சினைகள் மனிதனின் உடல், உள, வளர்ச்சியினைப் பாதித்தன. தனிமனித நடத்தைகள், சமூகம் சார்ந்த வளர்ச்சியை பாதிக்கும். ஆதலால் இப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி உலக நாடுகள் இன்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.

மருத்துவ உலகிற்கு அச்சுறுத்தலாக விளங்குகின்ற "எயிட்ஸ்" நோய் போன்ற உயிர்க்கொல்லிகளின் தாக்கம் பாலியல் கல்வியின் முக்கியத்துவத்தினை தீவிரப்படுத்தின. முறைகேடான பாலினச் சேர்க்கைகள் சமுதாயத்தைப் பாதிக்கும் என்பதை மெல்ல மெல்ல உலகிற்கு உணர்த்தத் தொடங்கின.

உலக நாடுகளைப் பொறுத்தவரை சமூகத்தின் பல்வேறு மட்டங்களிடையே பாலியல் அறிவின் தன்மை பற்றி ஆராயப்படுகிறது. தென்னாசியாவிலும் இக்கல்வி பற்றி தீவிர அக்கறை எழுந்துள்ளது. தென்னாசியாவின் சனத்தொகையில் 15 தொடக்கம் 25 வயதிற்குட்பட்டவர்களது சனத்தொகை காற்பங்கினதாக இருக்கையில், இவர்களது எதிர்கால வாழ்க்கை பற்றிய நோக்கிற் பாலியற் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படலாயிற்று.

எமது சூழலைப் பொறுத்தவரையில் பாலியற் கல்வி தவறானது, அதைப்பற்றி கதைப்பதே பாவம் என்று எமது பண்பாட்டு மரபுகளும் பழமைவாதங்களும் எம் மத்தியில் ஊறிப்போய் இருந்தன. ஆனால் இன்று உலகளாவ எழுந்த பிரச்சினைகளும் அதன் தாக்கங்களும் பாலியற் கல்வி தேவையானது என்பதை எமக்கும் உணர்த்தத் தொடங்கின.

ஆனாலும் இது பற்றி முக்கியமாகச் சொல்லவேண்டிய காலம் வந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் எழுந்துள்ள சன அடர்த்தியான வாழ்க்கை, நெருக்கடியான சீவியம் என்பன உறவுகளிலே, ஒழுக்க நடவடிக்கைகளிலே பாதிப்பான நிகழ்வுகளைத் தோற்றுவித்துள்ளன.

பலதார மணக்குற்றம், பாலியல் வன்முறை, சிசுக் கொலை, கருக் கலைப்பு, காதலித்து கைவிடல் போன்ற சமூகக் குற்றங்களை எடுத்து நோக்கின் தனிமனிதப் பாலியல் நடவடிக்கைகள் பற்றிய கட்டுப்பாடற்ற தன்மைகளும் தெளிவற்ற பார்வைகளும் இப்பிரச்சினைகளுக்கெல்லாம் காரணங்களாக அமைகின்றன.

உதாரணமாக,

எமது சமுதாயத்தில் கிராமிய மட்டங்களில் சிறுவயதுக் காதற் திருமணங்கள் நடைபெறுவதே வழமையானதொன்று. இத்தகைய திருமணங்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் இவற்றினை பெற்றோர் கவனத்தில் எடுப்பதில்லை. கிராமப்புறங்களை எடுத்து நோக்கின் அங்கு வாழ்கின்ற அநேகமான பெண்பிள்ளைகள் 16, 17 வயதிற்கூட திருமண வாழ்க்கையில் ஈடுபட்டு குழந்தை, குடும்பம் போன்ற பொறுப்புகளைச் சுமந்து கொண்டிருப்பர். அப்பெண்களது வாழ்க்கை நிலை "அவள் ஒரு குழந்தை, அவளுக்கு ஒரு குழந்தை" என்ற வகையிற் பார்ப்பதற்குத் தோன்றும்.

இதில் கூறவருகின்ற விடயம் என்னவென்றால், பெரும்பாலான சிறு வயதுத் திருமணங்கள் சிற்றகவைப் பருவத்தில் எழுகின்ற சிறுபிள்ளைக் காதல்களாகத் தோன்றி வாழ்க்கை பற்றிய குறிக்கோள்கள் இன்றி தொலைநோக்கற்ற பார்வைகள் எழுந்து திருமணத்தில் முடிவுறும் போது சிக்கல்கள் தோன்றுகின்றன.

இத்திருமணங்களில் குறிப்பாகப் பார்க்கும்போது அதில் ஈடுபடும் இருபாலாரும் திருமண வாழ்வுக்கான உடல், உளத் தகுதிகளைப் பெற்றிருப்பதில்லை. பொருளாதார நெருக்கடிகளை பொறுப்புகளைச் சந்திக்கும் நேரங்களில் இத் திருமணங்களால் குடும்ப உறவுகளில் விரிசல்கள் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் இவ் வயதினர் இத் திருமணங்களினால் வாழ்வில் வெறுமையையும், விரக்தியையும் உணர்கின்றனர்.

இவ் வயதிலுள்ள காதல் வசப்பட்ட பெண் பிள்ளைகள் ஆண்களால் ஏமாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். நீதிமன்றங்களில் தற்போது பதியப்பட்டுள்ள வழக்குகளில் இத்தகைய சம்பவங்களைக் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை அநேகம்.

எனவே எமது சமுதாயம் உண்மையான அர்த்தம் நிறைந்த வாழ்க்கைக் காதலுக்கும், பால்கவர்ச்சியின் அடிப்படையில் மட்டும் எழுகின்ற உறவுக்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொள்ளவேண்டும். காதல் என்பது ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒத்திசைவான நிலையில் எழுவதே அன்றி பாலினக் கவர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுவதில்லை. இப்படியாக



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எழுகின்ற உறவுகள் சமூகத்தில் எதிர் நீச்சல் போட வலுவற்று இடையில் முறிந்து போகின்ற சந்தர்ப்பங்களில் சமூகச் சீரழிவுகள் நிகழ வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இந்தச் சீரழிவுகளால் ஒட்டுமொத்தமாகச் சமுதாயம் பாதிப் படையினும் "பெண்" என்ற பாத்தி ரத்தில் சமுதாயம் அவளுக்கு உருப் போட்டுள்ள வரையறைக்குள் அவள் மீது பாரிய சுமைகள் வந்தடைகின் றன.

தனது குழந்தைகளின் எதிர்காலம் என்ன? சமுதாயத்தில் எவ்வாறு தலை நிமிர்ந்து வாழப்போகிறேன் என்ற வினாக்கள் அவள் முன்னே எழுந்து நிற்க, உளரீதியாக தாக்கங் களை அனுபவிக்கின்றாள். இத்தகைய தாக்கங்களினால் வாழ்க்கையில் மீள முடியாமற் போன பெண்களின் கதை கள் ஏராளம்.

எனவேதான் குடும்பங்களிலுள்ள இரு பாலரிடையேயும் இது பற்றிய பூரண அறிவும், தெளிவும் வேண்டுமா யின் பாலியற் கல்வியின் முக்கியத்து வம் உணரப்படவேண்டியது அவசிய மாகிறது.

இன்றைய சமுதாயச் சூழலில் பரந்து காணப்படுகின்ற பல பிரச் சினைகளுக்கு இதுவே மூலகாரண மாய் அமைவதால் இதன் அவசியம் பற்றி கூறவேண்டியுள்ளது. இதுபற்றிக் கதைப்பதே வெட்கக்கேடானது என்ற நிலை மாறி, இன்று பாடசாலை களில் பாடப்புத்தகங்கள் வாயிலாக ஓரளவு கற்றுத் தெளிகின்ற நிலை வந்தாலும் இன்னும் அடிமட்டக் கிராமப் புறங்களில் இதுபற்றி போதிய அறிவோ விளக்கமோ இன்றி இளைய சமுதாயம் வாழ்ந்துகொண்டிருக்கி றது. அனேகமான பெண் பிள்ளை கள் திருமண உறவுக்குப் பின்பே "பாலியல்" பற்றி அறிந்து கொள்கின்ற நிலையில் வாழ்கின்றனர் என்பது வருந்துவதற்குரிய விடயம்.

எனவே, முக்கியமாகப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு விஞ்ஞான ரீதியான பார்வையோடு இதுபற்றி மெல்ல மெல்ல தெளிவுபடுத்த வேண் டும்.

"ஒருதாய் தன் மகளுக்கு உணவு தயாரித்தல், ஆடை தயாரித்தல் பற்றி சொல்லிக் கொடுப்பது போல் இயல் பாக பாலியல் குறித்தும் பேசவேண் டும்" என்கிறார் பி.பி.சி. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் திருமதி ஆனந்தி அவர் கள்.

பாலியல் கல்வி முழு மனித வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகிறது. எனவேதான் தனி மனிதர்களின் உடல், உள வளர்ச்சிக்கு ஏற்ப அதன் முதிர்ச்சி நிலை அறிந்து போதியளவு பாலியற் கல்வியை இளைய தலை முறையினருக்கு ஊட்ட வேண்டும்.

பாடசாலை மட்டத்திலான கல்வி யில் படிப்படியாக குடும்ப உறவுகள் பற்றியும் பாலியலில் முக்கியத்துவம் பற்றியும் போதிப்பதற்கான விடயங் கள் பாடத்திட்டத்தில் அமைவது நன்று.

இயல்பாக நமது உடலில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்து அதற்கேற்ப செயலாற்றுவதற்கு பாலியற் கல்வி அவசியமாகின்றது. அதாவது தனி

> **"ஒருதாய் தன் மகளுக்கு உணவு தயாரித்தல், ஆடை தயாரித்தல் பற்றி சொல்லிக் கொடுப்பது போல் இயல்பாக பாலியல் குறித்தும் பேசவேண்டும்"**

மனிதனது பாலியல் நடத்தைகள், வளர்ச்சி நிலைகளில் ஏற்படுகின்ற தவ றான கருத்துப் பயம் நீங்கி, பதகளிப்பு அற்று இது இயற்கையாக நிகழ்ந்தது, இது ஒரு பருவ மாறுதல் என்பதை சிறுவர்கள் உணர்ந்து கொள்ளக்கூடிய வகையில் தாய், தந்தையர் அவர்க ளுக்கு சிறு வயதிலேயே இதனை ஊட்ட வேண்டும். முக்கியமாக தாய் மார் தமது பெண்பிள்ளைகளின் உடல் ரீதியான மாற்றங்களை, வளர்ச் சிகளை உன்னிப்பாக அவதானித்து, அவர்களுக்கு உடலியல் பற்றியும், பாலியல் பற்றியும் தெளிவுபடுத்த வேண்டியது முக்கிய கடைமையாக உள்ளது. இதன் மூலம் இவர்கள் சமூ கத்தில் ஒழுக்கமுடையவர்களாக வாழத்துணை செய்யும்.

பாலியலின் நோக்கத்தையும், பாலி யல் நடத்தைகளையும் தன்னளவிலும் தன்னைச்சார்ந்த பிறரிலும் விளங்கிக் கொள்ளும் போது எதிர்ப்பாலாரில் ஏற்படுகின்ற உறவின் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம். இதன் மூலம் தன்னளவில் சுய பார்வையை ஏற்ப டுத்தி எதிர்ப்பாலரின் நோக்கங்களில் தவறான அணுகுமுறைகள் இருப்பின் விலகிச் செல்ல முடியும்.

சமூகத்தில் ஒழுக்க நெறிகள் பேணப் படவேண்டியதன் அவசியத்தை உண ருவதற்கும் வாழ்க்கையில் முக்கிமான முடிவுகளை எடுப்பதற்கும் பாலியல் கல்வி அவசியமாகிறது. அதாவது நெறிபிறழ்ந்த பாலியல் இச்சைகள் இன்றி, சமூக வரைமுறைகள் வழுவா மல் வாழுவதற்கு பாலியற் கல்வி அவ சியமாகிறது. பாலியல் பற்றிய அறி வைக் கொடுக்கும் போது சமுதாய அங்கத்தவர்களை விபச்சாரம், சமூகச் சீரழிவு போன்ற பாலியற் குற்றங்க ளில் ஈடுபடாமற் பார்த்துக் கொள்ள லாம். இன்று சிறு வயதில் நெறி தவ றிப் போகின்ற வாழ்க்கை முறைகளுக் கும் பாலியல் வன்முறைகளுக்கு சிறு வயதினர் உட்படுகின்ற சம்பவங்க ளுக்கு பாலியல் அறிவற்ற தன்மைக ளும் பெற்றோரின் நெருக்கமான அர வணைப்பற்ற தன்மைகளுமே கார ணமாகும்.

எனவேதான் வருங்கால சமுதா யத்தை ஒரு ஆரோக்கியமான சமுதா யமாக மாற்றுவதற்கும் நற்குடிமக்க ளாக உருவாக்குவதற்கும் தெளிவான பாலியல் அறிவை வழங்க வேண்டும். இதன் மூலமே ஒரு சமுதாய அங்கத் தவர் நல்ல வாழ்க்கைத் துணையாக, சிறந்த பெற்றோராக நற்குடிமக்களாக வாழ முடியும்.

எனவேதான் பெற்றோரே!

உங்கள் குழந்தைகளுக்கு இயல்பாக அறிவார்ந்த ரீதியாக தெளிவான கண் ணோட்டத்தோடு இதனை உணர்த் துங்கள். மானிட வாழ்வில் இது எத் துணை உன்னதமானது என்பதைப் புரிய வையுங்கள். எமது சமுதாய வரைமுறைகளும், பண்பாடுகளும் எமக்குப் புகட்டியுள்ள ஒழுக்க நெறிக ளில் பிறழ்வு ஏற்படாதவாறு வாழக் கற்றுக் கொடுங்கள். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். அந்தப் பல் கலைக்கழகத்திலிருந்தே நாளை ஆரோக்கியமான மிகப் பெரிய சக்தி நிறைந்த இளைய தலைமுறை பிறப் பெடுக்கும். இவர்களை ஆளாக்கும் சமுதாயப் பொறுப்பு ஒவ்வொரு தாயிடமும், தந்தையிடமும் நிறைந்தி ருக்கிறது.

★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# நரக நகரம்

**- எல்லாளன் -**

"அவுஸ்விச்" (AUSCHWITZ) ஜேர்மனியின் ஒதுக்குப்புறமான பகுதியொன்றில் அமைந்திருந்த சிற்றூர் இது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் எந்தவித பிரபலமுமற்றுக் கிடந்த இந்தச் சிற்றூர் போர் முடிந்த பின் – நரகலோகத்தின் ஒருபெரும் நகரமாக, உலகமாந்தரால் சித்தரிக்கப்பட்டது.

ஜேர்மனியின் ஆட்சியாளனாக அடொல்ப் கிட்லர் தெரிவுசெய்யப்பட்டவுடன் யூதர்களை பூண்டோடு ஒழிக்கும் தனது பகிரங்கக் கொள்கையை அமுல்படுத்தத் தொடங்கினான். இரண்டாம் உலகப் போர் தொடங்கியதும், ஜேர்மனியிலும் – நாஜிப் படைகளால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய நாடுகளிலும் வசித்த யூதர்கள் சுற்றிவளைக்கப்பட்டு தடுப்பு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இலட்சக்கணக்கில் கைதுசெய்யப்பட்ட யூதர்களை விரைவாகவும், செலவு குறைவாகவும் கொன்றொழிப்பதற்காக விஷவாயுக் கூடங்களை அமைக்க 'கிட்லர்' உத்தரவிட்டான்.




இவ்விதம், நச்சுவாயுக் கூடத்துடன் நிறுவப்பட்ட பாரிய தடுப்பு முகாங்களில் ஒன்று 'அவுஸ்விச்'. மொத்தம் 60 லட்சம் யூதர்கள் நாஜிகளால் கொல்லப்பட்டனர். இவர்களில் 40 லட்சம் மக்களின் உயிர் 'அவுஸ்விச்'–இல் வைத்துத்தான் அழிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் முடியும் தறுவாயில் நேச நாட்டுப் படைகளால் 'அவுஸ்விச்' விடுவிக்கப்பட்டது. அங்கே உயிருடன் இருந்த சில யூதர்கள் விடுவிக்கப்பட்டனர். அவர்களுள் 'டொக்ரர் மிக்லொஸ் நைசிலி' என்ற யூத மருத்துவரும் ஒருவர். அவுஸ்விச் கொலைக்களத்தில் பலி ஆடாக இருந்த அந்த மருத்துவன், தான் நேரில் கண்ட படுகொலைக் காட்சிகளையும், காட்டுமிராண்டித்தனமான உயிரியல் பரிசோதனைகளையும் நூலாக எழுதினார். அதற்கு 'அவுஸ்விச்' என்று பெயர் சூட்டினார். இந்த நூல் வெளியான பின்னர்தான் 'அவஸ்விச்' என்ற 'நரகநகரம்' பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகின.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நூலாசிரியர் மிக்லொஸ் நைசிலி ஒரு கங்கேரிய யூதன். கங்கேரியை நாஜிப்படைகள் ஆக்கிரமித்த பின் அங்கிருந்த யூதர்கள் கால்நடைகள் ஏற்படும் புகையிரதப் பெட்டிக்குள் ஏற்றி அடைக்கப்பட்டு 'அவுஸ்விச்' அனுப்பப்பட்டனர். அதில் நூலாசிரியருடன் அவரது மனைவியும் 14 வயது மகளும் இருந்தனர்.

'அவுஸ்விச்' கொலைக்களத்தின் பிரதம அதிகாரி 'டொக்ரர் ஜோசப் மெஞ்சேல்' என்பவன். இவனும் ஒரு மருத்துவ நிபுணனாவான். இவனை 'கிரிமினல் டொக்ரர்' என்றே நூலாசிரியர் வர்ணிக்கின்றார். யூதர்கள் மேல் விஞ்ஞானப் பரிசோதனைகளை நடாத்தி, யூத இனம் தொடர்பான கிட்லரின் இனக்கொள்கை சரியானது என்பதை நிரூபிக்கும் உயிர்க்கூற்று ஆதாரங்களை நாஜித் தலைமைப் பணிமனைக்கு அனுப்புவது இவனின் முக்கிய பணி. இந்த மருத்துவப் பணிகளைச் செய்துகொடுத்து உதவும் கட்டாய பணியே நூலாசிரியரின் சிறைப் பணியாகும். தான் வளர்த்த மருத்து நிபுணத்துவம் அப்பாவி மக்கள் மீதான பைத்தியக்காரத்தனமான பரிசோதனைகளுக்குப் பயன்படும் அவலத்தை எண்ணி நூலாசிரியர் மனம் நொந்து கொள்கிறார். அன்றாடம் தனது சத்திர சிகிச்சை மேசையில் செத்த எலிகளைப் போல மனிதப் பிணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை அச்சத்துடன் விபரிக்கின்றார். இந்தப் பிணங்களை வெட்டிக் கிழித்து தேவையான உறுப்புக்களைப் பார்சல் பண்ணி நாஜித் தலைமைப்பீடத்திற்கு தபாலில் அனுப்பும் காட்டுமிராண்டித்தனத்தை கோபத்துடன் வர்ணிக்கிறார்.

'அவுஸ்விச்'சில் உயிருடன் இருக்க வேண்டுமென்றால் நாஜிகளுக்குத் தேவையான ஏதாவது ஒரு வேலையை திறமையுடன் செய்யத் தெரிந்திருக்க வேண்டும். வேலை மூலம் உயிர் வாழ்வதென்பது 'அவுஸ்விச்'சின் தத்துவம். உயிர் வாழ்வதற்காகவே பிணப் பரிசோதனைப் பணியை செய்யவேண்டி இருந்தது என நூலாசிரியர் விரக்தியுடன் கூறுகின்றார். அந்த மருத்துவப் பணியில், தலைமை அதிகாரி திருப்தி கண்டதால்தான் இவர் உயிர் தப்பவும் அங்கு நடந்த கோர நிகழ்ச்சிகளை உலகிற்கு அம்பலப்படுத்தவும் முடிந்தது.

யூத இனம் ஒரு நச்சுக் கிருமி என்பது நாஜிசக் கொள்கை. இது ஏனைய இனங்களை, குறிப்பாக ஜேர்மனிய இனத்தை அதாவது ஆரிய இனத்தின் தூய்மையைக் கெடுக்கின்றது என்பது நாஜிகளின் வாதம். யூதர்கள் 6000 வருட வயதுகொண்ட கிழடு தட்டிய இனம். இதனால் இவர்கள் மத்தியில் உடலியல், மனவியல் சிதைவுகள் ஏற்பட்டுவிட்டன. குள்ளர்கள் – உடலூனமுள்ளவர்கள் – சித்தப்பிரமை பிடித்தவர்கள் பெருகி வருகின்றனர். எனவேதான் இந்த 'அழுக்குக் கிருமி'களை பூண்டோடு அழித்து ஆரிய இனத்தின் தூய்மையை பாதுகாக்க நாஜிகள் திடசங்கற்பம் பூண்டனர். இந்த இனவெறிக் கொள்கைக்கு ஆதாரமாக யூதர்களின் பிறப்பணுவில் – உடற்கூற்றில் சில மருத்துவத் தகவல்களை கண்டுபிடித்துவிட்டால் யூத இனப்படுகொலைக்கு ஒரு விஞ்ஞானக் காரணத்தைக் கற்பித்து – நியாயப்படுத்த முடியும் என்று நாஜிகள் நம்பினர். இதற்காக குள்ளத் தோற்றமுடையவர்களையும் – உடல் ஊனமுள்ளவர்களையும் கொடூரமான வகையில் மனிதப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தினர். உயிரியல் பரிசோதனைகளுக்காக தவளைகளையும், எலிகளையும் உயிருடனும், செத்த பின்னரும் அறுவைச் சிகிச்சைச் சோதனைகள் செய்வது போல; யூதர்கள் மீதும் மனிதநேயமற்ற வகையில் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

"ஒருநாள் முதுகு கூனலான தந்தையையும், ஒரு கால் ஊனமான மகனையும் எனது சத்திர சிகிச்சை மேசை முன் கொண்டுவந்து நிறுத்தினர்". ஒரு கோர நிகழ்ச்சியை நூலாசிரியர் கூறத் தொடங்குகின்றார். "இவர்களுடைய அங்கவீனத்திற்கு என்ன காரணமென்று மருத்துவ அறிக்கை தருமாறு நாஜி அதிகாரி கேட்டான். அந்த அப்பாவித் தந்தையையும் அதிஷ்டம் கெட்ட மகனையும் மேசை மீது படுக்கவைத்துப் பரிசோதித்து முடித்தேன். பின்னர் இருவரையும் அடுத்த அறைக்கு நாஜி அதிகாரி கூட்டிச் சென்றான். அங்கே உடைகள் உரியப்பட்டு பின் தலையில் சுட்டு இருவரையும் சாகடித்தான். செத்த இருவரது பிணங்களும் மேசை



யில் கிடத்தப்பட்டன. பிணத்தை அறுத்து அங்கவீனத்திற்கான உட்காரணிகள் யாவை என அறிக்கை தருமாறு கேட்டார்கள். சற்று நேரத்தில் 'அவுஸ்விச்' சின் தலைமை அதிகாரி நாஜி அங்கே வந்தான். இரண்டு பிணங்களையும் பார்த்துவிட்டு, அவற்றை எரிக்காது எலும்புக்கூடுகளாக மாற்றி பேர்லினிலுள்ள மானிடவியல் நூதனசாலைக்கு காட்சிப்பொருளாக அனுப்ப வேண்டும் என்றார். தகுந்த இரசாயனப் பொருட்கள் இல்லாததால் பிணங்களை பாரிய அண்டாவுக்குள் போட்டு – நீர் ஊற்றி அவிக்கும்படி கூறினேன். 5 மணி நேரமாக அவித்தபின் தசைகள் பெரும்பாலும் எலும்பை விட்டுக் கழன்றுவிட்டன. எனினும் குளிர்வடையும் போதே மிகுதியும் சுலபமாகக் கழரும் என்ற காரணத்தால் நான்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சற்று சரிந்து ஓய்வெடுத்தேன்."

இவ்வாறு வர்ணித்துச் சென்ற நூலாசிரியர், அருவருப்பூட்டும் அவலமொன்று திடீரென, அங்கே நடந்தேறிய விதத்தையும் விளக்குகின்றார்.

"அப்போது எனது உதவியாள் ஓடிவந்து 'டொக்டர்' அந்த அவிச்ச பிணங்களின் தசைகளை போலந்துக்காரர்கள் தின்னுறாங்கள்" என்றார். துள்ளி எழுந்த நான் காலிடற அடுப்பு நோக்கி ஓடினேன். எலும்பும் தோலுமாக காட்சியளித்த இரண்டு கைதிகள் இறைச்சி சமைக்கப்படுகின்றது என நினைத்து பசியில் மனிதத் தசைகளை உண்டுகொண்டிருந்தனர். அவர்களைத் தடுத்து உண்மையை நான் கூறியபோது, அவர்கள் பயந்து வாந்தி எடுத்து, செயலிழந்து நின்றார்கள். மண்ணெய்யில் எலும்புக்கூடுகள் கழுவப்பட்டு, கொழுப்புகள் அகற்றப்பட்ட பின்னர் மீண்டும் எனது சத்திரசிகிச்சை மேசையில் இரண்டு எலும்புக்கூடுகளும் வைக்கப்பட்டன.

கல்நெஞ்சங்களையும் உருகச் செய்யும் இந்த கொடூர சம்பவத்திற்கு நூலாசிரியர், இப்படி முத்தாய்ப்பு வைக்கின்றார்.



"காலையில் உயிருடன் பரிசோதித்த தந்தையும் மகனும் சிறிது நேரத்தில் அதே மேசையில் பிணங்களாகக் கிடத்தப்பட்டனர். இப்போது மாலையில், அவர்கள் எலும்புக்கூடுகளாக அந்த மேசையில் கிடக்கின்றனர்".

மனித குலத்திற்குப் பொதுவான உயிரியல் மற்றும் நரம்பியல் பிரச்சினைகளின் விளைவுகளாக அங்கவீனத்தை, ஒரு இனத்திற்கே உரித்தான வரலாற்றுக் குறைபாடாக திரிக்க முயன்ற வெறிச்செயல் இது. தொன்மைமிகு ஒரு இனத்தையும் – அதனுடைய பழம்பெரும் நாகரிகத்தையும் மதித்துப் போற்ற வேண்டிய அவசியத்தைப் புறந்தள்ளிவிட்டு அந்த வரலாற்றுத் தொன்மைமிகு மக்களை பூண்டோடு அழித்தொழிப்பதற்காக நாஜிகள் கூறிய உயிரியல் காரணிகள் கேலிக்கூத்தானவை. விஞ்ஞானத்திற்கு முரணான மூடக்கருத்துக்கள் அவை.

இதேவேளை, இரட்டையர் பிறப்பதன் இயற்கை இரகசியத்தை அறிந்து கொள்ள யூத இரட்டையர்களைத் தேடிப்பிடித்து – அவர்களைக் கொன்று மருத்துவ ஆய்வுகள் செய்தனர். இந்த இயற்கை இரகசியத்தை அறிந்தால் ஜேர்மனியத் தாய்மாரை இரட்டையர்களாகவே பிரசவிக்க வைத்து, மிக விரைவாக ஆரிய இனத்தைப் பெருக்க முடியும் என்று நாஜிகள் ஆசைப்பட்டனர். இந்தப் பைத்தியகாரத்தனமான ஆசைக்குப் பலியான பல வயதுடைய இரட்டையர்கள் பற்றி நூலாசிரியர் வர்ணித்துச் செல்லும்போது கண்கள் பனிக்கின்றன. கோபம் கொப்பளிக்கின்றது.

நூலாசிரியர் "மிக்லொஸ் நைஸ்லி" ஒரு மருந்துவ நிபுணர் என்ற வகையிலும், மருத்துவப் பரிசோதனைகளே அவரது சிறைப்பணிகளாக இருந்ததாலும் பெரும்பாலும் அதற்காகப் பலியிடப்பட்ட பாதகச் செயல்களை வர்ணிப்பதிலும் – அந்தப் பரிசோதனைகளுக்கு நாஜிகள் கூறிய கற்பனையான உளவியல் காரணிகளை கண்டன விமர்சனம் செய்வதிலுமே நூலில் பெரும் பகுதியை ஒதுக்கியுள்ளார். இவரது மருத்துவ அறிக்கையில் திருப்தி கண்ட தலைமை நாஜி அதிகாரி நூலாசிரியருக்குப் பல சலுகைகள் அளித்தான். இதனால் 'அவுஸ்விச்'சின் பல பகுதிகளுக்கும் சென்றுவரும் வாய்ப்பு நூலாசிரியருக்குக் கிடைத்தது. இதனால் 'அவுஸ்விச்'சின் அனைத்து நடவடிக்கைகளையும் அவர் அறிந்து வைத்திருந்தார்.

ஒருநாள் 'அவுஸ்விச்'சின் அதி உயர் இரகசியமான விஷவாயுக்கூடத்திற்கு நூலாசிரியர் கூட்டிச் செல்லப்பட்டார். "உட்புறம் நன்றாக வெள்ளையடிக்கப்பட்ட 200 யார் நீள மண்டபம் அது. உடைகள் மாட்டவென ஏராளமான கொழுக்கிகள் இருந்தன" அங்கே தான் கண்ட காட்சியை நூலாசிரியர் வர்ணிக்கின்றார்..... "ஆண்கள் – பெண்கள் – சிறுவர் – முதியோர் என



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுமார் 3000 யூதர்கள் அங்கே நின்றனர். குளிப்பதற்கு அங்கு கொண்டுவரப்பட்டதாக நம்பவைக்கப்பட்டிருந்தனர். திடீரென ஒரு ஜேர்மன் அதிகாரி கனத்த குரலில் கட்டளை இட்டான். 'பத்து நிமிடங்களுக்குள்' எல்லோரும் உடைகளைக் களைந்து கொழுக்கிகளில் மாட்டிவிடுங்கள்."

பல்வேறு வயதினரான ஆண்களும் பெண்களும் கலந்து நின்ற வெளிச்சம் நிறைந்த மண்டபத்தில் அனைவரையும் நிர்வாணமாக நிற்கச் சொன்னால் அவர்களின் மனநிலை எப்படி இருக்கும்? ஆனால் இவர்கள் கைதிகள். முதலில் வெட்கப்பட்டுத் தயங்கியவர்கள் மீண்டும் மீண்டும் ஒலித்த கர்ணகடூர கட்டளைகளால் கௌரவங்களும் தன்மானமும் கழன்றுவிழ, உடைகளைக் களைந்தனர்.

அதன் பின் நடந்ததை இவ்வாறு விபரிக்கின்றார். "மண்டபத்தின் முடிவில் இருந்த பாரிய கதவு திறக்கப்பட்டது. அதற்குள் போகும்படி கட்டளை வந்தது. அதுவும் ஒரு பெரிய, முன்னையதைப் போன்ற மண்டபம். ஆனால், இங்கே கொழுக்கிகளோ இருக்கைகளோ இல்லை. அதேவேளையில் மண்டபத்தின் மத்தியில் முப்பது யார்களுக்கு ஒன்றாக நிலத்திலிருந்து கூரைவரை தூண்கள் போல ஒரு அமைப்பு இருந்தது. உப இயந்திரத் துப்பாக்கியின் குழல் போல தூண்கள் எங்கும் துளைகள் இருந்தன. எல்லாக் கைதிகளும் மண்டபத்துள் வந்தபின் கதவு பூட்டப்பட்டது. அடுத்த நொடியில் விளக்குகளும் அணைக்கப்பட்டன. அதேவேளை மண்டபத்திற்கு வெளியே புற்தரையில் முப்பது யார்களுக்கு ஒரு கொங்கிரீட் ஸைப் நிலத்தில் புதைத்தபடி துருத்திக் கொண்டிருந்தது. அது மண்டபத்தினுள்ளே இருந்த தூண் அமைப்புகளுடன் நிலத்திற்கடியால் இணைந்திருந்தது. முகமூடி அணிந்த ஒரு ஜேர்மன் அதிகாரி ஒரு போத்தலைத் திறந்து குறுனலான இரசாயனப் பொருளை கொங்கிரீட் வாய்களில் கொட்டி வாய்களை மூடினான். அந்த இரசாயனப் பொருள் வெளியேற்றிய வாயு தூண் அமைப்பு துளைகளூடாக பரவி மண்டபத்தை நிறைத்தது. அடுத்த ஐந்து நிமிடத்தில் 3000 பேரும் செத்து விழுந்தனர்." விஷ வாயுக் கூடங்களில் பொசுங்கிப் போன யூதர்களின் இறுதிப் பதினைந்து நிமிடங்களும் நூலாசிரியர் மேலே குறிப்பிட்டது போலத் தான் கழிந்திருக்கும். அடுத்த பணி

# சிங்கம் அல்லது சிங்கங்களின் கதை

பற்றி எரியும் கூந்தல்!
அது கருகும் நெடி அறியாது
வாளேந்திய பெண்சிங்கம்
கிழிந்த தாடைகளை அசைத்து
கர்ஜனை செய்தது!
பூண்டோடு அழிப்பேன்!
பூண்டோடு அழிப்பேன்!

சிங்கம் அழிக்க நினைத்தது
இன்று வரை
அதன் கைகளுக்கு
அகப்படவேயில்லை.
ஆனால் அதைப்
போன்றவற்றையெல்லாம்
ஏந்திய வானின் மகிமையைக் காக்க
அழித்துக் கொண்டும்
அவற்றின் எல்லாவற்றையும்
விழுங்கிக் கொண்டுமிருந்தது



"ஒலிவ்" தளிர்கள்
சிங்கத்தின் பற்களிடை அரையுண்டு
அழிவுற்றன.
இடையிடையே
அழிவுற்ற 'ஒலிவ்' தளிர்களை
சிங்கம் இறைமீட்டு அசைபோட்டது.
கூடவே
'ஒலிவ்' தளிரின் மகத்துவம் பற்றியும்
அதன் சீவியம் நிலைக்க
வேண்டுமென்றும்
அது கர்ஜித்தது.

சிங்கத்தின் வாளேந்திய கை
ஓயாத ஊழியில்
கடித்துக் குதறுண்டது
கூர்மழுங்கிய வாளை
மறு கையில் தாங்கி
உலகில் கூரையில் ஏறிநின்று
நடுங்கும் குரலில் அது கர்ஜித்தது

"எஞ்சியிருப்பது கொஞ்சமே
அவற்றையும் பஞ்சாய் பொசுக்குவேன்"
உண்மையில் அதற்கு ஒன்றுமே
புரியவில்லை.
அழித்தலா? அழித்தலா?
சிங்கம் மூக்கை நுழைக்கும்
இடமெல்லாம்
அதன் மூக்கு
மூர்க்கமாக நொருக்கப்பட்டது!
அது அடிவைக்கும் நிலமெல்லாம்
இட்ட அடிசிதற இடி முளைத்தது!

சிங்கம் வாளேந்தும் போது
அணிந்திருந்த வெண்துகில்
நிறமிழந்திருந்தது.
திட்டுத் திட்டாய் குருதி உறைந்தும்
தீய்ந்து கருகியுமிருந்தது.
கடித்துக் குதறிய கையும்
நொருங்கிய மூக்குமாக
கழுத்தில் குருதிக் கலயம் தாங்கி
கூரிழந்த வாளேந்தி
தெருத் தெருவாய் அது கர்ஜித்தது.
"குருதி வேண்டும்"
"கூர்மிகுவாட்களும் வேண்டும்"
பயப் பிராந்தியில் கோரமாய் ஒலித்து
காற்றில் அலைந்தழித்த அதன்
கர்ஜனையை
யாரும் செவி மடுத்ததாயும்
தெரியவில்லை!

சிங்கம் கர்ஜிப்பதை நிறுத்தவேயில்லை!
வாளேந்தியிருக்கும் வரை
அது கர்ஜிக்க வேண்டிருக்கிறது.
சுருதி மெலிந்து
அது கர்ஜிக்க கொண்டிருக்கிறது.
அழிப்பேன் என்று! அழிவிடை
தோய்ந்து....

– எஸ். உமாஜிப்ரான்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிணங்களை எரிகூடத்திற்கு அப்புறப்படுத்தலாகும். இந்த எரிகூடங்கள் மின்சாரத்தில் இயக்கப்படும். அவுஸ்விச்சிற்குச் சொந்தமாக நான்கு எரிகூடங்கள் உண்டு. ஒவ்வொரு எரி கூடமும் பதினைந்து பிணப்போறணைகளைக் கொண்டுள்ளன என்று நூலாசிரியர் தகவல் தருகின்றார். மொத்தமாகவுள்ள இந்த அறுபது பிணைப் போறணைகளிலும் 3000 பிணங்களும் இருபது நிமிடத்தில் சாம்பலாகிவிடும் என்றும் அவர் கணக்குக் காட்டுகின்றார். அந்த மனிதச் சாம்பல் லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு அங்கிருந்து ஒரு மைல் தொலைவிலுள்ள 'விஸ்ருலா' (Vistula) ஆற்றில் பறிக்கப்படும். அத்துடன் அந்த அப்பாவி யூதர்களின் துயரமுடிவு எவருக்கும் தெரியாமல் கரைந்து நீரோடு நீராகிவிடும்.

"எரிகூடங்களின் அனைத்துப் போறணைகளும் தொடர்ச்சியாக இரவும் பகலும் புகையையும், நெருப்பையும் கக்கிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்" என்று தெடர்ந்து எழுதுகின்றார். 'அவுஸ்விச்'சில் செத்த 40 இலட்சம் யூதர்களும் இப்படித்தான் புகையாகிப் போனார்கள்.

நச்சுவாயுக் கூடத்திற்குள் பிணங்கள் எவ்வாறு கிடக்கும் என்பதையும் – அதற்குக் காரணம் என்ன என்பதையும் விஞ்ஞானக் காரணங்களுடன் நூலாசிரியர் விளக்குகின்றார்.

"நச்சுவாயு மண்டபத்தில் உடல்கள் அங்கும் இங்கும் சிதறிக்கிடப்பதற்குப் பதிலாக குவியல் குவியலாகக் கிடக்கும். இதற்கு ஒரு காரணம் உண்டு. நச்சு வாயு முதலில் தரைப்பகுதியை நிறைக்கின்றது. பின்னர் மெதுமெதுவாக கூரைநோக்கி மேலெழுகின்றது. இதனால் மூச்சுத் திணறலில் இருந்து தப்பிக்க ஒருவர் மேல் ஒருவர் ஏறி தங்களைப் பாதுகாக்க முயல்வர். எனினும் ஒருசில நிமிடங்களில் கூரை வரை நச்சுவாயு உயர்ந்து மண்டபத்தை நிறைத்து அனைவரையும் கொன்றுவிடும். பிணக்குவியலின் கீழே வயோதிபர்களும், குழந்தைகளும், பெண்களும், சிறுவர்களும் கிடந்தனர். தேக ஆரோக்கியமுள்ளவர்கள் குவியலின் மேலே கிடந்தனர். ஆனால் எல்லோரும் செத்துக் கிடந்தனர். அதேவேளை ஆளை ஆள் பிடித்திழுத்து மேலேற முற்பட்டதால் பல பிணங்கள் என்றோடொன்று பின்னுப்பட்டுக் கிடந்தன" என்று இவர் வேதனையுடன் குறிப்பிடுகின்றார்.

'அவுஸ்விச்'சின் அதி உயர் நிகழ்ச்சி இப்படித்தான் நடந்தேறும். பிணங்கள் எரிகூடத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதற்கு முன்னர் அவற்றிலுள்ள ஆபரணங்கள் அகற்றப்படும். தங்கப்பற்கள் கழற்றப்படும். இவையெல்லாம் நாஜிகளின் சொந்தமாக மாறும். அதேவேளை பிணங்கள் அனைத்தினதும் – தலைமுடிகளும் மழிக்கப்படும். மலைபோல் குவியும் இந்த மனித மயிர்கள் எதற்கு? நூலாசிரியர் அதற்கு விடை தருகிறார். "தாமதித்து வெடிக்கும் விமானக் குண்டுகளுக்கான பொறிமுறைக்கு மனித மயிர்க் கற்றைகள் பயன்படுத்தப்பட்டன."



பிணங்களை அகற்றும் வேலையையும் யூதக் கைதிகள்தான் செய்வார்கள். இதற்கென்று விசேடமாக திடகாத்திரமான ஆண்கள் தேர்வு செய்யப்படுவார்கள். இவர்களின் வேலை காரணமாக மது, சிகரட் போன்ற சில விசேட சலுகைகளை இவர்களும் பெறுவர். இவர்களை "சொண்டகொமாண்டோஸ்" என நாஜிகள் அழைப்பர். இந்த சொண்டகொமாண்டோக்களின் ஆயுள் ஆக 4 மாதங்கள் மட்டும்தான். அதன்பின் இவர்கள் அழிக்கப்படுவர். இவர்களது இடத்திற்கு புதிய ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 'அவுஸ்விச்' இரகசியத்தின் அடிமுடியை சொண்டகொமாண்டோக்கள் விலாவாரியாக அறிந்திருந்தார்கள். இந்த இரகசியம் வெளியே செல்வதை எந்த நாஜி விரும்புவான். சொண்டகொமாண்டோக்களின் 4 மாத ஆயுளுக்கு இதுதான் காரணம். பிணங்களை அகற்றும் வேலைகளைச் செய்யும்போது, சிலவேளைகளில் தங்களது பிள்ளைகள் அல்லது பெற்றோர், மனைவியர் அந்தப் பிணக் குவியல்களுக்குள் கிடக்கக் காணும் அவலத்தையும் சில சொண்டகொமாண்டோக்கள் அனுபவித்துள்ளனர்.

அவுஸ்விச்சின் அவலத்தை வெளியே கொண்டுவருவதற்காக நூலாசிரியர் பல்வேறு வகை மாதிரிகளை நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஓர்நாள் ஓர் சொண்டகொமாண்டோ மூச்சிரைக்க ஓடிவந்து என்னிடம் சொன்னான், ஓர் சோகக்குண்டை நூலாசிரியர் இவ்விதம் தூக்கிப் போடுகிறார்.... 'டொக்ரர், நச்சுக்கூடத்தின் பிணக் குவியலுக்குள் ஒரு இளம் பெண் உயிருடன் உள்ளாள். ஓடிவாருங்கள்' என்றான். நானும் ஓடிச் சென்று பார்த்தேன். பதினாறு வயது மதிக்கத்தக்க அழகான இளம் பெண் அரை மயக்கத்தில் கிடந்தாள். அவளை வெளியே தூக்கி ஓரிடத்தில் கிடத்தி சிகிச்சை செய்தேன். மயக்கம் தெளிந்ததும் எழுந்து ஓட முயன்றாள். எங்களை நாஜிகள் என்று நினைத்துப் பீதியடைந்தாள். அவளை ஒருவாறு ஆசுவாசப்படுத்தி சில வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கும்போது ஜேர்மன் அதிகாரி ஒருவன் அங்கு வந்து நடப்பதைப் பார்த்துவிட்டான். நடந்ததை நான் விளக்கினேன். அந்த அபலைப் பெண் சந்தித்த துயர் அனுபவத்தைச் சுட்டிக்காட்டி அவளுக்கு உயிர்வாழ சந்தர்ப்பம் வழங்கும்படி நான் கெஞ்சினேன். இறுகிய முகத்துடன் காணப்பட்டான் அந்த ஜேர்மன் அதிகாரி. அப்பெண்ணை சில அடிகள் இழுத்துச் சென்று, தனது றிவோல்வரை எடுத்து, தலையில் சுட்டு, அவளை சாகடித்தான்" என்று எழுதுகிறார்.

(அடுத்த இதழில் முடியும்)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகத்தில் இருந்து ஒரு மடல்

கொட்டப்பட்டு ஏதிலிகள்
முகாம் எதிரில்,
கொட்டப்பட்டு ,
சுப்பிரமணியபுரம்,
திருச்சி.

தமிழீழ விடுதலை உழைப்பாளர்களுக்கு,

பேரன்புக்குரிய தமிழீழ விடுதலை உழைப்பாளர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த வணக்கமும், வாழ்த்துக்களும்.

அய்யா, தமிழீழம் விடுதலை அடைந்தே ஆகவேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து "உண்மையான" தமிழன் எவனுக்கும் இருக்க முடியாது. உலகெங்கும் வாழும் (தாய்த் தமிழகம் உட்பட) அத்தனை தமிழர்களின் விடுதலைக்கும் ஒரே பதில் தமிழீழத்தின் விடுதலைதான். (தமிழீழத்தின் விடுதலையில் தான் தமிழினத்தின் விடுதலையே தங்கியுள்ளது" – பாவலரேறு பெருஞ்சித்திரனார்). ஆனால் இங்குதான் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி உண்டு. அஃது யாதெனில் இலங்கையின் தென்பகுதியில் தேயிலைத் தோட்டங்களில் நமது தமிழகத்திலிருந்து வெள்ளைக்காரன் ஆட்சியில் பிழைக்கச் சென்ற கூலித் தொழிலாளர் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு அடிமை இனமாகவே அங்கு வாழ்ந்து கொண்டிருப்பது கண்கூடு. அவர்களைப் பற்றி தமிழகத் தலைவர்களோ அல்லது தமிழகத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற இந்திய அரசோ கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

இலங்கையின் மலைத்தோட்டங்களில் வாழ்கின்ற தமிழர்களுக்கு – அவர்கள் தாய்த் தமிழகத்தில் இருந்து சென்று சுமார் 200 ஆண்டுகளாகியும் கூட சொந்தமான வீடு இல்லை. அடிப்படைக் கல்வியறிவு இன்னும் பாதிப்பேருக்குக்கூட இல்லை. அவர்களின் பிள்ளைகள் நாடெங்கிலும் கூலிக ளாக இருக்கின்றார்கள். ஆடு மாடுகளைப் போல் அடுக்கு (லைன்) வீடுகளில் குடியிருக்கின்றார்கள். அந்தச் சின்ன வீடுகளில் தாய், தந்தை, மகன், மகள், மகனின் மனைவி என அத்தனை பேர்களும் குடியிருக்கவேண்டும். அதுவும் தோட்டங்களில் வேலை செய்கின்ற காலங்கள் வரைதான் அந்த வீடும் கூட. அதற்குப் பிறகு அவர்கள் எங்கு செல்வதென்றே தெரியாது. சிங்களவர்களின் அச்சுறுத்தல் வேறு அடிக்கடி எழும்.

நிலைமைகள் இவ் விதமாக இருக்கின்ற போது தமிழீழம் விடுதலை அடைந்தால் (மீண்டும் கூறுகின் றேன், கண்டிப்பாக தமிழீழம் விடுதலை அடைந்தே ஆகவேண்டும். இது காலத்தின் கட்டாயம்) அல்லது அடையும் நேரம் நெருங்கிவிட்டது என்றால், விடுதலைக்கான நாள் குறித்தாகிவிட்டது என்ற ஒரு நிலை தோன்றும்போது, மலைத்தோட்டத் தமிழர்களின் நிலை என்னவாகும்? அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். "மலைத்தோட்டத் தமிழர்கள் அனைவரும் தமிழீழத்திற்கு வந்துவிட வேண்டியதுதானே" என்று சிலர் வாதாடக்கூடும். இது அறிவுடைமையாகாது.

ஏனென்றால் தமிழீழம் ஒரு சின்னஞ்சிறிய நாடு (சுமார் 7500 சதுரமைல்கள் என எண்ணுகின் றேன்) எனவே இது சாத்தியப்படாது. அப்படியே சாத்தியப்பட்டாலும், சுமார் பதினைந்து இலட்சம் மலைத் தமிழர்களுக்கும் தொழில் ஏது? மேலும் காடாய்க் கிடந்த நாட்டை வளம் கொழிக்கும் நாடாக்கிவிட்டு, அந்நாட்டில் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்வதுதான் சிறப்பானது.

எனவே தமிழீழ விடுதலைக்காக உழைக்கின்ற அதேவேளை, அங்கு வாழ்கின்ற மலைத் தோட்டத் தமிழர்களைப் பற்றியும் சிந்திக்கவேண்டியது தமிழீழத்திற்காக, தமிழர்களுக்காக போராடுகின்றவர் களின் தலையாய கடமையாகும். நான் சொல்ல வந்தது என்னவென்றால், தமிழீழ விடுதலைக்காக உடன்பாடு உருவாகும் போதே மலைத் தோட்டத் தமிழர்களின் உரிமைகளும் நிலைநாட்டப்படவேண்டும். இல்லையேல் இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களில் ஒருபகுதியினர் தொடர்ந்து அடிமையாகவே வாழக்கூடிய ஒரு கேடுகெட்ட நிலை தொடரும் என்பதை மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீ.கதிரவன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திருகோணமலை மாவட்டத்தை

# புற்று நோய்போல் அரித்து வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்


"இதுவரை காலமும் திருமலை மாவட்டத்தின் வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய எல்லைப் பகுதிகளில் நடைபெற்று வந்த திட்டமிட்ட குடியேற்றம் புற்றுநோய் பரவுவது போல திருமலை மாவட்டத்தின் இதயப்பகுதியான திருமலை நகருக்கும் பரவிவிட்டது. திருகோணமலையின் பிரசித்தி பெற்ற இந்துக் கோயில்களுக்கும், அமைப்புகளுக்கும் சொந்தமான நிலங்கள், மயானங்கள் எனப் பல காணிகள் சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. மணிக்கூட்டுக் கோபுரத்திற்கும் பிரட்றிக் கோட்டைக்கும் இடையேயுள்ள காளி கோவிலில் தீர்த்த உற்சவத்திற்கு காலங்காலமாக உபயோகிக்கப்பட்டு வந்த கடற்கரை நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையின் சனீஸ்வரன் கோவில், கிருஷ்ணர் கோவில், சிறுதுறையூற்றுப் பிள்ளையார் கோவில், தொடுவாய்ப் பிள்ளையார் கோவில், முத்துக்குமாரசாமி கோவில் இன்னும் பல கோவில்களுக்குச் சொந்தமான காணிகளில் காலி, மாத்தறை, களுத்துறை, பாணந்துறை, குருநாகல் ஆகிய இடங்களில் இருந்து அழைத்துவரப்பட்டோர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக கோவில் நிர்வாகங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட தமது காணிகள் மீட்பது தொடர்பாக உரிய இடங்களில் புகார் செய்திருந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

திருமலை நகரின் துறை வாயிலான மட்டிக்களியில் சண்முகர் நிதியத்திற்குச் சொந்தமான பதினொரு ஏக்கர் நிலம் திடீர் திடீர் என ஒவ்வொரு நாளும் அமைக்கப்படும் குடிசைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

திருகோணமலை நகரின் வடகரை வீதியில் முஸ்லீம் மக்களுக்குச் சொந்தமான மையவாடியின் பெரும்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. இவ் வாக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி பள்ளிவாசல் நிர்வாகத்திடம் மையவாடியை ஒப்படைக்கும்படி நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பல வருடங்களாகியும் இவ்வுத்தரவு நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இதை அமுல்படுத்தவில்லை. இதேபோன்று திருகோணமலை நகரின் பிரதான இந்து மயானத்தின் ஒரு பகுதி ஆக்கிரமிப்பாளர்களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையின் லவ்லேன் என்னும் இடத்தில் வசித்து வந்த 34 முஸ்லிம் குடும்பங்களும், 16 தமிழ்க் குடும்பங்களும் 90 களில் வெளியேற்றப்பட்டுவிட்டனர். இதில் மிகவும் பரிதாபப்படவேண்டிய விடயம் என்ன வெனில் தமது சொந்த வீடுகளுக்கு முன்பாகவுள்ள அரசாங்கக் களஞ்சியம் ஒன்றில் அகதிகளாக அவர்கள் வாழ்ந்து வருவதே.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருகோணமலை லவ்லேன் பகுதியில் இலங்கை மின்சார சபையினால் அவர்களின் பாவனைக்காக கோரப்பட்ட நிலத்தில் அவசரம் அவசரமாக நூற்றுக்குமேற்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு அவர்களில் பலருக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கபறண– திருகோணமலை நெடுஞ்சாலையின் இருபுறமும் வனத்திணைக்களத்திற்கு சொந்தமான பல ஏக்கர் காணிகள், காடுகள் அழிக்கப்பட்டு கபறணையில் இருந்து திருகோணமலை நாலாம் கட்டைவரை திட்டமிட்ட முறையில் குடியேற்றப்பட்டுள்ளன. இதைவிட சீனன்குடாவில் இருந்து திருகோணமலைப் புகையிரத நிலையம் வரையுள்ள புயிைரதப் பதை இரு மருங்கிலும் உள்ள புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான நிலங்கள் அபகரிக்கப்பட்டு குடியேற்றம் நடைபெற்றுள்ளது. இதற்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக இப்பகுதிகளுக்கு மின்சாரம், நீர் வசதிகள் அரசால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இன்று திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் மிகவும் வேதனையுடன் இருக்கின்றனர். லிங்கநகரில் இராணுவப் பயிற்சி முகாம் அமைந்ததை அடுத்து அப்பகுதி வாழ் மக்களின் மனதில் அச்சத்தையும் பீதியையும் தோற்றுவித்துள்ளனர். லிங்கநகர் இராணுவப் பயிற்சி முகாம் அமைக்கப்பட்ட நடவடிக்கையானது திட்டமிட்ட நோக்கில் அக்கிராமத்தில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற ஏழைத் தமிழ் மக்களை வெளியேற்றும் நடவடிக்கையாகும். அவ் ஏழை மக்கள் படையினரினால் அச்சுறுத்தப்படுகின்றனர். 40 குடும்பங்கள் இதுவரை துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 300 குடும்பங்கள் மண் இழந்தவர்களாக, வீடு இழந்தவர்களாக நடுத்தெருவில் நிற்கும் நிலை உருவாகியுள்ளது.

இவ் அநீதியான செயல் தொடர்பாக தமிழ்க்குழுப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் குரலெழுப்பியும் அம் மக்களை வெளியேற்றுவதில் அரசு தீவிர முனைப்புக் கொண்டு செயற்படுகின்றது.

இம் மக்களை வெளியேற்றுவது தான் உங்கள் அரசின் கொள்கை என்றால், தமிழ்ப் பேசுகின்ற மக்களின் தாயக மண்ணை கபளீகரம் செய்வது தான் உங்கள் திட்டமென்றால் தமிழ் பேசும் மக்கள் உங்களிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?

புனித பிரதேசக் குடியேற்றங்களாக தமிழ், முஸ்லிம் தேர்தல் தொகுதியாக இருந்த மூதூரின் ஒரு பகுதி சேருவாவில தொகுதியென 1976–ம் ஆண்டு ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்பட்டது.

திருமலை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தின் மூன்று பகுதியினை இத்தொகுதி ஆக்கிரமித்துக் கொண்டது. இன்றுவரை இச் சேருவாவில தொகுதி புனித நகரத் திட்டத்தின் மூலம் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இதேபோல திரியாய புனித நகரத்திட்டம் என்பவற்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைகளைத் தமிழ், முஸ்லிம் மக்கள் இழந்து நிற்கின்றனர் எனவும் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். ★

## மிகப் பழைய மொழி தமிழ் மொழியா?

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்கள். உலகின் மிகப் பழைய மொழிகளுள்ளே தமிழும் ஒன்று என அவர்கள் பெருமையுடன் கூறுவர். "சிவபெருமானால் அகத்திய முனிவருக்கு அருளப்பட்ட மொழி தமிழ்" என்ற நம்பிக்கை அவர்களிடம் உண்டு.

ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்து – நிறைமேவும்
இலக்கணம் செய்து கொடுத்தான்

எனத் தமிழ்த்தாய் கூறுவதாகப் பாரதியார் பாடியுள்ளார்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" என்ற தொடர் தமிழினத்தின் பழமையைச் சுட்டுகின்றது.

தமிழர்கள் தம் மொழிப்பற்றினாலும் இனப்பற்றினாலுமே தம்மை மிகப் பழையவர்கள் எனக் கூறுகின்றார்களா? அல்லது உண்மையின் அடிப்படையிலேதான் தங்களைப்பற்றிப் பெருமைப்படுகின்றார்களா? மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா 1928–ம் ஆண்டில் நடைபெற்றது. சென்னை மாகாணத்தின் தற்காலிகத் தேசாதிபதியாகக் கடமையாற்றிய சேர்.நோமன் எட்வேட் மார்ஷ் பாங்கஸ் என்ற ஆங்கிலேயர் தலைமை தாங்கினார். தமிழ் தெரிந்த அவர் தமிழிலேயே தன் தலைமையுரையை நிகழ்த்தினார். தமிழ்த் தாத்தா உ.வே . சாமிநாத ஐயர் தலைமையில் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெற்றது.

வரவேற்புரை நிகழ்த்திய மகாவித்துவான் மு. இராகவையங்கர் ஒரு கதையைச் சொன்னார்.

"ஓர் அரசன் இயற்கையான மொழி எது என்பதை அறிய ஆசைப்பட்டு, பேசத்தெரியாத குழந்தைகளை ஓர் இடத்தில் அடைத்துவைத்தான். தனித்தனியே அவர்களுக்கு உணவு கொடுத்து வந்தான். ஒருநாள் பல உணவுப் பண்டங்களை ஓர் இடத்தில் வைத்து, எல்லாக் குழந்தைகளையும் அங்கே கொண்டு வந்துவிட்டான். அப்போது குழந்தைகள் எல்லாம் புகா, புகா என்ற ஒலியை எழுப்பிக் கொண்டு ஓடி வந்தார்கள். உணவைக் குறிக்கப் "புகா" என்ற ஒலியை அவர்கள் பயன்படுத்தியதைக் கண்டு அந்தச் சொல்லே இயல்பாக உணவைக் குறிக்கும் சொல் என்று உணர்ந்தான்" என்றுகூறி தமிழில் சங்க நூல்களில் புகா என்பது உணவைக் குறிப்பதற்கு வரும் சொல் என்பதைச் சுட்டிக்காட்டி புஜ், பேக்கரி என்பனவெல்லாம் அதிலிருந்து பிறந்திருக்க வேண்டும் என முடித்தார் இராகவையங்கர். மகா வித்துவான் மு. இராகவையங்கர் சேது சமஸ்தானத்து அவைக் களப் புலவராக இருந்தவர்; பாரியின் வரலாற்றை இனிய வெண்பாக்களால் "பாரிகதை" என்ற காப்பியமாகப் பாடியவர்; சாகுந்தலத்தை மொழிபெயர்த்தவர்; திருவடிமலை, புவி எழுபது, இராச இராசேஸ்வாசேதுபதியின் மேல் "நாணிக்கண் புதைத்தல்" என்ற துறையில் 400 பாடல்கள் கொண்ட துறைக் கோவை முதலியவற்றைப் பாடியவர்; மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடான 'செந்தமிழ்' மாத இதழின் ஆசிரியராக இருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதியவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் புலவராக இருந்தபோது 'தமிழ்வரலாறு முதற்பகுதி' யை எழுதிப் பலரின் பாராட்டைப் பெற்றவர்; சமஸ்கிருத வித்துவான்கள் நிறைந்த சபை ஒன்றிலே காளிதாஸனின் கவிதையைப் பற்றிப் பேசி 'பாஷாகவிசேகரர்' என்ற பட்டத்தையும் பெற்றவர். இந்த விபரங்களை கி.வா. ஜகந்நாதன் தன் கட்டுரை ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார் இத்தகைய சிறப்புக்களையுடைய மகாவித்துவான் மு. இராகவையங்கர் தமிழைத் துறைபோகக் கற்ற அறிஞர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் ஆற்றிய உரை, தமிழ் மொழி, இயல்பாக அமைந்த மிகப்பழைய மொழி என்பதை உறுதிப்படுத்துகின்றது.

இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சதாரோ ஹரப்பா நாகரிகம் திராவிட நாகரிகமே என்பதைப் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் உறுதிசெய்துள்ளதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும்.

-சிற்பி-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் அறிமுகம்

## "Broken Promises"
## 'மீறப்பட்ட வாக்குறுதிகள்'

திரு. மு திருநாவுக்கரசு அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் இந் நூல் ஒரு சிறந்த தொகுப்பாய்வாக அமைகிறது. சிங்கள அடக்கு முறையாளர்களினால் கேவலமான முறையில் பயன்படுத்தப்படும் பௌத்த சிங்கள மேலாதிக்க எண்ணப்பாடான மகாவம்ச ஜதீகத்தினை இந் நூல் தன் முகவுரையில் விளக்குகிறது. அத்துடன் இந்தப் பிற்போக்குத்தனமான ஜதீகத்தை சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேறூன்ற வைத்த சிங்கள புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் ஆகியோரின் கபடத்தனத்தினையும் இவர்களின் முன்னுக்கு பின் முரணான சுயநலத்தனமான நிலைப்பாடுகளையும் இந் நூல் துள்ளியமாக வெளிப்படுத்துகின்றது.

மேற்குலகில் உருவாகிய தேசியவாதம் எனும் நவீன எண்ணக் கரு வரலாற்றில் மிக அண்மைக்காலத்தையது. இந்த அடிப்படையில் நவீன காலத்தில் தமிழ், சிங்கள மக்கள் இருவேறு தேசியங்களாகவே இருந்து வந்துள்ளார்கள் என்பதை ஐயம் திறிபுற இந் நூல் நிறுவுகின்றது. இந் நூல் மு.திருநாவுக்கரசு அவர்கள் வரலாற்று ரீதியாக சிங்கள அரசியல் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் அதை அவர்கள் எவ்வாறு மீறினார்கள் என்பதையும் காலத்திற்குக் காலம் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களினுடாகவே அற்புதமாக வெளிப்படுத்துகின்றார்.

இடதுசாரி அரசியல் வாதிகளின் தீவிரமான சிங்கள பௌத்த வெறிக்கு எதிரான கருத்துக்களை சுட்டிக்காட்டும் இந் நூல்





## "A STRUGGLE FOR JUSTICE"
## 'நீதிக்கான ஒரு போராட்டம்'

தமிழீழ மக்களின் நீதிக்கான போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் வகையில் சிறீலங்கா அரசினாலும் ஏனைய மேலாதிக்க சக்திகளாலும் முடுக்கி விடப்பட்டிருக்கும் பொய்ப்பிரச்சாரங்களுக்கு சவாலாக "நீதிக்கான போராட்டம்" எனும் இச் சிறு ஆவணம் ஆங்கிலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தின் நியாயத்தை இவ் ஆவணம் வரலாற்று ரீதியாக விளக்குகின்றது. சிங்கள அரசு அடக்குமுறைகளின் விளைவாக, தவிர்க்கமுடியாத நிலையிலேயே – ஏனைய அமைதிவழிப் போராட்டங்கள் சிங்கள வன்முறையினால் ஒடுக்கப்பட்டதன் பின் ஆரம்பமானதே ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டமாகும். 1977ம் ஆண்டு தமிழர்களால் தேர்தலில் ஜனநாயகரீதியில் வெளிப்படுத்தப்பட்ட அரசியல் விடுதலைக்கும், அரசுரிமைக்குமான கோரிக்கையை முன்வைத்தே விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் நடைபெறுகின்றது என்பதை இவ் ஆவணம் விளக்குகிறது. அத்துடன் தமிழர்கள் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்திய தமது இந்த அரசியல் அபிலாசையினை சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக அடக்கி வந்துள்ளதையும் இவ் ஆவணம் சுட்டிக்காட்டுகின்றது.

சர்வதேச சட்டங்களில் முழுமையான சட்டபூர்வமான இவ் ஆயுதப் போராட்டம் சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தினை வேண்டி நிற்பதையும் இவ் ஆவணம் குறிப்பிடுகின்றது. அத்துடன் இப்போராட்டத்தினை முன்னெடுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு முழுமையான தேசிய விடுதலை






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் இவர்கள் எவ்வாறு தமது வாக்குறுதிகளிருந்து நழுவி இன வாதத்திற்குத் துணைபோனார்கள் என்பதையும் குறிப்பாக அம்பலப் படுத்துகிறது.

அத்துடன் பண்டா – செல்வா ஒப்பந்த வாக்குறுதிகளும் அவை மீறப்பட்ட விதமும் டட்லி – செல்வா ஒப்பந்த வாக்குறுதிகளும் அவை மீறப்பட்ட விதமும் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இறுதி யாக இந்தியா – இலங்கை ஒப்பந்த மும் வாக்குறுதிகளும் அவற்றை மீற ஜெயவர்த்தன தலைமையிலான சிங்கள அரசு எடுத்த கபடத்தன மான முயற்சிகளையும் ஆதாரங்க ளுடன் "Broken Promises" முன் வைக்கின்றது.

தெளிவான வரலாற்று ஆதாரங் களுடன் சிறீலங்கா ஆட்சியாளர்க ளின் வாக்குறுதிகளை மீறும் கீழ்த் தனமான நடத்தைகளை அம்பலப் படுத்தும் இத்தொகுப்பு நூல் வர லாற்றின் ஒரு முக்கிய காலகட் டத்தில் வெளிவருகின்றது. ★

இயக்கமாக பரிணாமம் பெற்றிருப்ப தையும் அதன் பல்வேறு பகுதிகளும் வெகுசன ஆதரவுடன் பூரண வளர்ச்சி அடைந்திருப்பதையும் ஆவணம் விளக்குகின்றது. பல்லாயிரக்கணக் கான போராளிகளைக் கொண்ட இரா ணுவ கட்டமைப்பு, அரசியல் பிரிவு, உள்ளூர் நிர்வாக அலகுகள், சட்டம் ஒழுங்குப் பகுதி என விடுதலைப் புலிகள் அமைப்பு பரிணாமம் பெற்றி ருக்கின்றது. அத்துடன் ஒரு விரி வடைந்த சர்வதேச தொடர்பகங்க ளையும் உலகின் பல தலைநகரங்க ளில் கொண்டிருக்கிறது.

இறுதியாக, சிறீலங்கா அரசின் சூழ்ச்சித் திட்டங்களையும் பொய்ப் பிரச்சாரங்களையும் விளக்கும் ஆவ ணம் இச்சூழ்ச்சிகளில் வீழ்ந்துவிடா மல் உண்மை நிலையினை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு நியாயமான எமது போராட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என உலக சமூகத்தினைக் கேட்டுக் கொள்கின்றது. ★

# உயர் தியாகத்தால் எழுந்து நிற்கும் எங்கள் தேசம்

தாய்நிலத்தை மறக்கலாமா
தாய்நிலத்தை மறக்கலாமா
ஜோடி சேர்ந்தாடு ஈழமண்ணைப் போற்றிப் பாடியே
பாடிக் கூத்தாடு போர்நிலத்து வேங்கையோடுதான்

எதற்கு நாடோடியாக நாம் நாளும் ஓடணும்
ஜோடி சேர்ந்தாடு ஈழமண்ணைப் போற்றிப் பாடியே

மண்ணில் என்றும் அடிமையான நாட்கள் போகவே
எங்கள் மண்ணில் என்றும் அடிமையான நாட்கள் போகவே
ஏங்கி ஏங்கி செத்த நாட்கள் தொலைந்து போகவே
நாளெல்லாம் ஏங்கி ஏங்கி செத்த நாட்கள் தொலைந்து போகவே
எம்மண்ணில் பொங்கி எழுந்த பூவும் பிஞ்சும் சன்னதம் கொள்ளும்

பண்புடைய தலைவனுண்டு வழிநடத்தவே
உயர் பண்புடைய தலைவனுண்டு வழிநடத்தவே
படைநடத்தி பகைவிரட்டும் புலிகள் சேனையே
போரென்றால் படைநடத்தி பகைவிரட்டும் புலிகள் சேனையே
உயர் தியாகத்தால் எழுந்து நிற்கும் எங்கள் தேசமே

கரைகள் நோக்கி மோதும் அலைகள் இடம்பெயர்ந்ததோ
தேடிக் கரைகள் நோக்கி மோதும் அலைகள் இடம்பெயர்ந்ததோ
நிமிர்ந்த நெடும் பனைகள் என்ன இடம்பெயர்ந்ததோ
எம்மண்ணில் நிமிர்ந்த நெடும் பனைகள் என்ன இடம்பெயர்ந்ததோ
நாமட்டும் கானல் நீரைத் தேடி ஓடி தாகம் தணியுமோ

வாழ்விருக்க வளமிருக்க நாங்கள் ஓடினோம்
ஒரு வாழ்விருக்க வளமிருக்க நாங்கள் ஓடினோம்
காட்டுக்குள்ளே சுகமிழந்து நாளும் ஓடினோம்
கட்டிடக் காட்டுக்குள்ளே சுகமிழந்து நாளும் ஓடினோம்
வாழ்வினில் இனிமை எல்லாம் தொலைத்து இங்கு அகதியாகினோம்

கப்டன் கஜனால் எழுதப்பட்ட இந்தப் பாடல் "ஜீவகானங்கள்" என்னும் இசைத்தட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

